
கல்கி
KALKI
21.11.1965
35 காசு



வாய்விட்டுக் கூறி மறுக்க வேண்டிய சமயத்தில் மௌனம் சாதிக்கும் பாபத்தைப் புரிவோர் கோழைகளாகிறார்கள். ●


— ஆப்ரஹாம் லிங்கன்


பொருளடக்கம்

விசுவாவசு கார்த்திகை 6 ❋ நவம்பர் 21

நெருக்கடி நிலைமையின்... — 3
கண்ணியக்குறைவான பிரசாரம் — 5
சரித்திரம் சாற்றும் உண்மை — 5
ராஜாஜியின் கருத்துக்கள் — 6
பூச்சியும் கத்தியும் — 10
வெற்றித் திருநகர் — 14
சேவைக்கு ஒரு சகோதரி — 23
கந்தன் கருணை — 30
ஜீவகீதம் — 34
பல்சுவைப் பக்கங்கள் — 41
சாதல் இல்லையேல் காதல் — 45
புயலில் பயணம் — 51
காலச் சக்கரம் — 65
படித்துப் பாருங்கள் — 72
புதுக் குழந்தை — 75
வட்டமேஜை — 80

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


நல்லது, நந்தரே! நான் பலமான கால்களின் மேல் நிற்கிறேன்
லஞ்ச ஊழல்
பெர்மிட்
லைசென்ஸ்
கோட்டா


பட்டினி கிடப்பது எப்படி?
PK



மலர் 25 ★ இதழ் 17

நெருக்கடி நிலைமையின் அவசரத் தேவை!

ராஜாஜி

சர்க்காரின் தங்கப் பத்திரத்துக்குப் போதிய வரவேற்பு இல்லாமற் போவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

'1980-ல் தங்கத்தைத் திருப்பித் தந்து விடுவோம்: 14 காரட்டுக்கு மேல் நகைகளுக்கு உபயோகப்படுத்தக் கூடாது என்கிற மொரார்ஜி சட்டத்தை 1980-ல் திருப்பித் தரும் தங்கத்தின் விஷயத்தில் அமுல் செய்ய மாட்டோம்' என்றெல்லாம் அரசாங்கம் வாக்குறுதி தந்திருக்கிறது. ஆனாலும் மக்கள் அரசாங்கத்தின் வாக்குறுதியிலும், நிதி மந்திரிகளின் வாக்குறுதிகளிலும் நம்பிக்கை இழந்து விட்டனர். சர்க்காரின் கையில் தங்கம் சேர்ந்துவிட்டால் அது திரும்பி வராது என்றே மக்கள் நினைக்கிறார்கள். பார்லிமெண்டில் காங்கிரஸ் பெற்றுள்ள மகத்தான பலத்தைக் கொண்டு எந்த வாக்குறுதியும் சட்டபூர்வமான கட்டுப்பாடு அல்ல என்ற நிலையை உண்டாக்கி, கொடுத்த வாக்கை அழித்துவிட முடியும்.

அரசியல் சாஸனம் நிறைவேற்றப்பட்டபோது 'எஸ்டேட்' என்கிற பதம் ஜமீன்தார்களின் நிலத்தைத்தான் குறிக்கும் என்றும், ரயத்துவாரி முதலிய இதர நில உடைமைகளை 'எஸ்டேட்'டாகக் கருதிச் சர்க்கார் ஆர்ஜிதம் செய்யாது என்றும் வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் பிற்பாடு இந்த வாக்குறுதிக்கு நேர்மாறாக சாஸனத்துக்குப் பதினேழாவது மாற்றம் நிறைவேற்றப்பட்டது. இதுபோன்ற உதாரணத்தைக் கண்டபின் சர்க்காரின் வாக்குறுதியை மக்கள் நம்ப வேண்டும் என்று ஆட்சியாளர்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்? தனி மனிதர்களும் கம்பெனிகளும் எவ்விதத்தில் கடன் பெறுகிறார்களோ, அதேமுறையில் நடந்துகொண்டால் தான் சர்க்காரும் மக்களிடமிருந்து கடன் பெற முடியும். கொடுத்த வாக்கை நேர்மையாக நிறைவேற்றி வைப்பதன் மூலமே நாகரிக சமுதாய வாழ்வை நிறுவ முடியும். தசரத சக்கரவர்த்தியின் வாக்குறுதிகளை நிறைவேற்றி வைத்த ராமசந்திரனின் சரித்திரம் வெறும் கட்டுக்கதை அல்ல. சத்திய வாக்கின் புனிதத் தன்மையே மனிதர்கள் ஒன்றுகூடி ஒத்துழைத்து முன்னேறுவதற்கு ஆணி வேர்.

பகைவர்களுடன் போராடுவதும், அவர்களது தந்திர உபாயங்களுக்கு ஈடாகப் பாதுகாப்புத் துறையில் உஷாராக இருப்பதும் போற்றுதற்குரிய விஷயங்கள். ஆயினும், அதே சமயத்தில் உள்நாட்டு நிலவரத்தையும் கவனித்தேயாகவேண்டும். இப்போதுள்ள வரிச்சுமை போதாதென்று கூடுதலாக வரிகள் விதிப்பது உள்நாட்டு நிலையை மிகவும் பாதிக்கும். உலகத்திலேயே மிகவும் அதிகமான வரிச் சுமையைத் தாங்குவது இந்தியாதான் என்பதை ஸ்ரீ பால்கிவாலா (நூறு பக்கங்களுக்கும் குறைவான ஒரு சிறிய நூலில்) தெளிவாக விளக்கியிருக்கிறார். வரிச் சட்டங்களின் நிலையின்மை

தமிழ்த்திரு நாடுதன்னைப்
பெற்ற
தாயென்று கும்பிடடி —
பாப்பா
—பாரதியார்

யையும், குழப்பமான சிந்தனைகளையும், சிக்கல்களையும், தீய விளைவுகளையும் எடுத்துக் காட்டியுள்ள ஸ்ரீ பால்கிவாலா, தற்போதுள்ள வரி விதிப்பு முறையின் கீழ் நேர்மையும் உழைப்பும் பெறுகிற பலனை விட நேர்மையின்மையே சிறந்த நற்பலனைப் பெறுகிறது என்று கூறுகிறார். அதிக வருமானங்களுக்கு அதிகமான சதவிகிதம் வரி விதிப்பது வழக்கம். இதுவும்கூட இந்தியாவில் உச்ச கட்டத்தை அடைந்து விட்டது; இதனால் தொழில் ஊக்கமும், உழைப்பும், திறமையும் குன்றி விட்டன; வரியை எப்படி ஏய்ப்பது என்கிற சறுக்குப் பாதையில் செல்வதிலேயே நாட்டின் முயற்சித் திறன் வீணாகிறது; தேசத்தின் செல்வம் வளருவதற்கேற்ற முறையில் மக்களின் முயற்சி ஆக்க ரீதியில் செயல்படுவதற்கு எவ்வித உற்சாகமும் அளிக்கப்படவில்லை — என்றெல்லாம் ஸ்ரீ பால்கிவாலா கூறியிருக்கிறார். வரிகள் எந்த அளவுக்கு அதிகமாகின்றனவோ அந்த அளவுக்குச் சமீப காலமாக மக்களின் ஊக்கமும், நம்பிக்கையும் செத்து வருகின்றன என்று அவர் வருத்தத்துடன் கூறுகிறார்.

எனினும் புது வரிகள் விதிப்பதில் புது தில்லிக்கு இன்னமும் தயக்கம் ஏற்படவில்லை. 'தங்கப் பத்திரத் திட்டம் தோல்வியடைந்தால் கடுமையான புதிய வரிகளை விதிப்போம்' என்று ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள். இது ஓர் அபத்தமான காரணத்தின் மீது எழுந்த தவறான முடிவாகும். சர்க்காரின் தங்கப் பத்திரக் கோரிக்கை தோல்வியாகி விட்டது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. ஆனால் அதற்கு ஈடாக வரி போடுவது கணித ரீதியில் காகிதத்தில் மட்டுமே காணக்கூடிய தீர்வேயன்றி, நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல. வரி விதிப்புக்கு ஒரு வரம்பு உண்டு. நம் நாடு அந்த வரம்பை அடைந்து எவ்வளவோ காலமாகி விட்டது. மக்கள் மீது புது வரிகள் விதித்துச் சட்டம் நிறைவேற்றுவது சுலபம். ஆனால் இதுபோன்ற நடவடிக்கை எடுக்கு முன் இதனால் தேசத்தின் பொருளாதாரமும், மக்களின் மன நிலையும் எப்படிச் சிதைக்கப்படும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். நிகர விளைவில், கூடுதலாக ரிவின்யூ கிடைப்பதற்குப் பதில் ஆபத்தை எதிர்கொண்டழைத்ததாகவே முடியக் கூடும்.

புது வரிகள் தவிர வேறு தீர்வுகள் உண்டா என்பதில் கவனம் செலுத்த வேண்டும். இப்போதுள்ள சர்க்காரால் அத்தகைய மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க முடியாது; முடிந்தாலும் அது கண்டுபிடிக்க முற்படாது. எனவே இன்று அரசியல் கட்சி பேதங்களை எண்ணிப் பாராமல், நாட்டின் திறமைசாலிகளையெல்லாம் கொண்டு ஒரு தேசியக் குழு அமைப்பதொன்றின் மூலமே பிரச்னையைத் தீர்க்க உபாயம் காண முடியும். இத்தகைய குழுவை நிறுவுவதே இன்று செய்ய வேண்டிய முதல் நடவடிக்கை. ஒரு நெருக்கடியான கட்டத்துடன் நாம் நேருக்கு நேர் முகம் கொடுத்து நிற்கிறோம். இச்சமயத்தில் பிரதமர் தமது கருவிகளை மாற்றிக்கொண்டேயாக வேண்டும். ராஜநீதி, நிதி நிர்வாகம், உணவுப் பிரச்னை இவற்றில் நாம் அடைந்துள்ள தோல்வியும், லஞ்ச ஊழலின் பெருக்கமும், உற்பத்திக்கு உதவாத விரயச் செலவின் உயர்வும் மக்களின் நம்பிக்கையைக் குலைத்துவிட்டன. இப்போது நம்பிக்கையைத் திரும்பப் பெற வேண்டுமாயின் மிகவும் தைரியத்துடன் அடியோடு புதியதொரு திசையில் அரசியல் நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும்.

நமது பிரதமர் இன்றைய சர்க்காரைக் கலைத்துவிட்டு, கட்சிச் சார்பில்லாத திறமைசாலிகள் குழு ஒன்றை அமைத்து, அதன் யோசனை மீது ராஷ்டிரபதி பணி புரிவதற்கு வழி செய்ய வேண்டும். கட்சி நலன் அல்லது சொந்த நலனைக் கருதாதவர்களும், எவ்விதமான சித்தாந்த மயக்கத்துக்கும் ஆளாகாதவர்களும், உற்பத்தி—விநியோகம் இவற்றைக் குறித்த பிரச்னைகளில் நேரடியான நுண்ணறிவு படைத்தவர்களும் இக்குழுவில் இடம் பெற வேண்டும். இவ்விதம் குழு அமைத்து, அதனிடம் பொறுப்பைத் தருவதால் சர்க்காரின்பால் மக்களுக்கு நம்பிக்கை வளருவதோடு உலக நாடுகளிடையேயும் இந்தியா பெருமதிப்புப் பெறும். இதனால் காங்கிரஸின் தேர்தல் வெற்றி வாய்ப்புக்கள் பாதிக்கப்படாது என்பதையும் நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அரசியல் கட்சிச் சார்புள்ள சர்க்காரைத் தாற்காலிகமாக நீக்கிவிட்டு, அதற்குப் பதில் பற்பல துறைகளில் நல்லறிவு பெற்ற குழுவை அமைக்க வேண்டுமென்பதே மேற்சொன்ன யோசனையின் தாத்பரியம். இதில் தீமை எதுவும் இல்லை. அரசியல் கட்சிச் சார்புள்ள ஆட்சியில் அவ்வப்போது ஒரு முறிவு ஏற்படுவது தேசத்துக்கு ஓர் ஆரோக்கியமான மாறுதலாகவே அமையும். இதனால் ஒரே கட்சியின் இடையறாத நீண்ட கால ஆட்சியின் விளைவான அரசியல் ஊழல் என்கிற விஷம் பரவுவதை நிச்சயமாகத் தடுக்க முடியும். ஆயினும் என் யோசனையின் இலட்சியம் இதுவல்ல. இன்றைய தீவிர நெருக்கடியில் தேசத்துக்குத் தலைசிறந்த நலன்கள் கிட்டுவதற்கு ஒரே வழி, ஓர் ஆற்றல் வாய்ந்த குழுவினிடம் ஆட்சிப் பொறுப்பு இருப்பதேயாகும் என்ற கருத்திலேயே என் யோசனையை வெளியிட்டிருக்கிறேன். நாற்பத்தைந்து கோடி மக்களைக் கொண்ட நமது நாட்டில் பிரச்னைகளைப் புரிந்துகொண்டு நிர்வாகம், நிதி, ராஜநீதி, பாதுகாப்பு, உள்நாட்டு விவகாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் கட்சிச் சார்பின்றி உத்தமமான பணி புரியக்கூடிய மகத்தான திறமை பெற்ற இருபது அல்லது இருபத்தைந்து அறிஞர்களை நாம் நிச்சயமாகப் பொறுக்கி எடுக்க முடியும். இவர்கள் பிரச்னைகளைச் சமாளிக்கும் பொறுப்பை ஏற்று நடத்தும் போது, சர்க்கார் சிப்பந்திகளும் அரசியல்வாதிகளின் தலையீடுகளிலிருந்து ஓய்வு பெறுவராதலால், அரசாங்க ஊழியர்களின் நடத்தையும் மேன்மை பெறும். அதாவது, நெருக்கடிப் பிரச்னையைத் தீர்க்கும்போதே, நிருவாகமும் தூய்மை பெறும்.

கண்ணியக் குறைவான பிரசாரம்

மகான்களுக்கு என்றுமே அற்பர்களிடமிருந்து எதிர்ப்பு ஏற்பட்டதுண்டு. அதை மகான்கள் சிறிதும் பொருட்படுத்தாமல் இதய சுத்தியுடன், மனச்சாட்சிப்படியே செயலாற்றி வருவார்கள். இதுபோன்ற எதிர்ப்புக்களைக் குறித்து மகான்களிடம் மதிப்பு வைத்துள்ளவர்களும் விசாரப்படத் தேவையில்லை. எனினும் எதிர்ப்புப் பிரசாரகர்கள் மிகவும் கண்ணியக் குறைவான நிலைக்குத் தாழ்ந்து, மக்கள் மனத்தைப் பேதலிக்க முற்பட்டால் மனம் வருந்தத்தான் செய்கிறது. சிறிது காலமாகச் சிலர் ராஜாஜியை நிந்தனை செய்து வருவது குறித்து நாம் இலட்சியம் செய்யாதிருப்பினும், இப்போது இல்லாத பொல்லாத புரளிகளையெல்லாம் கிளப்பிவிடுவதைப் பார்க்கும்போது இரண்டு வார்த்தை கூறுவது அவசியமாகிறது.

'தங்கப் பத்திரத்துக்கு மக்களின் ஆதரவு அதிகமாக இல்லை; ஏனெனில் அரசாங்கத்தை மக்கள் நம்பவில்லை' என்று சமீபத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் ராஜாஜி கூறியது உண்மை. இவ்விதழ் தலையங்கத்திலும் இதனை அவர் வியக்தமாகக் கூறியுள்ளார். ஆனால் இதனையே மாற்றி, 'சர்க்காரை நம்பி மக்கள் தங்கப் பத்திரம் வாங்கக் கூடாது' என்று ராஜாஜி கூறியதாகத் திரித்துப் பிரசாரம் செய்து, தேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குக் குந்தகமாக அவர் மக்களிடம் சர்க்காரின்பால் அவநம்பிக்கையை உண்டாக்கி வருகிறார் என்று சில புண்ணியாத்மாக்கள் பேசியிருக்கிறார்களாம். இது படு பாதகமான அரசியல் தந்திரம் என்பதற்கு மேல் எதுவும் சொல்வதற்கில்லை.

தங்கப் பத்திரங்களில் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பது புள்ளி விவரங்களே பளிச்சென்று கூறும் பிரத்யட்ச உண்மை. நாட்டில் உள்ள தங்கத்தின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாயா, இரண்டாயிரம் கோடி ரூபாயா என்றெல்லாம் சர்க்காரின் பொருளாதார நிபுணர்கள் மதிப்பீடு செய்து வரும் போதிலும், சென்ற வாரம் வரையில் தங்கப் பத்திரத்தில் 60 லட்சம் ரூபாய்க்குத்தான் மக்கள் முதலீடு செய்திருக்கின்றனர். அதாவது சர்க்காரின் மொத்த மதிப்பீட்டில் ஆயிரத்தில் ஒரு பங்குகூடப் பூர்த்தியாகவில்லை. எனவே மக்கள் சர்க்காரை நம்பித் தங்கப் பத்திரம் வாங்கமுன்வரவில்லை என்பது வெள்ளிடைமலையாகக் காணக் கிடைக்கிறது.

சர்க்காரின் வாக்குறுதியை நம்பி மக்கள் தங்கப் பத்திரம் வாங்கவில்லை என்ற இந்தப் பிரத்யட்ச உண்மையைத்தான் ராஜாஜி வெளிப்படக் கூறியிருக்கிறாரேயன்றி, 'சர்க்காரை நம்பாதீர்கள்; தங்கப் பத்திரம் வாங்காதீர்கள்' என்று கூறி, பாதுகாப்பு நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவித்துவிடவில்லை. கருத்து மாறுபாடுகள் இருப்பின் அவற்றுக்காக நேர்மையான முறையில் எதிர்வாதம் செய்வதுதான் நியாயமேயன்றி, சொல்லாத கருத்துக்களை ஒருவர் மீது சுமத்திப் பழி கூறுவது மாபாவமாகும்.

சரித்திரம் சாற்றும் உண்மை!

கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாக உலகில் பல நாடுகளிலுள்ள அரசாங்கங்கள் அவ்வப்போது உணவுக் கட்டுப்பாடு செய்ததன் விளைவுபற்றி மேரி ஜி. லேவி என்ற மேல்நாட்டு மாது அரிய ஆராய்ச்சி செய்து, தமது முடிவுகளை வெளியிட்டிருக்கிறார். 'ஃபோரம் ஆப் ஃப்ரீ என்டர்ப்ரைஸ்' அனுப்பி வைத்துள்ள இந்த ஆராய்ச்சி முடிவுகள் வருமாறு:

புராதன எகிப்தில் அரசாங்கமே தானிய வியாபாரத்தை எடுத்துக்கொண்டது; இதன் விளைவாக இறுதியில் நிலம் முழுவதுமே சர்க்கார் வசமாகி விட்டது.

ஏதென்ஸ் சாம்ராஜ்யம் தானிய வியாபாரத்தில் தலையிட்டுச் சட்டப்படி விலைகளை நிர்ணயித்தது; ஆனால் இதனை நடைமுறையில் செவ்வனே அமுல் செய்வது தன்னால் இயலாத காரியமெனக் கண்டுகொண்டது.

விலைக் கட்டுப்பாடு குறித்து ரோமாபுரி பரிசோதனைகள் செய்து சட்டங்கள் இயற்றியது; ஆனால் படுதோல்வி அடைந்தது.

பிரிட்டனில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு அதிகமாக ரொட்டியின் விலை சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. கோதுமை, மீன், மது இவற்றின் விலைகளும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் இச்சட்டங்களில் எதுவுமே நோக்கத்தைச் சிறிதும் நிறைவேற்றவில்லை என்பதைப் புரிந்துகொண்டு அவற்றை 1815ம் ஆண்டில் ரத்துச் செய்தது.

ஆன்ட்வெர்ப் ஆட்சி 1585ல் கவிழ்ந்ததற்கு ஒரு முக்கியமான காரணம் அதன் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்தான்.


1770லிருந்து 1866 வரை இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் பாடம் இதுவே: பஞ்ச காலத்திலும் கூட விலைக் கட்டுப்பாடு கூடாது; ஏனெனில் அப்போது தேவைக்கு மீறிச் சிலர் உணவுப் பண்டத்தை வாங்கிக் குவித்துக் கொண்டதால் மற்றவர்களின் பஞ்சம் உக்கிரமாயிற்று.

அமெரிக்க காலனியாட்சியிலும் இதே சோதனை பலமுறை நடந்தும், தோல்விக்கு மேல் தோல்வியே ஏற்பட்டது.

பிரெஞ்சுப் புரட்சியின்போது உணவு தானியக் கட்டுப்பாட்டுவாதிகள் தங்கள் தலையைச் சிரச்சேத இயந்திரத்துக்கு அளிக்க வேண்டியிருந்தது. உற்பத்தியாளர் – பண்டத்தை வாங்குபவர் இருவரையும் ஒத்துழைக்கச் செய்து, மக்கள் நலனுக்கேற்ற வகையில் சர்க்கார் தானிய சப்ளையைக் கண்காணிப்பதற்கும் அங்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் இந்த முயற்சியும் பலிக்கவில்லை.

ஐயாயிரம் ஆண்டு சரித்திரம் பற்பல நாடுகளிலும் சாற்றியுள்ள உண்மைக்கு நேர் எதிர்த் திசையில்தான் காங்கிரஸ் அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறது!

ராஜாஜியின் கருத்துக்கள்



காங்கிரஸ் கட்சி அமைப்புக்குள் நடக்கவிருக்கும் தேர்தல்கள் ஏன் தள்ளிப்போடப்பட்டுள்ளன என்பதற்கு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (நவம்பர் 9) மிக அழகாகக் காரணம் கூறியுள்ளது. அந்நியப் பகைவர்களின் எதிர்ப்புக் காரணமாகக் காங்கிரஸ் கட்சி கட்டுக்கோப்பாக உருவாகி விட்டது என்றோ, இதனால்தான் கட்சித் தேர்தல் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது என்றோ எண்ணுவதற்கில்லை என்கிறது 'எக்ஸ்பிரஸ்'. ராஜ்ய மட்டத்திலும் சரி, ஜில்லா மட்டத்திலும் சரி கட்சிக்குள் ஒற்றுமை குன்றிவிட்டது; இப்போது தேர்தல் நடத்தினால் உள்ளுக்குள்ளேயிருக்கும் பூசல்கள் எல்லாம் வெளிப்பட்டுவிடும்; இதனால்தான் கட்சித் தேர்தல் ஒத்திப் போடப்பட்டுள்ளது — என்று 'எக்ஸ்பிரஸ்' கூறுகிறது.

ஏகமனதாகத் தேர்தல் செய்வது ஒரு ஸ்தாபனத்தின் பலத்தையோ ஒற்றுமையையோ குறிப்பிடுவதாக நான் கருதவில்லை. செல்வாக்குள்ள சில கும்பல்களின் ஏதேச்சாதிகாரத்துக்கே ஏகமனதான தேர்தல்கள் அடையாளம் என்பது என் அபிப்பிராயம். ஜனநாயக ஸ்தாபனங்கள் சுதந்திரமாகச் செயலாற்றுவதாயின், ஆரோக்கியமான போட்டா போட்டி இருந்தேயாக வேண்டும். இதெல்லாம் எப்படியாயினும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கூறியிருப்பது ஒரு தனிப்பட்ட உண்மையாகும்.

ಹಿಹಿಹಿ

உணவு தானிய உற்பத்திக்கும், நகரப் புறங்களுக்குத் தானியங்கள் தடையின்றி ஸப்ளையாவதற்கும் நிலவரம்புச் சட்டங்கள் ஊறு விளைவிக்கின்றன என்கிற ஞானம் அரசாங்கத்துக்கு மெல்ல மெல்ல உதயமாகி வருவதாகத் தெரிகிறது. உணவு மந்திரி அவர்கள் பிரத்தியட்ச நிலைமையை மங்கலாகவேனும் கண்டு கொண்டிருக்கிறார் என்பதைப் பத்திரிகைச் செய்திகளிலிருந்து அறிய முடிகிறது. நெருக்கடி நிலைமையைக் காரணம் காட்டி நிலவரம்புச் சட்டங்களின் வேகத்தைத் தணிக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

ஆனால் பாகிஸ்தான் சீன இவற்றின் எதிர்ப்பு இல்லாவிடினும் நில வரம்புச் சட்டங்கள் உள்ளவரையில் உணவுத் துறையில் நெருக்கடி நிலைமை இருந்து கொண்டுதான் இருக்கும். நிலச் சட்டங்கள் யாவும் விவசாயிகளின் தலைக்கு மேல் மயிரிழையில் கட்டித் தொங்கவிட்ட கத்தியாக உள்ளன. அவர்கள் எப்போது என்ன நடக்குமோ என்று தயங்கியும், கலங்கியும் வருகின்றனர். இந்நிலையை மாற்றி நம்பிக்கை யூட்டுவதே முதலீடும், உழைப்பும் வளர்ந்து முன்னேற்றம் ஏற்படுவதற்குரிய முதல் காரியம்.

ಹಿಹಿಹಿ

இன்று நாட்டுப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் தனியார் முதலீட்டை தகக்கக் கூடாது; அதனை நலனுக்குகந்த திசையில் வளர்ப்பதே வழி என்று பொருளாதார நிபுணர் டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் சமீபத்தில் எழுதியுள்ள ஒரு நூலில் கூறியிருக்கிறார். தனி மனிதர்களின் சேமிப்பைப் பெருக்குவதனாலேயே முதலீடுகள் பெருகி, உற்பத்தியும் உயரும். இவ்வாறு தனி மனிதர்கள் அதிகம் சேமிப்பதற்கு உதவும் விதத்திலேயே மத்திய சர்க்காரின் வரிக் கொள்கை அமைய வேண்டும் என்பது ஸ்ரீ லோகநாதனின் மதிப்புக்குகந்த கருத்து.

வருமான வரிகளை உயர்த்துவதைவிட வருமானங்களையே உயர்த்த வழி காண்பதுதான் ஒரு தேசத்தின் பொருளாதாரத்துக்கு உகந்தது என்பதை உலக நாடுகள் உணர்ந்து வருகின்றன. வருமானங்கள் உயர்ந்தாலே தேசத்தின் மொத்த உற்பத்தியும் உயரும். இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியதனால், பொருளாதாரத்தில் மிகவும் சீர்கெட்டிருந்த பல நாடுகள் முன்னேற்றம் பெற்றிருப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்வதே நமது லட்சியமாயின், மொத்தத்தில் நாட்டுச் செல்வம் பெருகுவதற்கு உதவுகின்ற கொள்கைகளையே பின்பற்ற வேண்டும். வரிகளை உயர்த்தி அதன் மூலம் ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்ய நினைப்பது, அனைவரையும் சமமாகத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு வருவதேயன்றி, அனைவரையும் சமமாக உயர் நிலைக்கு இட்டுச் செல்லும் உபாயமாகாது. செல்வ நிலையில் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களை உயர்த்துவதுதான் புதிய பொருளாதாரக் கொள்கையேயன்றி, உயர் நிலையிலிருப்பவர்களைத் தாழ்த்துவது அல்ல. வரிகளைக் குறைப்பதைத் தலையாய பொருளாதார நடவடிக்கையாகக் கொண்டே மேற்கு ஜெர்மனி சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளது.

ಹಿಹಿಹಿ

சட்டபூர்வமான ரேஷனை அமுல் செய்வதால் உணவு தானியங்களை எப்படியேனும் பெற்றாக வேண்டும் என்கிற கருத்தில் மக்கள் அதிகமாக வாங்குவார்கள்; இதனால் மொத்தத்தில் மக்கள் வாங்கும் உணவுதானியத்தின் அளவு உயரவே செய்யும் என்பதைத் தில்லி ஆட்சிபீடத்திலுள்ளவர்கள் உணர வேண்டும்.

மக்கள் அதிகமாக வாங்க முற்பட்டாலும் தானிய ஸப்ளை அதற்கேற்ப உயர முடியாது. இதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை உணவு மந்திரி மனத்தில் வைத்துப் பிரச்னையைக் குறித்து மறுசிந்தனை செய்ய வேண்டும். ரேஷன் சாங்கியங்களினால் எத்தனை உபத்திரவங்கள் செய்தாலும், அதனால் உணவு உற்பத்தியையோ ஸப்ளையையோ விருத்தி செய்துவிட முடியாது; பசித்த வயிறுகளின் எண்ணிக்கையையும் குறைத்துவிட முடியாது. ஆனால் இதற்கு நேர்மாறாக, மக்கள் தேவைக்கதிகமாக எவ்வளவு அதிகபட்சம் வாங்க முடியுமோ அவ்வளவு தானியத்தை வாங்குவதற்கே ரேஷன் ஒரு தூண்டுகோலாகும். அதிகாரவர்க்கத்தின் கட்டுப்பாடுகளால் எவ்வளவு தீமை விளையும் என்பதையும், கட்டுப்பாடுகளை எடுப்பதால் எவ்வளவு நன்மை விளையும் என்பதையும் உணவு மந்திரி அவர்கள் அநுபவபூர்வமாக அறிந்தவர். எனவே, அவர் செய்ய வேண்டியதெல்லாம் காலஞ்சென்ற ரஃபி அஹமத் கித்வாய் அவர்களைப் போல் பயத்தை உதறித் தீரத்துடன் செயலாற்றுவதுதான். யுத்த களத்தில் மட்டுமின்றி, உள்நாட்டு நிருவாகத்திலும் கூடப் பயமே தோல்விக்குக் காரணமாகிறது.

* * *

'ஒவ்வொரு மனிதனும் தனக்கும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் தன்னாலியன்ற அளவு நன்மை தேடிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான்; இந்த விருப்பத்திலிருந்தே எல்லா லௌகிக முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன. அதோடு மட்டுமின்றி, நாகரிக சமுதாயமும் கிறிஸ்துவ சமயமும்கூட இம் முன்னேற்றத்தினாலேயே உருவாகியுள்ளன' என்று அந்தோனி ட்ரல்லோப் என்ற புகழ் பெற்ற எழுத்தாளர் தமது சுயசரிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். உற்பத்தி பெருகுவதற்கு லாப நோக்கம் எவ்வளவு அவசியம் என்பதை இது நன்கு எடுத்துக் காட்டுகிறது.

மேல்நாட்டவரான ட்ரல்லோப் கிறிஸ்துவ சமயத்தைப் பற்றிக் கூறினார். இதையே காந்தியடிகள், தருமகர்த்தாவைப் போல் ஒருவர் தமது சொத்துக்களைப் பரிபாலனம் செய்யும் முறை (Trusteeship) என்று கூறினார்.

* * *


மாற்றுக் கருத்துக்களை எல்லாம் வேட்டையாடி அழிப்பது தேசப் பாதுகாப்பு நடவடிக்கையாகும் எனச் சில பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் நினைப்பதாகத் தெரிகிறது. அந்நியக் கொள்கை, உள்நாட்டு விவகாரம் இவற்றில் ஆள்கிற கட்சியின் கருத்துக்களுக்கு மாறுபாடானவை யாவும் தேசப் பாதுகாப்புக்கு ஆபத்து உண்டாக்குவதாகவும், அவற்றைத் தடுப்பதாலேயே தேசத்துக்குப் பாதுகாப்பு ஏற்படுத்துவதாயும் எண்ணுவது ஒரு மாயை. கருத்துத் தடையால் சட்டத்தின் ஆட்சி வலுப்பெறாது; மாறாக வலு குன்றவே செய்யும். ஜனநாயகத்துக்குரிய பிரத்தியேகமான உரிமைகளும் இதனால் அழிக்கப்படும். தனது கருத்துக்கள் சரியானவையே என்பதில் ஒருவருக்கு உறுதியில்லாமற்போகும்போதுதான், மாற்றுக் கருத்துக்களைக் கண்டு அச்சம் ஏற்படும். தன் கருத்துக்களில் ஒருவருக்கு உறுதி யிருக்குமாயின், எதிர்க் கருத்துக்களுக்கு இடம் தரும் சகிப்புத் தன்மையும் அவரிடம் இருக்கும். தன்னம்பிக்கை இல்லாதபோது எதிர்க் கருத்தைக் கண்டு பயம் ஏற்படுகிறது.

காச்மீர விஷயமாகச் சர்க்கார் கொள்கையிலிருந்து மாறுபடும் கருத்துடையவர்களையெல்லாம் சிறைப்படுத்தவேண்டும் என்ற அபிப்பிராயம், அவ்வாறு நினைப்போருடைய கொள்கையின் பலத்தைக் காட்டவில்லை; பலவீனத்தையே காட்டுகிறது. பயமில்லாமலும், இரகசியமாக இன்றிப் பகிரங்கமாகவும் கூறப்படும் மாற்றுக் கருத்துக்களைப் பொறுத்துக் கொள்வதே சத்தியத்துக்கு உடன்பாடாகும். தைரியமாக வெளியிடப்படும் எதிர்க் கருத்துக்களைத் தடுக்க வேண்டும் என்கிற எண்ணம் அசத்தியம் என்ற காற்றைத் துணைக்கொண்டு பாய்மரக்கலத்தைச் செலுத்துவதற்கொப்பாகும். உண்மையில் இல்லாத ஓர் ஏகோபித்த முடிவைச் சிருஷ்டித்து உலகுக்குக் காட்டுவது அசத்தியத்தின் ஓர் உருவமேயாகும். 'சத்தியமே வெல்லும் அசத்தியம் ஒருபோதும் வெல்லாது' என்பது வேதவாக்கு. **ஸத்யமேவ ஜயதே, ந அன்ருதம்.**

காச்மீரப் பிரச்னையில் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களின் மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்காமலிருப்பதை ஆதரித்துப் பேசிய உள்துறை மந்திரியவர்கள் மிகவும் சரியான காரியத்தைச் செய்திருக்கிறார். இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகளைப் பிரயோகித்து மாற்றுக் கருத்துக்களையெல்லாம் அழித்துவிடலாம் என்ற கோரிக்கையை அவர் எதிர்த்து நின்றிருக்கிறார்.

19-11-1965 முதல்





போர்முனையில் முன்னணி இடங்களுக்குச் சென்று இந்திய ஜவான்களுக்குப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வித்த வட நாட்டுத் திரைப்பட நடிகர்-நடிகையர்களுடன் பாதுகாப்பு மந்திரி சாவன்.



சென்னையிலிருந்து இலங்கைக்குச் சென்றிருந்த நடிகர் எம்.ஜி. ராமச்சந்திரன் இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயகாவைச் சந்தித்துப் பேசினர். மாத்தளை நகரில் எம். ஜி. ஆரையும் நடிகை சரோஜாதேவியையும் வரவேற்கக் கூடியிருந்த பெருங்கூட்டத்தின் ஒரு பகுதிதான் இது!



களம் கண்டேன்






பூச்சியும் கத்தியும்


பாஞ்சாலசிம்மம் ரஞ்சித்சிங் பற்றிக் கேள்விப் படாதவர் இருக்க முடியாது. ஒற்றைக் கண் ரஞ்சித் சிங் எதிரிகளுக்கு வைரியாக விளங்கிய வன். பாஞ்சாலத்தில் அவன் கால் வைக்காத இடமும் வாகை சூடாத களமும் இல்லை. இன்று கூடப் பாஞ்சாலக் கிராமங்களில் அவன் புகழ் பற்றிக் கர்ண பரம்பரைக் கதைகளும், நாடோடிப் பாடல்களும் ஏராளம் ஏராளம். ஐந்து சீக்கியக் குழந்தைகளைக் கண்டால் அதில் நிச்சயம் ஒரு குழந்தைக்கு ரஞ்சித் என்று பெயர் இருக்கும். அந்த மாவீரனின் பிறந்த ஊரான அட்டாரிக்கு அடுத்த படியாகச் சென்றோம்.

இந்தியாவின் எல்லை அட்டாரியோடு முடிவடை கிறது. இதை உலகத்துக்கு எடுத்துக் கூறும் வண்ணம் இந்திய சுங்க இலாகாவின் காரியாலய மும் எல்லை அதிகாரியின் அலுவலகமும் உள்ளன. பாகிஸ்தான் விமானங்கள் இங்கும் நாசத்தை விளைவித்திருக்கின்றன. ஆனால் ஆரம்பத்தில் கூறிய படி அவர்களின் வேகமெல்லாம் மரம் மட்டைகள் மீதுதான் அதிகம் சென்றிருக்கின்றன. இதற்கு என்ன காரணம் எனக் கேட்டேன். பலர் பலவித மாகக் கூறினர். ஒன்றிரண்டு பேர்கள் கூறிய விளக்கங்கள் பொருத்தமாக இருந்தன. அவர்கள் கூறினார்கள் :

சாபர்ஜெட் எனக் கூறும் போர் விமானங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். டாங்கிகளுக்கு அப்பன் 'பாட்டன்', என்றால், போர் விமானங் களுக்குத் தாத்தா சாபர்ஜெட் விமானங்கள். வானில் முப்பதாயிரம் நாற்பதாயிரம் அடி உய ரத்தில் இவை மிகச் சுலபமாகப் பறக்கும். எதிரி களின் இலக்கு எது என்பதைக் காட்டும் கருவிகள் இதில் உண்டு. விளக்கேற்ற விசையை எவ்வளவு சுலபமாக நாம் அழுத்துகிறோமோ, அதுபோன்ற விசைகள் இதில் உண்டு. ஆனால் அவற்றை அழுத் தினால் விளக்கு எரியாது. மாருகக் குண்டுகள் அதளபாதா ளத்தை நோக்கி விரைந்து வெடிக்கும். இருநூற்றைம்பது ராத்தல் எடையுள்ள குண்டுகள் சிலவற்றை இதில் சுலபமாக ஏற்றிச் செல்லலாம். அதே போல் வீசவும் செய்யலாம். இதல்லாமல் அந்த விமானத்தில் பீரங்கிகளும் உண்டு. அவை மிக அருகில் வரும் விமானங்களைச் சுடும். அதே போல் தூரத்தில் வரும் விமானங்களையும் சுக்கு நூறாக்கும். அமெரிக்கா கண்டு பிடித்துள்ள நவீன விமானங் களில் இது ராஜா. இதற்கு முன்பு வேறு விமானங்கள் எதி ரில் நிற்கமுடியாது. அசல் பைத் தியக்காரன் கையில் அணுகுண்டு கொடுத்தால் எப்படி யிருக்

எஸ்.எஸ்.மாரிசாமி,எம்.பி.





மேலே: 1. நாட் விமானங்கள் மறுபடியும் எண்ணெய் நிரப்பி, குண்டுகள் ஏற்றப்பட்டுத் தயாராகின்றன.

2. பாகிஸ்தான் விமானங்கள் மாதா கோயிலையும் தரை மட்டம் ஆக்கின.

3. ராணுவ ஆஸ்பத்திரிகளிலும் அவர்கள் கண்மூடித்தனமாகக் குண்டு வீசினர்.

✲

கீழே: 1. நாட் விமான ஓட்டியோடு அயல்நாட்டு ராணுவப் பார்வையாளர்கள்.

2. இந்திய விமானிகள் போரிடத் தயாராகி விட்டனர்.



குமோ அப்படிப் பாகிஸ்தானியர் கையில் இந்த விமானங்களை நூற்றுக்கணக்கில் அமெரிக்கர் தந்திருக்கிறார்கள். தந்தவர்கள் சீனவை எதிர்க்க வழங்கினார்கள். பெற்றவர்களோ 'உனக்கும் பெப்பப்பே — உங்கப்பனுக்கும் பெப்பப்பே' எனக் கூறி இந்தியா பக்கம் திருப்பி விட்டார்கள். இந்த சாபர்ஜெட் விமானங்கள் அட்டாரி பகுதியில் ஒரு வயல் கூட விடாமல் குண்டுகளை இறைத்திருக்கின்றன.

இதற்குக் காரணம் பாகிஸ்தானியருக்குக் குண்டு போடத் தெரியவில்லை என்பதுதான். அரைகுறைப் பயிற்சியோடு ஆட்களை விமான ஓட்டிகளாக்கி யிருக்கிறார்கள். பயிற்சி தந்த அமெரிக்கர்கள், குறைப் பயிற்சியை அவர்கள் தாமாகவே பெற வேண்டுமென விரும்பி யிருக்கிறார்கள். ஆனால் பாகிஸ்தானி விமானிகளோ தாமாகப் பெற்றது பயிற்சியல்ல. வெறியைத்தான் பெற்றனர். வெறி தரைச் சண்டையில் ஒரு வேளை பலன் தரலாம். கருவிகளிடம் வெறி என்ன பண்ணும்? நன்மைக்குப் பதிலாகத் தீமையைத்தான் கொண்டு வரும்.

சாபர்ஜெட்டுகள் பயனற்றுப் போனதற்கு இது ஒரு காரணம். இரண்டாவது காரணம் நமது வல்லமை. வல்லமை என்றால் உண்மையான வல்லமை.

தமிழில் பழங்காலத்துப் பழமொழி ஒன்று உண்டு. அதாவது 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்று. இந்தப் பழமொழிக்குச் சரியான சான்றைப் பாஞ்சாலக் களமும், காஷ்மீர முனையும் எடுத்துக் காட்டுகின்றன.

மயிலையில் நடந்த கூட்டமொன்றில் பழம்பெரும் தேச பக்தர் திரு வரதாச்சாரியார் கீழ் வருமாறு பேசியதாகப் பத்திரிகையில் படித்தேன்.

''இரு இறக்கைகளைக் கொண்ட ஒரு சிறு பூச்சிக்குத்தான் நாட் என்று பெயர். சாபர் என்றால் கத்தி. நமது நாட் விமானங்கள் பூச்சி போலிருந்து கத்தி போன்ற சாபர்ஜெட்டான எதிரி விமானங்களை அடித்து நொறுக்கி யிருக்கின்றன....''

திரு வராதாச்சாரியார் கூறியது மிக மிக உண்மை. நாட் என்னும் நமது பூச்சி விமானங்களின் சாதனை அளவிட முடியாதது. சாபர்ஜெட்டுகளைச் சட்னி பண்ணி

வருக்கின்றன அவை. மரம் மட்டைகளோடு பாகிஸ்தானியர் நின்றதற்கு இதுவும் ஒரு காரணம். எப்படி என்பதை மேலும் பார்ப்போம்.

சாபர்ஜெட்டுகளை அனுப்பிய பாகிஸ்தான் தளபதிகள் ஒரு கட்டளை பிறப்பித்தார்களாம். அதாவது விமானத்தில் உள்ள குண்டுகளைப் போடாமல் திரும்பக் கூடாது என்று. மீதியாகும் குண்டோடு வந்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என்று 'கபர்தார்' கூறியிருக்கிறார்கள்.

இந்தக் 'கபர்தா'ருடன் பாகிஸ்தான் விமானப் படை புறப்பட்டிருக்கிறது. இவை இந்திய எல்லைக்குள் வந்ததும் 'புர்ர்ர்ர்' என்ற இரைச்சலோடு நமது பூச்சிகள் - 'நாட்டுகள்' கிளம்பியிருக்கின்றன. இவை பாகிஸ்தான் விமானங்களுக்கு மேலே வானில் பறந்து செல்லும். முதுகுக்கு மேலாக இந்திய 'நாட்'டுகள் பறக்கின்றன என்றதும் பாகிஸ்தான் சாபர்ஜெட்டுகள் மேலே கிளம்ப முயலும். இதற்குச் சில விநாடிகள் பிடிக்கும். காரணம் சாபர்ஜெட்டின் பருமன் அப்படி—பூதாகாரம்! இதற்குள்ளாக வண்டென இருக்கும் நாட் இருக்கிறதே, அது மளமளவெனக் கீழே இறங்கி சாபர்ஜெட்டின் வயிற்றுக்கு வந்துவிடும். நாட்டுக்குச் சின்ன உடம்பு! வயிற்றுக்கு வந்து விட்டானே என்று பாகிஸ்தானியர் கீழே இறங்குவர். இவர் இறங்கியதும் நாட்டார் சரேலெனப் பின்னால் வந்து விடுவார். பின்னாலேயே வந்தால், முன்னால் இருக்கும் விமானத்துக்கு வேறு வினையே வேண்டாம்! அடுத்து 'நாட்'டிலுள்ள இரு சிறு பிரங்கிகள் சுடும். யானை வயிறு போன்ற சாபர்ஜெட்டின் உடலில் அவை தாக்கும். அடுத்த கணம் அந்த வயிற்றிலிருந்து நெருப்பு கிளம்பும். தரைக்கு வந்து விழுவது பிறகு விமானமாக இராது. உருகிய அலுமினியத் தகடோ அல்லது கருகிய உடலோதான்! காரியத்தை முடித்த 'நாட்' வெற்றியோடு திரும்பி விடும்.

இந்த விளக்கத்தைக் கேட்டதும் எங்களுக்கு மெய்சிலிர்த்தது. விளக்கம் தந்த நண்பர் மேலும் பேசினார் :

" 'நாட்'டில் ஒரே ஆள்தான் இருக்க முடியும். அவர் இருமருங்கிலும் இரு சிறு பிரங்கிகள். பிரங்கி என்றால் பாட்டனில் பார்த்திருப்பீர்களே, அப்படி இருக்காது. துப்பாக்கி அளவில் தான் உண்டு. சாபர்ஜெட்டின் நீளத்தில் மூன்றில் ஒரு பகுதிகூட இருக்காது நமது 'நாட்'டின் நீளம். இவை வளைந்து வளைந்து பறக்க முடியும். திடீரெனச் செங்குத்தாக உயரே ஏற முடியும். அதே போல் கழுகு போல் தலைகுப்புற இறங்கவும் முடியும். சாபர்ஜெட்டுகள் அப்படி அல்ல. வால் பக்கம் என்ன இருக்கிறது என்று பார்க்க யானை உடம்பையே திருப்புகிறதல்லவா? அப்படித்தான் சாபர்ஜெட் திரும்ப முடியும். இதற்குள் 'நாட்' பன்முறை சுற்றிச் சுற்றி வந்து விட முடியும்............!"

'நாட்டார் வாழ்க' என்றேன் நான். 'எந்நாட்டவரும் போற்றிடும் இந்திய விமானிகளே நீங்கள் வாழ்க வாழ்க' என்றும் கூறி வாழ்த்தினேன்.

'நாட்'டைச் செலுத்திய இந்திய விமானிகளைப் பற்றியும் மிக மிகக் கூறினார்கள். அந்த விமானிகளுக்கு நிகர் அவர்கள்தானாம். ஒவ்வொரு நுணுக்கமும் கற்றவர்கள் அவர்கள். அதோடு பயிற்சி மிக உண்டு. 'இவை எல்லாவற்றுக்கும் மேலாக மனோதிடம் உண்டே அது மிகப் பிரமாதம் சார்' என்றார் அந்தப் பெரியவர். இந்தத் திடம் பாகிஸ்தானியருக்கு அவ்வளவு இல்லை. 'நாட்'டைக் கண்டதும் அவர்களுக்குச் சில நாட்களில் குலைநடுக்கம் கண்டிருந்தது. அந்த நடுக்கத்தில் விழுந்த விமானங்களும் உண்டு.

பாகிஸ்தானியரின் 'கபர்தார்' உத்தரவை இப்போது பார்ப்போம். இந்த உத்தரவோடு வந்த விமானங்களை 'நாட்' விரட்டும். அப்போது அவர்கள் ஒன்று, வந்த வழி திரும்ப வேண்டும். அல்லது 'நாட்'டுக்கு இரையாக வேண்டும். இதில் முன்னதைப் பலர் செய்திருக்கிறார்கள்; அதாவது ஓடியிருக்கிறார்கள். ஓடும் போது திடீரென அவர்களுக்கு 'கபர்தார்' உத்தரவு நினைவுக்கு வந்திருக்கிறது. குண்டுகளைத் திரும்பக் கொண்டு போனால் பூட்டோ விடுவாரா? எனவே வயலோ, வரப்போ, குளமோ குட்டையோ, கண்ட கண்ட இடத்தில் போட்டுவிட்டு ஓடியிருக்கிறார்கள். இதுதான் நடந்திருக்கும் கதை....

சுவை மிக்க இக்கதையைக் கேட்டபோது இன்னொரு சுவைமிக்க பேச்சு ஒன்று டில்லியில் அடிபடுவது நினைவுக்கு வந்தது. அதை அப்படியே கீழே தருகிறேன் :

ஒரு நாள் அமெரிக்கத் தூதர் சாஸ்திரியைக் காண வந்தாராம்.

இருவரும் முகமன் கூறிய பிறகு தூதர் சொன்னாராம் :

"சாஸ்திரிஜி, ஒரு வேண்டுகோள்....!"

"வேண்டுகோளா, என்ன?" என்று கேட்டிருக்கிறார் திரு லால்பகாதூர்.

"தங்கள் உதவி தேவை."

"உதவியா? அதுவும் என்னுடையதா! தாங்களல்லவா கோதுமையிலிருந்து கோடி டாலர் கடன்வரை உதவிகேட்பது வழக்கம்."

"இல்லை இல்லை, இது வேறு ஒரு உதவி..."

"சொல்லுங்கள்" என்றாராம் சாஸ்திரி.

"எங்களுக்கு உங்கள் நாட் விமானங்கள் தேவை......"

"ஓஹோ, அதுவா? தருகிறோம். ஆனால் இப்போது சண்டை நடக்கிறது. வேண்டுமானால் 1967ல் தருகிறேன்......"

"ரொம்ப மகிழ்ச்சி! 67 என்ன 77 வரையில்கூடப் பொறுத்திருக்கிறோம்...... எப்படியாவது தந்தால் சரி......"

"தருகிறோம். ஆனால் ஒன்று......"

"ஆனால் போடுகிறீர்களே, என்ன?" என்றாராம் தூதர் பதற்றத்தோடு.

" 'நாட்' தருகிறோம். ஆனால் எங்கள் விமானிகளைத் தர முடியாது" என்றாராம் சாஸ்திரி.

இது டில்லியில் புழங்கும் ஹாஸ்யம். உண்மையல்ல, ஒரு கதை! இந்திய 'நாட்' விமானங்களும் விமானிகளும் என்ன சாதனை சாதித்திருக்கிறார்கள் என்பதை விளக்க இந்தக் கதையே போதுமல்லவா!

வெற்றித் திருநகர்

அகிலன்



அத்தியாயம் எட்டு

உலகத்துக்கொரு புதுமை

சந்திரசேகர பாண்டியரும் திருவல்லை பாண்டியனும் அரியநாத முதலியாரின் துணையோடு விஜயநகரத்தின் எல்லையை நெருங்கிக் கொண்டிருந்தனர். வழி நெடுகிலும் அவர்களுக்கு நடந்த உபசாரங்கள் விஜயநகரத்தின் விருந்தோம்பலுக்கு எடுத்துக்காட்டாக விளங்கின. திருவல்லபனும் அப்துலும் முதன்முறையாக அங்கு வருபவர்களாதலால், தாங்கள் காணும் காட்சிகளைப் பற்றி அவ்வப்போது அரியநாதரிடம் கேட்டுக் கொண்டே வந்தனர்.

தலைநகரத்தின் தெற்கே அதன் முகப்பு வாயிலைப் போல் புதிதாக எழும்பியிருந்த திருமலாதேவி பட்டணத்துக்கு வந்துவிட்டார்கள் அவர்கள். சக்கரவர்த்தி கிருஷ்ண தேவராயர் அதைத் தமது தாயாரின் பெயரால் அமைத்திருந்தாராம். இரவுப் பொழுதை அங்கே கழித்துவிட்டு, மறுநாள் பொழுது புலர்ந்தவுடன் அங்கிருந்து குதிரைகளில் கிளம்பினார்கள்.


''இங்கிருந்தே நகரம் தொடங்குகிறது என்று சொல்லலாம்'' என்றார் அரியநாதர்.

புதிய புதிய மாடமாளிகைகளும் தெருக்களும் மக்கள் கூட்டமும் நிறைந்த அந்த நகரத்தைக் கடந்து, விசாலமான நெடுஞ்சாலையில் அவர்கள் சென்றார்கள். இருபுறங்களிலும் வரிசை வரிசையாக வீடுகளும் அவற்றுக்குப் பின்னே நஞ்சைகளும் புஞ்சைகளும் தென்பட்டன. சாலையோரத்து மரங்கள் நிழல்தரு மரங்களாக மட்டிலும் இருக்கவில்லை; கனி குலுங்கி ருசியோடு பசி போக்கவும் அவை காத்திருந்தன.

நஞ்சைகளில் செந்நெல், வாழை, கரும்பு ஒருபுறம் மண்டிக் கிடக்க, மறுபுறம் நவ தானியங்கள் புஞ்சைகளில் விளைந்திருந்தன. கொள்ளும் பச்சைப் பயிறும் ஏராளமாக விளைவிக்கப் பெற்றதைப் பார்த்துவிட்டு, ''இந்த நாட்டில் வாழும் குதிரைகள் கொடுத்து வைத்த குதிரைகள்!'' என்றான் அப்துல்.

ஆங்காங்கே மரத்தடிகளில் கட்டிக் கிடந்த குதிரைகளை அவனால் எண்ணிப் பார்க்க முடியாது போல் தோன்றியது. அந்த நாட்டு ஆண்களையும் பெண்களையும் போலவே அவை





எழிலும் வனப்பும் கொண்டு செருக்கோடும் மிடுக்கோடும் காட்சியளித்தன.

சற்றுத் தொலைவு கடந்தவுடன் புஞ்சைக் காடெங்கும் ஒரே வெண்பஞ்சுக் கூட்டமாகக் காட்சியளித்தது. வானத்து வெண் மேகத்தின் மண்ணுக்கு இறங்கி வந்ததைப் போன்று பருத்தி வெடித்திருந்தது. திருவல்லப பாண்டியனால் அந்த நாட்டு வளத்தையும், அதை அவர்கள் ஒழுங்குபடுத்தி வளர்க்கும் லாவகத்தையும் கண்டு வியப்புறாமல் இருக்க முடியவில்லை.

"அப்துல்! பகைவர்கள் கண்டு பதுங்கும் நாடாக ஒரு நாடு விளங்க வேண்டுமானால், அது வெறும் படைபலம் கொண்ட நாடாக மட்டும் இருந்து பலனில்லை; உணவு, உடை, இருக்கை இவ்வளவிலும் அது நிறைவு கண்டிருக்க வேண்டும் என்பதை விஜயநகரம் உணர்ந்திருக்கிறது" என்று பூரிப்போடு கூறினான் திருவல்லபன்.

நூற்றுக்கணக்கான மாட்டு வண்டிகளில் காய்கறிகள் நகரத்தின் உட்பகுதியை நோக்கி விற்பனைக்காகச் சென்று கொண்டிருந்தன. சுறுசுறுப்பும் பரபரப்பும் நிறைந்த மக்கள் கூட்டம் தனது பல்வேறு தொழில்களுக்காக விரைந்தோடிக் கொண்டிருந்தது.

நகரத்தின் வெளிக் கோட்டை மதிலைக் கண்டு அப்படியே பிரமித்து விட்டான் திருவல்லபன். அதற்குள்ளே புகுந்தவுடன் நேரடியாக நகரத்தின் நடுப் பகுதிக்கே சென்றுவிட முடியுமென்று நினைத்தவன், அங்கேயும் காடுகளையும் நஞ்சைகளையும் புல்வெளிகளையும் கண்டு ஒருகணம் தயங்கினான்.

"விஜயநகரம் என்றால், நகரங்களும் கிராமங்களும் நிறைந்த ஒரு சிறு நாடு என்றே சொல்லலாம்" என்றார் அரியநாதர்; "ஒவ்வொரு கோட்டையைச் சுற்றிலும் பல பகுதிகள் இருக்கின்றன."

வெளிப்புறங்களில் கண்டதுபோலவே அங்கும் நஞ்சைகளும், புஞ்சைகளும் செறிந்திருந்தன. மா, பலா, நாரத்தை, எலுமிச்சை, வெள்ளைத் திராட்சை முதலிய இவற்றை அங்கங்கே வைத்துப் பயிர் செய்திருந்தார்கள். மேய்ச்சல் நிலங்களில் மந்தை மந்தையாகப் பசுக்கள், காளைகள், எருமைகள் வெள்ளாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. கொழு கொழு வென்று வளர்ந்திருந்த வெள்ளாடுகளின் மீது சவாரி செய்து விளையாடிக் கொண்டிருந்தார்கள் சிறுவர்கள்.

"அரசே! அடிக்கடி படையெடுப்புக்களைக் கண்ட நாடுபோல் இது தோன்றவில்லையே?" என்றான் அப்துல்.

"படையெடுப்புக்களுக்கு இது பணிந்து கொடுத்ததில்லை. அந்தத் துன்பங்களை ஏற்றுக் கொண்டு, அவற்றை எதிர்த்து முறியடிப்பதற்குள்ள வலிமையையும் வளர்த்துக் கொண்டு விட்டது. பணிந்து போகிற நாடுகள் தலைதூக்குவதில்லை. எதிர்க்கத் துணியும் நாடுகளுக்குப் புதுச் சக்தி வளர்ந்து விடுகிறது" என்றான் திருவல்லபன்.

நகரத்தின் உட்பகுதிக்குள் நுழைந்த போது அதைக் காண இரண்டு கண்கள் போதாது என்பதை அறிந்தார்கள் அவர்கள். செல்வச் செழிப்பு அங்கிருந்த ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு மனிதரிடமும் காணப்பட்டது. பல்லக்குத் தூக்கும் பணியாட்கள் கூடக் கட்டுரம் பெற்ற உடம்போடும், அணிமணிகளோடும், சுத்தமான உடைகளோடும் தோற்றமளித்தார்கள்.

கடைவீதிகளில் வைரங்கள், முத்துக்கள், பவளங்கள், நவமணிகள் பதித்த பொன்னாபரணங்கள் ஒருபுறமிருந்தன. காஞ்சியும் கலிங்கமும் மறுபுறம் குவிந்து கிடந்தன. பழங்கள், காய்கறிகள், உணவுப்பொருள்களை விற்பனை செய்தோர் பலப் பலர். அவற்றை வாங்க வந்த கூட்டத்தில் ஆந்திர நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும் இருக்கவில்லை. தமிழர், கன்னடியார், வடதேசத்தார், இஸ்லாமியர், மேலைநாட்டுப் போர்த்துக்கேசியர் இப்படிப் பலதரப்பட்டவர்களும் இருந்தனர்.

ஒரு தெருவில் எதிர்ப்புறத்திலிருந்து பல குதிரைகள் ஒன்று சேர்ந்து வரும் குளம்பொலி கேட்டது. மக்கள் கூட்டம் விலகி நின்று வழிவிட்டது. பாண்டியர் முதலானோரும் தங்கள் தங்கள் குதிரைகளைச் சற்று ஒதுக்கிக் கொண்டனர்.

எதிரில் வந்த குதிரை வீரர்களைக் கண்டவுடன் முதலில் திருவல்லபனும் அப்துலும் திடுக்கிட்டார்கள். அவ்வளவு பேரும் இஸ்லாமிய வீரர்கள் என்பது அவர்களைக் கண்டவுடன் தெரிந்து விட்டது. செருக்கும் பெருமிதமும் கொண்டு விம்மிய தோள்களோடு அவர்கள் விரைந்து வந்து கொண்டிருந்தார்கள்.

"இவர்கள்?" என்று தயக்கத்தோடு கேட்டான்.

அரியநாத முதலியார் சிரித்தார். அவரைக் கண்டவுடன் அவருக்கு மரியாதை செலுத்தி விட்டுத் தங்களது வேகத்தைக் குறைத்துக் கொண்டு சென்றார்கள் அவர்கள்.

"இவர்கள் எல்லோரும் நம்முடைய குதிரைப் படையைச் சேர்ந்தவர்கள். இவர்களைப் போல் இன்னும் பலர் நமது குதிரைப் படையிலும் பீரங்கிப் படையிலும் இருக்கிறார்கள்" என்றார் முதலியார்.

வியப்படைந்தான் அப்துல். தமிழ்நாட்டில் இருந்தது போல் வேறுபட்ட சமயத்தவர்களுக்கு விஜயநகரத்திலும் இடம் இருந்தது புதுமையாகத் தோன்றியது அவனுக்கு. அதைப் புரிந்து கொண்ட அரியநாதமுதலியார் அவனுக்குச் சக்கரவர்த்தியின் பண்பைப் பற்றி விளக்கினார்.

"அப்துல்! நமது சக்கரவர்த்தி மதநெறியில் நம்பிக்கை உள்ளவரே தவிர, மத வெறியை நம்பி வாழும் பலவீனம் அவரிடம் இல்லை. அரசர்கள் என்றால் அவர்களுக்கு முக்கியமான இரண்டு பண்புகள் வேண்டும். ஒன்று, அவர்களுக்கு நாடாளத் தெரிய வேண்டும்; மற்றொன்று, பகை ஆட்சியை அழிக்கத் தெரிய வேண்டும். மதவெறியை நம்பியவர்கள் மக்களை அழிக்கும் படைத் தலைவர்களாக மட்டும் இருந்திருக்கிறார்களே தவிர, ஒரு போதும் அவர்கள் நல்லாட்சி நடத்தியதில்லை. நாடாளும் பெருங்கலையை நெறியின் வழி நிற்பவர்களால்தான் கற்றுக் கொள்ள முடியும்."— இந்தநாட்டில் எல்லாச் சமயத்தினரும் பல்வேறு தொழில்களைச் செய்து கொண்டு இன்பமாக வாழ்கிறார்கள். சக்கரவர்த்தி


செம்பாலான
அடிப்பாகம் கொண்ட
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் பாத்திரங்களில்
சுகாதார ரீதியாக
உங்கள் உணவைச்
சமையுங்கள்!
• உணவு காந்துகிறதோ,
தீய்ந்து போவதோ இல்லை.
• சூடு சமசீராகப் பரவுகிறது.
• சுத்தம் செய்வதும்,
துப்புரவாக வைத்துக்கொள்வதும்
சுலபம்—கழுவித் துடைத்தால்
போதும்—வேறெதுவும்
...செய்யவேண்டியதில்லை!
செம்பாலான அடிப்பாகம் கொண்ட ஸ்டெயின்லெஸ்
மேலும், அவை ஆயுட்காலம் வரை நீடித்துழைக்கின்றன.
அவை உங்கள் வட்டாரத்தில் கிடைக்காவிட்டாலும்,
தயாரிப்பாளர்களின் பிரதிநிதிக்கு எழுதுங்கள்:
மகாலக்ஷ்மி மெடல் இண்டஸ்ட்ரீஸ், 192 B,
இந்த வியாபாரச் சின்னத்தைப் பார்த்து வாங்குங்கள் Meghdoot

களுக்கு இருக்கும் ஆற்றலுக்கும் படைபலத்துக்கும் இவர் மட்டிலும் வெறியராக இருந்திருந்தால், அருகில் உள்ள பல நாடுகளை இதற்குள் அழித்திருப்பார். அவர் நடத்திய பெரும் போர்களில்கூடப் பகைநாட்டுக் குடிமக்களுக்கோ, பெண்களுக்கோ, குழந்தைகளுக்கோ ஒரு தீங்கும் நேர்ந்ததில்லை; நேரக் கூடாது என்பது அவரது கட்டளை.''

அரியநாத முதலியார் தமது இளம் பிராயத்திலேயே அங்கு வந்து விட்டவர். அவர் வருவதற்கு முன்பு அந்த நகரத்தில் நடந்த பல போர்களையும் மதவெறியர்களால் அந்த நகரத்துப் பெண்டிருக்கும் குழந்தைகளுக்கும் ஏற்பட்ட கொடுமைகளையும் அவர் கதை கதையாகக் கேட்டிருக்கிறார். அவரே ஒரு போர்க் கொடுமையில் அந்த நகரம் பட்ட துன்பத்தை நேரிலும் கண்டிருக்கிறார். அந்த நிகழ்ச்சிகளை அவர் துயரத்தோடு கூறிவிட்டு, ''அவ்வளவும் சக்கரவர்த்திகளுக்குத் தெரிந்திருந்தும் அவர் ஆட்சிக்கு வந்தவுடன் பழி வாங்க மறுத்து விட்டார்; நமது படைத் தலைவர்களும் அமரநாயக்கர்களும் எவ்வளவோ வற்புறுத்தியும் அவர் செவிசாய்க்கவில்லை'' என்றார்.

''காரணம்?'' என்று துடிப்போடு கேட்டான் திருவல்லபன்.

''ஒரு பாவமும் அறியாத குடிமக்களைக் கொன்று குவிக்கும் இழிசெயலை அரசர்கள் என்ற பெயர் வைத்துக்கொண்டு செய்திருப்பவர்கள் எல்லோரும் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், வெறி பிடித்த மிருகங்கள் என்று சக்கரவர்த்தி கூறுவார். அவருடைய சமயநெறிக்குச் சான்றாக இங்கே கோவில்களையும் எழுப்பியிருக்கிறார்; மசூதிகளையும் எழுப்பியிருக்கிறார்.''

அரியநாதமுதலியார் மேற்குத் திசையில் ஒருபுறம் சுட்டிக் காட்டினார். இஸ்லாமியக் குடிமக்களின் வீடுகள் நிறைந்திருந்த பகுதியில் ஒரு புத்தம் புதிய மசூதி நெடிதுயர்ந்து நின்றது. மசூதியின் சிகரத்தையும் கோயிலின் கோபுரத்தையும் மாறி மாறிப் பார்த்தான் அப்துல். எங்கும் பரவி நிற்கும் அந்த ஒப்பற்ற ஒருவனை அவை ஒவ்வொன்றும் தங்கள் தங்கள் வழியில் சுட்டிக்காட்டிக் கொண்டு நின்றன.

''சக்கரவர்த்திகள் எழுப்பச் செய்த மசூதியா இது?'' என்று பூரிப்போடு கேட்டான் அப்துல்.

''ஆமாம்.''

''இதுவரையில் நான் காணாத புதுமை!'' என்றான் வியப்புடன்.

''ஒரு பெரிய சாம்ராஜ்யமே இப்படி உருவாக வேண்டுமென்பது அவர் கனவு'' என்றார் முதலியார்.

அத்தியாயம் ஒன்பது

மீண்டும் ஓர் ஊழிப்பெருக்கா?

அரண்மனைக் கோட்டைக்குள் புகுந்தவுடன் அந்த அரண்மனையே பல மாளிகைகளால் சூழப்பெற்ற தனி நகரம் போல் காட்சியளிப்பதைக் கண்டான் திருவல்லபன். விருந்தினர் மாளிகைகள் ஒன்றில் வந்தவர்களைத் தங்கச் செய்துவிட்டு, விசுவநாதனைக் காணுவதற்காக விரைந்து சென்றார் அரியநாத முதலியார். அவனுடைய மாளிகையில் அவனைக் காணவில்லை. அரண்மனையை அடுத்திருந்த வேறொரு பகுதியில் வடக்கிலிருந்து வந்த சில புதிய விருந்தினர்களைக் கவனிப்பதில் அவன் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தான்.

வந்திருந்தவர்களைக் கண்ணோட்டம் விட்டார் அரியநாத முதலியார். ராஜபுதனத்தைச் சேர்ந்த இளவரசன் ஒருவன். மற்றொருவர் டில்லி சுல்தானின் அதிகாரிகளில் ஒருவர். அவர்களுக்குக் காவலாகப் பல வீரர்கள் திரண்டு வந்திருந்தார்கள். வந்தவர்களின் நிலையைக் கொண்டு பார்த்தபோது, தெற்கிலிருந்து சந்திரசேகர பாண்டியர் எந்தக் கோலத்தில் வந்தாரோ, அதே கோலத்தில் தான் அவர்களும் வந்திருக்க வேண்டுமென்று தோன்றியது. நீண்ட நாட்களாகத் தங்களை மறைத்துக் கொண்டு நெடு வழி கடந்து வந்தவர்கள் என்பது புலப்பட்டது.

''என்ன செய்தி?'' என்று இரகசியமாக அவர்களைப் பற்றி விசுவநாதனிடம் கேட்டார் முதலியார்.

''செய்தி விவரமாகத் தெரியவில்லை. ஒருவர் டில்லி சுல்தானைச் சேர்ந்த ஹூஸைன் கான்; மற்றொருவர் ராணாசிம்மரின் குமாரர் பிரதீப். வந்த வேலை மிக அவசரமானது என்று மட்டும் கூறுகிறார்கள்.''

''சக்கரவர்த்திகளை அவர்கள் சந்தித்து விட்டார்களா?''

''இன்னும் சந்திக்கவில்லை'' என்றான் விசுவநாதன்; ''சக்கரவர்த்திகளிடம் தெற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் வந்திருப்பவர்களைப் பற்றிக் கூறுகிறேன்; அவர்கள் விருப்பப்படி இவர்களை அழைத்துச் செல்லலாம்.''

வடக்கிலிருந்து வந்தவர்கள் கொடுத்த ஓலைகளைப் பெற்றுக் கொண்டு சக்கரவர்த்தியைக் காணச் சென்றான் விசுவநாதன். அந்தரங்க ஆலோசனை மண்டபத்தில் அமைச்சர் சாளுவ நரசிம்மரோடு பேசிக் கொண்டிருந்தார் சக்கரவர்த்தி. தெற்கிலிருந்து பாண்டியர் வந்திருப்பதையும் வடக்கிலிருந்து வேறு இருவர் வந்திருப்பதையும் கூறி, ஹூஸைன்கான் கொடுத்த ஓலையை நீட்டினான். சக்கரவர்த்தியின் முகம் ஓலையைப் பார்த்தவுடன் சட்டென்று மாறியது. அதை அமைச்சரிடம் கொடுத்தவாறே, ''முதலில் வடக்கிலிருந்து வந்திருப்பவர்களை அழைத்துக் கொண்டு வா'' என்றார்.

ஹூஸைன்கானையும், பிரதீபையும் அழைத்துச் சென்றவன், அவர்களை விட்டுவிட்டு,

அங்கிருந்து திரும்ப முயன்றான். "நீயும் கூடன் இருக்கலாம்" என்றார் சக்கரவர்த்தி.

வந்தவர்களை உற்றுப் பார்த்தார் கிருஷ்ண தேவராயர். ஹாஸன்கான் தாடியும் மீசையுமாக நெடிது வளர்ந்து, வளர்ச்சிக் கேற்ற பருமனுடன் தோற்றமளித்தார். பிரதிப் நடுத்தர உயரமும் மிடுக்கான தோற்றமும் கொண்டு விளங்கினான். வந்தவர்கள் தங்கள் நாட்டுக்கே உரிய சில பரிசுப் பொருள்களைச் சக்கரவர்த்தியிடம் வழங்கித் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்தார்கள்.

"டில்லியிலிருந்து சுல்தான் இப்ராஹிம் லோடியின் சார்பில் வந்திருக்கிறீர்களா ? அல்லது.........?" என்று ஹாஸன்கானின் விழிகளை உற்று நோக்கினார் கிருஷ்ணதேவ ராயர்.

"அவர் சார்பில் வரவில்லை. ஆனால்...."

"நீங்கள்?" என்று சட்டென்று அந்த இளைஞன் பக்கம் திரும்பினார்.

"தந்தையாரின்சார்பில்வந்திருக்கிறேன்."

"நீங்களும் ராணாசிம்மரும் நண்பர்களா?" என்று ஹாஸன்கானிடம் கேட்டார்.

"ஆமாம்."

"இப்ராஹிம்லோடி நலமாக இருக்கிறாரா? ஆட்சி எப்படி நடைபெறுகிறது?"

ஹாஸன்கான் மறுமொழி கூறவில்லை. தலையைக் கவிழ்த்துக் கொண்டார். அவரது முகத்தில் படிந்த வேதனையைச் சக்கரவர்த்தி உற்றுக் கவனித்தார். ஹாஸன்கானிடம் அவருக்கு அனுதாபம் ஏற்பட்டது.

"ஆட்சி நன்றாக நடைபெற்றுக் கொண்டிருந்தால் நீங்கள் இங்கு வருவதற்கு அவசியம் ஏற்பட்டிருக்காது. அப்படித்தானே?" என்று கேட்டார் சக்கரவர்த்தி.

"ஆமாம்" என்றார் ஹாஸன்கான்.

"அவர் ஆட்சிக்கு வந்தவுடனேயே முதல் வேலையாக அவர் தம்பி ஜலால்கானைக் கொன்று விட்டார். அடுத்தாற்போல் அவர் தம்பிக்குத் துணை செய்த அதிகாரிகளை யெல்லாம் கொன்று தீர்த்தார். ஆப்கானிய மரபைச் சேர்ந்தவராக இருந்தும் தம்மைச் சேர்ந்த லோஹானி, பார்முலி, லோடி வகுப்புப் பிரபுக்கள் மீதே பாயத் தொடங்கி விட்டார். வீரரான லாகூர் சுல்தான் தௌலத்கான் லோடியின் குமாரன் தில்வர்கானையும் சித்திரவதை செய்து விட்டதாகக் கேள்வி. இப்படியாக அங்கு தம்மைச் சுற்றியுள்ளவர்களை யெல்லாம் ஒவ்வொருவராக வேட்டையாடிக் கொண்டு வருகிறார்!" என்று கூறிய சக்கரவர்த்தி, "இதற்குத்தான் ஆட்சி நடத்துவது என்று பெயரா?" என்று கோபமாகக் கேட்டார்.

அமைச்சர் சாளுவநரசிம்மர் முதல் அங்கிருந்த அனைவருமே திடுக்கிட்டார்கள். ஹாஸன்கான் வாயடைத்துப் போனார். டெல்லியும் ஆக்ராவும் எங்கே இருக்கின்றன? விஜயநகரம் எங்கே இருக்கிறது? நேரில் கண்டவர்போல் அங்கு நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் எவ்வாறு சக்கரவர்த்திகளால் கூற முடிகிறது !

"என்னுடைய சின்னஞ்சிறு நாட்டையும் இதன் குடிமக்களையும் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டுமென்பது என் ஆசை. அதனால்தான் நான் சில செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. படையெடுக்க வேண்டுமென்று எனக்கு ஆசை இல்லை."

"சக்கரவர்த்திகளுக்கு அந்த ஆசை ஏற்பட்டால் அது இந்த நாட்டுக்கு நல்லது. அப்படி ஒரு வேண்டுகோளுக்காகவே இங்கு வந்திருக்கிறோம்" என்றார் ஹாஸன்கான்.

திடீரென்று கண்கள் சிவந்தன சக்கரவர்த்திக்கு. முன்கோபக்காரர் அவர். "துரோகிகள்! உங்கள் துரோகத்துக்கு என்னைத் துணைக்கு அழைக்கிறீர்களா? அங்கே இருப்பவன் ஏற்றவனில்லை யென்றால், அவனை ஒழித்துவிட்டு, உங்களில் யாரை யாவது நாடாளச் செய்யலாமே! வெளியிலுள்ள என் துணை எதற்கு உங்களுக்கு?"

ஹாஸன்கான் இப்படி ஒரு மறுமொழியை எதிர்பார்க்காமலில்லை. அவர் அதிர்ச்சியுறாமல் தொடர்ந்து கூறினார்.

"நாட்டுக்கோ அரசுக்கோ துரோகம் செய்யும் நினைவிருந்தால் நாங்கள் நெடுந்



தொலைவு கடந்து இங்கே வந்திருக்கமாட்டோம். நாடும் அரசும் நிலைக்க வேண்டுமென்றுதான் வந்தோம். லாகூர் சுல்தான் தௌலத்கான் லோடி வெளிநாட்டிலிருந்து இப்ராஹிமுக்கு எதிராகப் படையெடுத்து வரும்படி காபூலுக்கு ஆள் அனுப்பியிருக்கிறார். காபூலில் உள்ளவர்கள் தைமூரின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். தைமூரின் படையெடுப்பால் எங்கள் நாடே இடுகாடான பழங்கதையை நாங்கள் இன்னும் மறக்கவில்லை. சுல்தான் மகமது டில்லியை ஆட்சி செய்த காலத்தில் தைமூர் படையெடுத்து வந்தானாம். அவனோடு வந்த துருக்கிய வீரர்கள் நகரத்தில் ஓர் ஆண், பெண் குழந்தையைக்கூட உயிருடன் விடாமல் 'இறந்தவர்களின் நகரம்' என்று சொல்லும்படி அதைச் செய்து விட்டுப் போனார்களாம். சுல்தான் மகமது மட்டிலும்



"உன்னைத்தாண்டா, பாகிஸ்தான் ரேடியோவைக் கேட்டால் ஒரு வருஷம் தண்டனை; உன் பெண்டாட்டி பேச்சைக் கேட்டால் ஆயுள் பூராவும் தண்டனை!"

எப்படியோ தப்பித் தெற்கே ஓடி வந்துவிட்டார். அதே தைமூரைச் சேர்ந்த ஓர் அரசகுலத்தான் இப்போது இப்ராஹிம் லோடி மீது படையெடுக்கச் சொல்லிக் காபூலுக்கு அழைப்பு விட்டிருக்கிறார் தௌலத்கான் லோடி. சக்கரவர்த்திகளே! இந்த நிலையில் நாங்கள் ஒன்று சேர்ந்து நாட்டைக் காக்க முயல்வதைத் துரோகம் என்கிறீர்களா? இது நம் நாடு சக்கரவர்த்திகளே, நம் நாடு!"

"நம் நாடு!" என்று தாமே ஒரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டு, விழிகளில் புத்தொளி பொங்க, "இது அற்புதமான சொல் நண்பரே. அற்புதமான சொல்!" என்று உற்சாகத்தோடு கூவினார். பிறகு சட்டென்று எழுந்து ஹாஸன்கானின் கரங்களை அன்போடு பற்றிக் கொண்டு, "சற்று முன்பு நான் கூறிய சுடுசொல்லைப் பொருட்படுத்தாதீர்கள்" என்றார்.

சக்கரவர்த்தியின் அன்புப் பெருக்கு ஹாஸன்கானின் கண்களைக் கலங்கச்செய்தன.

"சக்கரவர்த்திகளே! நமக்குள் பிரிந்து நின்று இந்து வென்றும் முஸ்லிமென்றும் போரிட்டுக் கொள்வது எவ்வளவு அபாயகரமானது என்பதைத் தைமூர் நமக்கு உணர்த்தி விட்டான். ஆனாலும் அந்தப் பயங்கரமான பாடத்தை இதற்குள் வடக்கே மறந்துவிட்டார்கள். தைமூரும் சமயவெறி என்ற போர்வையோடுதான் படையெடுத்து வந்தாலும். ஆனால் அவனால், கொலை, கொள்ளை, சோரத்துக்குப் பலியான குடிமக்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள். அதே பழைய கதை திரும்பவும் நடக்கும்போல் தோன்றுகிறது" என்றார் ஹாஸன்கான்.

"நிலைமையைத் தெளிவாக உணர்ந்துகொண்டு விட்டீர்கள்!" என்றார் கிருஷ்ணதேவராயர்; "இனி 'நம் நாட்டார்; பகை நாட்டார்' என்ற ஒரே உணர்ச்சியைத் தவிர, நமக்குள் மன வேற்றுமை இருக்குமானால், இந்த நாட்டில் இனி இந்துக்களும் மிஞ்சப் போவதில்லை; இஸ்லாமியரும் மிஞ்சப் போவதில்லை. மிருக வெறி கொண்ட ஏதாவது ஒரு காட்டுமிராண்டிக் கூட்டத்திடம் நாடு பறி போய் விடும். இங்கே கோயில்களையும் காண முடியாது; மசூதிகளையும் காண முடியாது."

"அதற்காகத்தான் தங்களை இந்த நாட்டைக் காக்க அழைக்கிறோம்" என்றார் ஹாஸன்கான்.

சக்கரவர்த்திகள் சிந்தனையில் ஆழ்ந்தார். வடமேற்கிலிருந்து அலை மீது அலையாகப் பொங்கி வந்து இந்த நாட்டையே பாழ்படுத்த முயன்ற ஊழிப் பெருக்குகளின் கொடுமைகள் அவர் நினைவுக்கு வந்தன. மத்திய ஆசியாவின் துருக்கிஸ்தானத்திலிருந்தும் ஆப்கானிஸ்தானத்திலிருந்தும் சீறிப் பாய்ந்த ஊழிப் பெருக்குகள் இரத்த வெள்ளத்தைத் தெற்குக் கடற்கரை ஓரம் வரையிலும் பாய்ச்சி விட்டன. மேற்கொண்டும் அவை தெற்கில் பாய்ந்து விடாமல் தடுப்பதற்காக எழும்பிய உறுதிமிக்க அரண்தான் விஜயநகரம். இப்படி ஒரு பெரிய அரணை வடக்கே டில்லியில் எழுப்ப முடிந்தால்?

"டில்லியையும் ஆக்ராவையும் பாதுகாக்க வேண்டியது வடக்கிலுள்ள உங்களுடைய கடமை மட்டுமல்ல, விஜயநகரமும் பாமினி சுல்தான்களின் நாடுகளும் தெற்கத்தி நாடுகளும் பாதுகாக்கப்படுவதற்காகவே நாம் வடக்கே உறுதிமிக்க ஒரு கூட்டு அரண் அமைத்துப் போராட வேண்டும்!"

"ஆம், சக்கரவர்த்திகளே! அதை உடனடியாகச் செய்ய வேண்டும்."

"நான் தலையிட்ட எதிலும் இதுவரையில் தோல்வி கண்டதில்லை. ஆகவே இதையும் திட்டமிட்டுத்தான் செய்ய வேண்டும். பாமினி சுல்தான்களிடம் கூடிப் பேசி ஓர் உடன்பாட்டுக்கு வர முயல்கிறேன். நீங்கள் வடக்கே உள்ளவர்களையெல்லாம் ஒன்று திரட்டப் பாருங்கள். இதற்குச் சில மாதங்கள் ஆகலாம்."

"திடீரென்று அதற்குள் படையெடுப்பு நிகழ்ந்து விட்டால்?"

"அப்போதும் என்னால் ஆனதைச் செய்கிறேன். அது இங்கு எனக்கு மற்ற அரசர்களிடம் கிடைக்கும் ஒத்துழைப்பைப் பொறுத்திருக்கிறது. எதற்கும் நீங்கள் திரண்டு நின்று முழு மூச்சோடு போராடுங்கள்."

"நன்றி சக்கரவர்த்திகளே!" என்று கூறி விடைபெற்றுக் கொண்டு சென்றார்கள் அவர்கள். சக்கரவர்த்தி செம்புச் சிலையாக மாறி விட்டார். காத்திருக்கும் பாண்டியரை அழைக்க வேண்டுமென்ற நினைவுகூட அவரிடம் எழவில்லை. (தொடரும்)

பெப்ஸோடெண்டின் 'இரியம் ப்ளஸ்'

உங்கள் பற்களை சுத்தம் செய்து வெண்மை பளிச்சிடச் செய்யும்



எப்படி என்று பாருங்கள் : பெப்ஸோடெண்டில் மட்டுமே அற்புத நுரையை உண்டுபண்ணும் 'இரியம் ப்ளஸ்' உள்ளது. இது விந்தையான முறைப்படி பிரத்தியேகமாக கண்டுபிடிக்கப்பட்ட சேர்க்கைப் பொருளாகும். இதனால் ஏராளமாக அற்புத நுரை உண்டாகி உங்கள் வாயின் உட்புறம் முழுவதையும், பற்களையும் நன்றாக சுத்தம் செய்யும்... பெப்பர்மின்டைப் போல வாய்க்கு குளிர்ச்சியும், புத்துணர்ச்சியும் ஊட்டும். 'இரியம் ப்ளஸ்'ஸின் தனிப்பட்ட சக்தியால் பற்கள் இயற்கை வெண்மையுடன் பிரகாசிக்கும். அற்புத வெண்மை அளிப்பது பெப்ஸோடெண்டின் தனிப்பட்ட தன்மை.

இந்துஸ்தான் லீவர் லிமிடெடின்
ஓர் உன்னத தயாரிப்பு





சேவைக்கு ஒரு சகோதரி

மோனிகா ஃபெல்டன்
— அநுத்தமா

தனக்குச் சகாயம் புரிய வேறு யாராவது வயதானவர்கள் கிடைப்பார்களா என்று தேடிக் கொண்டே சுப்புலக்ஷ்மி அந்தப் பெரிய மாடிப்படிகளில் ஏறிச் சென்றாள். ஒரு வகுப்பறையிலிருந்து பியூன் உடுப்பு அணிந்திருந்த ஒரு வேலையாள் வெளியே வந்தான். அவள் அவனிடம் பணத்தைத் தந்து விட்டு, அவன் பின்னாலேயே சென்று கிருஷ்ணசுவாமியைச் சுட்டிக் காட்டினாள். பிறகு மாணவிகளின் உபயோகத்துக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குச் சென்றாள். அங்கு வேறு பல பெண்கள் இருந்தனர். அவர்கள் எல்லோருமே அவளுக்குப் புதியவர்கள், அயல்நாட்டினர் அல்லது ஆங்கிலோ இந்தியர்கள். அவர்கள் அவளை மரியாதையுடன் வரவேற்றனர். ஆனால் கலகலப்பாகப் பேசவில்லை. அவளை ஒதுக்கும் பாவத்துடன் நடந்து கொண்டார்கள். அவள் அவர்கள் 'உலக'த்தைச் சார்ந்தவள் அல்ல போலும்.

பாடங்கள் ஆரம்பித்தவுடன் அவள் நிலைமை மேலும் மோசமாகிவிட்டது. அவள் வகுப்புக்குள் நுழைந்ததும் மாணவர்கள் கைதட்டிக் கூவிக் கேலி செய்து, ஆர்ப்பரித்தார்கள். ஆசிரியர்களும் அவள் அங்கு இருப்பதைச் சங்கடமாகக் கருதினார்கள் என்றே தோன்றியது. அவள் இருக்கும் திசைக்கு எதிர்ப்புறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு அவர்கள் மெதுவாக முணுமுணுக்கும் குரலில் பாடம் சொல்வதைப் புரிந்து கொள்வதே கஷ்டமாக இருந்தது. பாடங்கள் முடிந்த பிறகு சில மாணவர்கள் மேடை ஏறி ஆசிரியரிடம் சென்று தங்களுக்குத் தெரியாததைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். சுப்புலக்ஷ்மிக்கு அவ்வாறு செய்யத் துணிவு வரவில்லை. அவள் அவ்வாறு செய்திருந்தாலும், பாவம், அந்த ஆசிரியர் பதில் சொல்ல முடியாமல் குழம்பியிருக்கலாம்.

வயது முதிர்ந்தவரான ஓர் ஆசிரியர் தமது அறைக் கதவைத் திறந்தே வைத்திருந்து, சுப்புலக்ஷ்மி தாழ்வாரத்தில் நடந்து சென்றபோதெல்லாம் எழுந்து நின்று அவளையே வெறித்துப் பார்ப்பார்.

அதைப் பற்றிச் சகோதரி என்னிடம் கூறும் போது விளக்கினார்: ''அவருக்கு மனசில் ஒன்றும் கிடையாது. ஓர் இளம் விதவை மற்ற எல்லாப் பெண்களையும் போல் சர்வசாதாரணமாக உடையணிந்து நடமாடிக் கல்லூரியில் படிக்க முயல்வது அவருக்குப் பழக்கப் படுத்திக் கொள்ள முடியாத புதிய

அனுபவமாக இருந்தது. பிற்காலத்தில், நான் உபாத்தியாயினியான பிறகு அவர் தம் மனைவியையும் பெண்களையும் பி. டி. பள்ளிக்கு அழைத்து வந்தார். என் குடும்பத்தினரைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுவதாகக் கூறினார். சில வருஷங்களுக்குப் பிறகு அவருடைய ஒரு பெண் விதவையாகி விட்டாள். அவளை என்னிடம் அழைத்து வந்து விட்டார். அவளுக்குப் படிப்பறிவு புகட்டுமாறு கேட்டுக் கொண்டார். புத்திசாலியான நல்ல பெண் அவள். பட்டம் பெற்ற பிறகு என் காரியதரிசியாகச் சில வருடங்கள் பணியாற்றினாள்.''

சுப்புலக்ஷ்மி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது, புருஷர்களுடனும் பையன்களுடனும் சகஜமாகப் பேசிப் பழகுவதைத் தான் சிரமமின்றி இயல்பாக ஏற்றுக் கொள்ளக் கூடிய நாள் ஒன்று வரும் என்று நம்பவே இல்லை. காலம் செல்லச் செல்ல, தான் அவர்களுடன் இருப்பதின் புதுமை ஓரளவு மங்கிய பிறகு, கல்லூரி மாணவர்கள் அமைதி அடைந்து, தனக்குத் தொல்லை கொடுப்பதையும் விட்டு விடுவார்கள் என்று மட்டும் அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்தது போல் நடக்கவில்லை. இந்தத் தொல்லைகளில் அவள் மட்டும் தனியாக இல்லை. அவள் பெற்றோருக்குத் தெரிந்த குடும்பங்களைச் சேர்ந்த இன்னும் மூன்று பிராமணப் பெண்கள் கல்லூரியில் சேர்ந்திருந்தார்கள். அவர்களுக்குக் கல்யாணம் ஆகியிருந்தது. ஆயினும், அவர்களும் சுப்புலக்ஷ்மியைப் போலவே துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால், அவர்கள் எல்லோரும் ஒரே பாடத்தைப் படிப்பவர்களாதலால் அவர்களுக்குத் தொல்லையைப் பொறுப்பது கொஞ்சம் எளிதாக இருந்தது. சுப்புலக்ஷ்மியைப் போல் ஆண்கள் நிறைந்த அறையில் ஒரே பெண்ணாக, தன்னந் தனியாக அமர வேண்டிய நெருக்கடி அவர்களுக்கு நேரவில்லை.

சுப்புலக்ஷ்மி குறைப்பட்டுக் கொள்ளவில்லை. தான் தொடர்ந்து படித்தாக வேண்டும் என்பதில் அவள் உறுதியாக இருந்ததால் இவ்விதம் தான் கஷ்டப்படுவதைத் தன் குடும்பத்தினர் அறியக் கூடாது என்பதில் கவனமாக இருந்தாள். ஆனால் அவர்கள் சீக்கிரமே அதைப் புரிந்து கொண்டுவிட்டார்கள். அதுவும் மிகவும் அவமானமான தொரு வகையில். முதல் வருஷ இறுதிப் பரீட்சையில் அவளுக்கு மிகவும் பிடித்த பாடமான கணிதத்தில் அவள் தோற்றுப் போய் விட்டாள்.

அவளுடைய ஆயுளில் இதுவே முதல் தோல்வி. அவள் மிகவும் நொந்து அழுது விட்டாள்.

அவள் தந்தை அவளுக்கு ஆறுதல் கூறினார்: ''இது உன் தவறல்ல. கணிதத் திறன் நம் குடும்பத்தினருக்கு ரத்தத்திலேயே ஓடுகிறது என்பதை எல்லாரும் அறிவார்கள். ஆனால் அதில் தேர்ச்சி பெற உனக்கு நியாயமாகக் கல்லூரியில் கிடைக்க வேண்டிய வாய்ப்புக்கள், சௌகரியங்கள் எதுவும் கிடைப்பதில்லை. அதுதான் சங்கடம்.. அடுத்த வருஷ ஆரம்பத்திலேயே நீ வேறு பாடம் எடுத்துக் கொண்டுவிடு. மற்றப் பெண்கள் என்ன படிக்கிறார்கள் என்று கண்டுகொண்டு அந்த வகுப்பிலேயே நீயும் சேர்ந்துவிடு. நீங்கள் எல்லோரும் ஒன்றாக இருக்கும்போது இவ்வளவு தொந்தரவு உனக்கு ஏற்படாது. அப்படியே ஏற்பட்டாலும் தனியாக இருப்பதை விட நாலு பெண்களுடன் சேர்ந்திருக்கும்போது அதைப் பொறுத்துக் கொள்வது சுலபமாயிருக்கும்.''

அவர் சொல்வது சரிதான் என்று அவளுக்கும் உறுதியாகப் பட்டது. அடுத்த கல்லூரி ஆண்டு ஆரம்பித்ததும் கல்லூரியிலே நுழைந்தவுடனே அவள் யார் யார் என்ன படிக்கப் பெயர் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்கும் பட்டியலைப் பார்த்தாள். அநேகம் பெண்கள் தாவர சாஸ்திரத்தைத் தங்கள் விசேஷ (ஹானர்ஸ்) பாடத்துக்குத் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

இதைப் பற்றி இன்று என்னிடம் கூறும்போது சகோதரி, இளவயதினளான சுப்புலக்ஷ்மியை நினைத்துச் சிறிது சிரித்துக் கொண்டார். பிறகு பேசினார்: ''எனக்கு அப்போது தாவர சாஸ்திரம் என்றால் என்ன என்றுகூடத் தெரியாது. அதற்கு முன் 'பாடனி' என்ற ஆங்கில வார்த்தையை நான் கேள்விப்பட்டதே இல்லை. இருந்தாலும் என் பெயரைக் கொடுத்து விட்டேன். பின்னால் நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். செடிகள், மரங்கள் இவற்றின் தன்மைகளைப் பற்றி அறிய நான் எப்பொழுதுமே உள்ளூற ஆவல் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் கணிதத்தை விட்டுவிட வருத்தமாக இருந்தாலும், இவ்வாறு மாற்றிக் கொண்டது மிகவும் நன்மையாயிற்று என்றே அப்புறம் கருதினேன்.''

சுப்புலட்சுமிக்கு இன்னும் பல இன்னல்கள் காத்துக் கொண்டிருந்தன. கல்லூரிக்குப் போய் வரும் பயணம் மேலும் மேலும் கடினமாகிக் கொண்டிருந்தது. அவளுடைய புடவைக் கரையைப் பார்ப்பதற்காக மற்றக் கல்லூரி மாணவர்களும் நடைபாதையில் காத்துக்கொண்டு நிற்பது வழக்கமாகி விட்டது.

''அவர்கள் என்ன, உங்களைக் காதலிப்பதாக நினைத்துக் கொண்டு விட்டார்களோ?'' என்று நான் கேட்டேன்.

''அப்படி ஒன்றுமில்லை'' என்றார் சகோதரி. அத்தகைய பிரஸ்தாபமே சகோதரிக்கு வெறுப்பளித்தது என்பது அவருடைய குரலிலிருந்தே தெரிந்தது. ''அவர்களில் பெரும்பாலோர் கிராமப் புறங்களிலிருந்தும் மற்ற ஊர்களிலிருந்தும் சென்னைக்குப் படிக்க வந்தவர்கள். அவர்களில் அநேகருக்குக் கல்யாணம் ஆகவில்லை. அவர்கள் காதலைப் பற்றிச் சிந்திக்கவே காரணமேதுமிருக்கவில்லை. அவர்களுடைய கிராமங்களிலும், சிறு நகரங்களிலும் பல வயதுவந்த பெண்கள் வெளியே தலைகாட்டவே அனுமதிக்கப் படுவதில்லை யாகையால், தங்கள் குடும்பத்துப் பெண்களைத் தவிர இதர பெண்களை அவர்கள் அதிகமாகப் பார்த்திருக்க மாட்டார்கள். அதனால் அவர்களுக்கு ஒரு குறுகுறுப்பு; அசட்டு ஆவல். அவர்கள் அப்படி நடந்துகொண்டதற்குக் காரணம் இதுதான்; வேறொன்றுமில்லை.

''வகுப்புக்களில் ஆண்பிள்ளைகள் மிக மிக விஷமக்காரர்களாகி விட்டார்கள். என்னையும் என் சிநேகிதிகளையும் துன்புறுத்த அவர்கள் புதிய புதிய சூழ்ச்சிகளை யோசித்த வண்ணமிருந்தார்கள். அவர்கள் எங்கள் பெயர்களைச் சுவரில் எழுதி விடுவார்கள். அல்லது மேஜைகளில் செதுக்கி விடுவார்கள். அதைக் கண்டவுடன் ஏதாவது வம்பு கிளம்புமோ என்று நாங்கள் நடுங்கிவிடுவோம்'' ஸிஸ்டர் என்னைத் திகிலுடன் பார்த்து, ''என்னைப் பற்றி எழுதும்போது நீங்கள் இதையெல்லாம் குறிப்பிட்டுவிட மாட்டீர்களே?'' என்று கேட்டார்.

''நீங்கள் வேண்டாமென்றால் கட்டாயம் எழுத மாட்டேன். ஆனால் ஏன் எழுதக் கூடாது?''

சிறிது யோசித்துவிட்டுச் சகோதரி விட்டுக் கொடுத்தார். ''பரவாயில்லை; யாருடைய பெயரையும் இழுக்காமல் இருந்தால் சரிதான். என் நண்பர்களான



தாழம் பூ

இட்டிலி சுமாராக இருந்தால் சட்னியின் பலத்தில் சாப்பிட்டு விடுவது உண்டு.

சங்கீதக் கச்சேரிகளில் பிரதான பாடகரின் பாட்டு சுமாராக இருந்தால், பக்கவாத்தியம் நன்றாக இருப்பதைக் கேட்டு ரஸித்து மனத் திருப்தியடைவது உண்டு.

அதேபோல், தமிழ் சினிமாவில் பிரதான கதையம்சம் உப்புசப்பு என்றிருந்தாலும் பாட்டு, டான்ஸ், குத்துச் சண்டைகள் ஆகிய பக்கபலங்கள் இருப்பதைக் கண்டு ரஸிகர்கள் திருப்தியடைந்து வந்தார்கள்.

ஆனால் இப்பொழுது எல்லாம் தலை கீழாக மாறி விட்டன.

சட்னி இந்த ஹோட்டலில் நன்றாக இருக்கும் என்பதற்காக இட்லி சாப்பிடுவதும், பக்க வாத்தியங்கள் உயர்ந்தவை என்பதற்காகச் சங்கீதக் கச்சேரிக்குப் போவதும் ஏற்பட்டாற் போல், பாட்டு, டான்ஸ், குத்துச் சண்டைக்கு வாய்ப்பிருந்தால் போதும் கதையைப் பற்றி அக்கறை இல்லை என்று பட முதலாளிகள் நினைப்பதும் சகஜமாகி விட்டது. இல்லையானால் ஒரு நல்ல கதையை இப்படி சர்வ சாதாரணமாகத் 'தாழம் பூ'வில் கையாண்டிருப்பார்களா?

ஸ்ரீ பால முருகன் பிலிம்ஸார், கொட்டாரக்கரா அவர்களின் கதையைத் 'தாழம் பூ' என்ற பெயரில் எம். ஜி. ஆர். கே. ஆர். விஜயா, எஸ். ஏ. அசோகன் எம். என். நம்பியார், நாகேஷ், மனோரமா, மணிமாலா முதலிய நடிக நடிகையர்களைக் கொண்டு எடுத்திருக்கிறார்கள். கதையில் உணர்ச்சி பூர்வமாக நடிக்கும் கட்டங்களுக்கு வாய்ப்பிருந்தும் அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல், அர்த்தமற்ற டான்ஸ்களுக்கு அதிக இடத்தை அளித்து விட்டார்கள் என்ற உணர்ச்சிதான் ஏற்படுகிறது.

கே. ஆர். விஜயா நன்றாக நடித்திருக்கிறார். அசோகன் தமது நடிப்பில், சிவாஜிகணேசனை நினைவூட்டுவது ரஸிக்கவில்லை.

'வாலி'யின் பாடல் கருத்துச் செறிந்ததாக இருக்கிறது! எம். ஆர். ராதாவின் அடக்கமான நடிப்பு சோபிக்கிறது! நாகேஷின் ஹாஸ்யங்கள் சிரிப்பூட்டுவனவாக இருக்கின்றன!



''உன்னை வேலைக்கு எடுத்துக் கொண்டால் என்ன சம்பளம் தரணும்?''
''ம்...ம்...ம்! எனக்கு எதுக்குங்க சம்பளம்? இந்த ஒரு சாண் வயத்துக்கு மூணு வேளைக்குச் சோறு போடுங்க, போதும்!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

அப்பெண்களின் பெயர்களைக் குறிப்பிடுவது கொஞ்சமும் சரியாகாது.''


''அப்படியே ஆகட்டும்'' என்று நான் சம்மதித்தேன். அவர்கள் எல்லோரும் இன்று இந்தியா முழுவதும் பிரபலமாகி விட்ட பெண்கள். அவர்களில் இருவர் உலகப் பிரசித்தி பெற்றுவிட்டார்கள்.

பையன்கள் செய்த விஷமம் மிகவும் அதிகமாக இருந்தபடியால், வகுப்பினுள் நுழையும்போது என்ன தொல்லைகள் காத்திருக்குமோ என்று அந்த இளம் பிராமணப் பெண்கள் சதா நடுங்கினார்கள். பையன்கள் எல்லோரும் தங்கள் இடங்களில் அமரும்வரை அவர்கள் வெளியில் வராந்தாவில் நின்று கொண்டிருப்பார்கள். பிறகு, பாடம் சொல்ல வேண்டிய ஆசிரியர் தோற்றமளித்ததும் அவர் பின்னாலேயே உள்ளே சென்று சீக்கிரமாகத் தங்கள் இடங்களில் அமர்ந்துகொண்டு விடுவார்கள். இவ்வளவு முன்ஜாக்கிரதையாக இருந்தும் தப்ப முடியவில்லை. ஒரு நாள் சுப்புலக்ஷ்மி உட்காரப்போகும் தருணத்தில் தன் நாற்காலியின் ஒரு காலை அறுத்து விட்டிருக்கிறார்கள் என்பதைக் கவனித்தாள். இருப்பினும் எப்படியோ சிரமப்பட்டு அவள் நிலைகுலையாமல் உட்கார்ந்து சமாளித்தாள். இப்படி அமர்ந்திருப்பது ஆசிரியர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனிக்க முடியாத அளவுக்குக் கடினமாக இருந்தது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பெண்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு பியூனுக்குப் பணம் தந்து அவனை ஒவ்வொரு வகுப்புக்குள்ளும் சென்று அவர்கள் உட்கார வேண்டிய ஆசனங்களை ஒரு தடவை சரி பார்த்துவிட்டு வரும்படி செய்தார்கள்.

நிலைமை இன்னும் மோசமாவதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. சில வெட்கமற்ற மாணவிகள் அந்த ஆண்பிள்ளைகள் செய்வதொன்றையும் பொருட்படுத்தாதது மட்டுமின்றித் தூண்டிக்கூட விட்டார்கள். ஒரு சமயம் ஆங்கிலம் படித்து வந்த மாணவ மாணவிகளை ''அடக்கம் என்பது பெண்ணுக்கு இயற்கையாக அமைந்ததா? அல்லது தங்களுக்கு இருப்பது போல் அவர்கள் பாவனை செய்யும் ஒரு குணமா?'' என்ற பிரச்னை பற்றி வியாசம் எழுதச் சொல்லி யிருந்தார்கள்.

சகோதரி சொன்னார்: ''ஆங்கிலப் பேராசிரியரின் வகுப்புக்கு அடுத்தாற்போல் இருந்த பெண்களுக்கான பிரத்தியேக அறையில் நாங்கள் அமர்ந்திருந்தோம். அந்த ஆங்கில வகுப்பில் ஒரு பெண் இருந்தாள். அன்று வியாசங்கள் திருப்பித் தரப்படும்போது அடுத்த அறையில் பேராசிரியர், எதையோ உரக்கப் படிப்பது எங்களுக்குக் கேட்டது. வார்த்தைகள் விளங்கவில்லை. நிறையச் சிரிப்பொலி கேட்டது. பையன்கள் காலால் தரையில் உதைப்பதும், மேஜையின்மீது ஓங்கி அடிப்பதுமாக இருந்தனர். குறிப்பிட்ட அந்தப் பெண் எங்கள் அறைக்குத் திரும்பி வந்தவுடன் ஓசைக்குக் காரணம் என்னவென்று நாங்கள் வினவினோம். அவள் பதில் அளித்ததும் நாங்கள் தவித்து விட்டோம். பெண்கள் உண்மையில் இயல்பான அடக்க குணம் உள்ளவர்கள் அல்லவாம். ஆண்களை வசீகரிப்பதற்காகவே அடக்கம் என்ற போர்வையைப் போர்த்திக் கொள்கிறார்களாம்! இப்படி அவள் எழுதியிருந்தாளாம். அவளுடைய வியாசத்தைத் தான் பேராசிரியர் உரக்கப் படித்துக் காட்டினாராம். இந்தத் துடுக்கான, அடக்கமற்ற பெண் எங்களிடம் இதைச் சொல்லும்போதும் தனக்குத் தானே சிரித்துக்கொண்டாள். நாங்கள் அவளை நன்றாகத் திட்டினோம். உண்மையில் பெண் இனத்துக்கே துரோகம் செய்து விட்டாள் என்று எங்களுக்கு அவளிடம் மிகவும் கோபம்.''

இரண்டாம் பாகம் முற்றிற்று


LIFEBUOY
for health
LIFEBUOY

கந்தன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

55. பட்சியை சிட்சித்த பரமன்

அவுண சேனையனைத்தையும் இழந்த சூரன் ஆற்றாமை தாங்கொணாது 'அம்மா' என்று தன் தாயான மாயையை அழைத்தான். அவனது அம்மா மாயா தேவி உடனே அங்கு தோன்றினாள்.

''தாயே, நான் தனித்து நிற்கிறேன். நீதான் எனக்கு உதவி புரிய வேண்டும்'' என்று அவளை வேண்டிக் கொண்டான் சூரபன்மன்.

''மகனே! எல்லோரும் அழிந்தபின் கூட உன் மனம் தெளிவு பெறவில்லையே? தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க விரும்பவில்லை. முழுமுதற் கடவுளாகிய முருகவேளைப் பாலகன் என்று எண்ணி விட்டாய். அவரை எதிர்க்கக் கூடாது'' என்று மாயை புத்திமதி கூறினாள். மாயையே ஞானத்தைப் பேசினாள் என்பது விந்தையிலும் விந்தையன்றோ? ஆனால் இதற்கும் மசியவில்லை, அழிவை நாடிவிட்ட அவுணனின் அறிவு.

''அம்மா! நீ எனக்கு உபதேசம் செய்ய வேண்டியதில்லை. உதவிதான் செய்ய வேண்டும். உதவப் போகிறாயா இல்லையா?'' என்று கோபத்துடன் கேட்டான் சூரபன்மன்.

''என்ன உதவி செய்ய வேண்டும்?'' என்று கேட்டாள் மாயை.

''இறந்தவர்கள் எல்லோரும் மீண்டும் உயிர் பெற்று எழுவதற்கு வழி சொல்'' என்று கேட்டான் சூரபன்மன்.

மாயையும் அதற்கு வழி கூறலானாள். ''மகனே, ஏழு கடல்களுக்கப்பால் அமுத சீத மந்தர கூடம் என்று ஒரு மலை இருக்கிறது. அதனை இங்கே கொண்டு வந்தால் இறந்தவர்கள் எல்லோரும் உயிர் பெற்று எழுவார்கள்.'' இவ்வாறு கூறி மறைந்தாள் மாயை.

சூரபன்மன் இந்திரஞாலத் தேரினின்றும் இறங்கிச் சிங்க வாகனத்தில் ஏறிக் கொண்டான். இந்திர ஞாலத் தேரை நோக்கி, ''நீ ஏழு கடல்களுக்கும் அப்பால் உள்ள அமுதகூட மந்தர மலையை இங்கே கொண்டு வா'' என்று ஏவினான்.


இந்திர ஞாலத் தேர் ஏழு கடல்களையும் கடந்து சென்று அமுதசீத மந்தர மலையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்தது. அந்த மலையின் காற்றுப் பட்டவுடன் இறந்த அசுரர்கள் அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர். அசுரத் தரப்பில் இறந்து வீழ்ந்த குதிரைகளும், யானைகளும் எழுந்தன. சிங்கங்கள் எழுந்தன. சிங்கமுகாசுரன் எழுந்தான். பானுகோபன் எழுந்தான். அக்கினி முகன் எழுந்தான். வச்சிர வாகு எழுந்தான். தருமகோபன் எழுந்தான். அதிசூரன், அசுரேந்திரன் ஆகியோரும், மூவாயிரவரும் மற்றையோரும் உயிர் பெற்று எழுந்தனர்.

சூரபன்மன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். இவ்வளவு காலப்போரில் அவன் இழந்ததவ்வளவையும் அல்லவா மீண்டும் பெற்று விட்டான்? 'இனி உய்வு இல்லை' என்று தேவர்கள் ஏங்கினார்கள். பூத வீரர்கள் கலங்கினார்கள்.

முருகவேள் மட்டும் முறுவல் பூத்தார். ஏனைய பூதப் படையினரும் தேவரும் தாங்கள் மகத்தான போர் புரிந்து தமது திறத்தைக் கொண்டே இவ்வளவு நாள் போரில் அவுணர்களைக் கொன்றதாகச் செருக்குற்றிருக்கக்கூடும் அல்லவா? அத்தகைய செருக்கைக் களைய வேண்டுமென்றே இன்று இறந்த அசுரர் யாவரும் உயிர் பெற்றுத் தனியொருவரான தம்மாலேயே வெல்லப் படுவதற்காக வந்துற்றனர் என்று கருதினார் கந்தசுவாமி. சர்வ சம்ஹார அஸ்திரத்தை எடுத்தார்.

திருச்செய்ஞலூர் என்பது சண்டேசுவர நாயனார் அவதரித்த தலம். அங்கே முருகப் பெருமான் சிவபெருமானைப் பூஜை செய்தபோது சிவபெருமான் இந்த சர்வ சம்ஹார அஸ்திரத்தை அளித்தார். அதனை இப்போது எடுத்து விடுத்தார் சுவாமி. அந்த அஸ்திரம் விரிசடைக் கடவுள் திரிபுரமெரித்தது போல் யாவரையும் கண நேரத்தில் ஒருங்கே அழித்தது. மாண்டவர்கள் அனைவரும் எவ்வளவு வேகமாக உயிர் பெற்று எழுந்தார்களோ, அவ்வளவு வேகமாக அழிந்தும் விட்டார்கள். இந்திரஞாலத் தேரின் மீதிருந்த அமுதசீத மந்தர கூடமும் தூளாகியது. இனி அவர்களைப் பிழைப்பிக்க வழி ஏது?

கனவிலும் கருதவொண்ணாத நிதியம் கிடைத்த பின் கிடைத்த வேகத்திலேயே கைவிட்டுச் சென்றது போல் சூரபன்மன் சோர்ந்தான். உற்றம், சுற்றம் அனைத்தும் இழந்த சூரபன்மன் முருகவேளும் தன்னைப் போல் தனித்திருக்க வேண்டும் என்று கருதினான்.



தனித்திருக்கும் ஏகநாயகன்தான் ஐயன் என்பதை அவன் எப்படி அறிவான்?

இந்திர ஞாலத் தேரை நோக்கிய சூரன், ''நீ பூதரையும் வீரரையும் கவர்ந்து சென்று அண்டகோளகையின் உச்சியில் அடைத்து வைத்துக் கொண்டிரு'' என்று கட்டளை இட்டான். இந்திரஞாலத் தேர் வீரவாகு முதலிய வீரர்களையும், இலக்கத்தொன்பதின்மரையும், இரண்டாயிரம் பூத வெள்ளங்களையும் மயக்கி வாரிக்கொண்டு அண்டகோளகைக்குச் சென்று சூரபன்மன் கட்டளைப்படி அங்கேயே அடைத்து வைத்துக் கொண்டிருந்தது.

முருகவேள் தனித்து நின்றார்.

முருகவேளுடன் தன்னந்தனியாக நிற்கும் மகா அநுபவத்தை அருணகிரி நாதர் இன்னம் ஒருவருக்கு இசைக்க இயலாது என்பார். சூரனும் தான் சுவாமியுடன் தன்னந்தனியாக நின்றான். ஆனால் உணர்வில் என்னே மாறுபாடு?

முருகனைத் தனித்து நிற்கச் செய்த இந்திர ஞாலத் தேரின் வலிமையைக் கண்டு சூரன் வியந்தான்; மகிழ்ந்தான். அந்த வியப்பையும், மகிழ்ச்சியையும் விநாடியில் தவிடுபொடி செய்ய வேலாயுதப் பெருமான் அறிய மாட்டாரா? கணையை எடுத்தார் சுவாமி; வில்லிற் பூட்டி விடுத்தார். அப்படை வேற்படை போன்று ஒளி வீசி எல்லா உலகங்களையும் கடந்து சென்று இந்திர ஞாலத் தேரை அடைந்து அதன் ஆற்றலை அழித்தது. பிறகு அத்தேரைப் பூமிக்குக் கொண்டுவந்து பெருமான் முன்னிலையில் நிறுத்தியது. அதனின்று வீரவாகு தேவரும் மற்ற வீரரும் பூதரும் மண்ணிற் குதித்து முருகப் பெருமானை வணங்கினார்கள். இந்திர ஞாலத் தேரை நோக்கிய குமாரக் கடவுள், ''இனி சூரபன்மனிடம் செல்லாதே; இங்கேயே நில்'' என்று பணித்தார். அந்த ஆணையின் வண்ணமே தேர் பெருமான் அருகில் நின்றுவிட்டது.

தேர் போய் விட்டாலும் சூரனுக்கு ஒரு சிங்க வாகனம் உண்டு. அதன் மீது ஏறிச் சினத்துடன் கந்தவேள்மீது கணைகளைப் பொழிந்தான். முருகப் பெருமானும் சினத்துடன் கணைகளை விடுத்துச் சூரபன்மன் விடுத்த கணைகளையெல்லாம் அழித்தார். சூரபன்மன் எம்பெருமானின் தேர்ப் பாகனாகிய வாயுவின் மீது பாணங்களை விடுத்தான். வாயுவின் உடல் எல்லாம் புண்பட்டது. வாயு தேவன் வருந்திப் புலம்பித் தேர்க் குதிரைகளை ஓட்டாமலிருந்தான். எம்பெருமான் உடனே ஆயிரம் கணைகளைச் செலுத்திச் சூரபன்மனின் வில்லைத் துண்டித்தார். சூரன் முன்பு சிவபெருமான் அளித்திருந்த முத்தலைச் சூலத்தை எடுத்துக் கொண்டு முருகவேளை நெருங்கினான். அவனது வாகனமாகிய சிங்கம் சீறிப் பாய்ந்து முருகவேளின் தேர்க் குதிரைகளை அடித்துப் புண்படுத்தியது. சூரபன்மன் முத்தலைச் சூலத்தைச் சுழற்றிக் கந்தவேள் மீது வீசினான். மின்போன்று ஒளி வீசிய அச் சூலம் ஆகாய வழியாகச் சென்றது. செல்லும்பொழுது தீ சிந்தியது; இடிகள் முழக்கமிட்டன. அந்தச் சூலத்தின் மீது பெருமான் ஆயிரம் கணைகளை விடுத்தார். அக்கணைகளையெல்லாம் அழித்த சூலம் முருகப் பெருமானை நெருங்கியது. ஆறுமுகக் கடவுள் தம்முடைய திருக் கரத்திலிருக்கும் குலிசத்தை நோக்கி, ''சூரபன்மன் விடுத்த சூலத்தைப் பிடித்துக் கொண்டு வா'' என்று கட்டளையிட்டார். குலிசம் அனல் மழை பொழிந்து சென்று சூலத்தின் மூன்று தலைகளையும் கவ்விக்கொண்டு அதனைக் கைதியாக்கி இழுத்து வந்தது. செவ்வேள் இரண்டாயிரம் கணைகளை விடுத்துச் சூரபன்மனின் வாகனமாகிய சிங்கத்தைச் சம்காரம் செய்தருளினார்.

சூலமும் சிங்கமும் அழிந்ததைக் கண்ட சூரபன்மன் ஊழித் தீப்போல் வெருண்டான். மாயத்தினால் ஒரு பெரிய சக்கரவாகப் பறவை வடிவத்தை எடுத்து உலகமெல்லாம் அஞ்சும்படி சிறகுகளை வீசி ஆகாயத்திலே பறந்தான்.

சக்கரவாகப் பறவை ஆகாயத்திலேயே பிறப்பது; பூலோகத்தில் அது ஒருபோதும் தங்காது. சூரியனின் வெப்பம்தான் அதற்கு ஆகாரம். சக்கரவாகப் பறவை ஆகாயத்தில் பறக்கும்போது முட்டையிடும். அந்த முட்டை வெப்பத்தினால் பூமியை நோக்கி வரும். அவ்வாறு வரும்போதே முட்டை வெடித்துக் குஞ்சு வெளியே வரும். குஞ்சு வெளியே வந்ததும் பூமிக்கு வராமல் தாய் தந்தையரிடமே ஆகாயத்துக்குப் பறந்து விடும்.

அந்தப் பறவையின் உருவத்தைத் தான் எடுத்துக் கொண்டான் சூரபன்மன்; வானத்தில் பறந்தான். தன் சிறகுகளினால் கதிரவனின் ஒளியையும் மறைத்துத் திரிந்தான். கடல் போல் திரண்டிருந்த பூத சேனைக்குள் புகுந்து சிறகுகளால் அடித்தான். மூக்கினால் கொத்திச் சிலரை விழுங்கினான். முருகப் பெருமானின் தேரைச் சூழ்ந்து கொண்டு தேர்ப் பாகனை அடித்தான். தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரை

களைக் கொத்தினான்; பூதப் படைத் தலைவர்களைப் பிடித்துக் கொண்டான். இவ்வாறாக, சூரபன்மன் ஆகாயத்தில் பறந்து திரிந்து அமர்க்களம் செய்து கொண்டிருந்தான்.

சக்கரவாகப் பறவை வடிவங் கொண்ட சூரபன்மன் மீது எம்பெருமான் பலகோடி கணைகளை விடுத்தார். அவற்றையெல்லாம் சிறகுகளாலும், அலகாலும், காலாலும் அடித்து முறித்தான் சூரபன்மன்.

'பட்சி உருவங் கொண்டவனைத் தேரோடு தொடர்ந்து செல்வது முறையன்று' என்று திருவுளங் கொண்ட முருகவேள் இந்திரனை நோக்கினார். ஆண்டவனது அருட்குறிப்பையுணர்ந்த இந்திரன், நீண்ட தோகையுடைய மயில் உருவங் கொண்டு வந்து வணங்கித் துதித்தான். "பறவை வடிவங் கொண்ட சூரபன்மன் செல்லும் இடங்களுக்கெல்லாம் சென்று போர்செய்து வெல்ல அடியேன் மீது எழுந்தருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். ஆறுமுகப் பெருமான் தேரினின்றும் இறங்கி இந்திரனாகிய மயில் மீது ஏறிக் கொண்டு சூரபன்மனாகிய சக்கரவாகப் பறவையைத் தொடர்ந்து சென்றார்.

சுவாமியின் நியாய உணர்வைத்தான் பாருங்கள். சிறகினால் மலைகளையும் அசைக்கும் ஆற்றல் பெற்ற சூரபன்மன், "என்னைக் கண்டு பயந்த இந்திரன் மயில் வடிவங் கொண்டு இந்தக் குழந்தையை அழைத்து வந்திருக்கிறானே; குழந்தையைக் கொல்வதற்கு முன் மயிலைக் கொல்ல வேண்டும்" என்று எண்ணி இந்திரனைத் தாக்கினான். மயிலும் சக்கரவாகப் பறவையும் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் செய்தன. சக்கரவாகப் பறவை மயிலின் தலையில் உள்ள கொண்டையைப் பறித்து முகத்தைக் கொத்தியது. "சுவாமி! சுவாமி!" என்று அலறினான் இந்திரன். அதனைக் கண்ட ஆறுமுகக் கடவுள் சினந்தார். கறங்கு போல் சுழன்று திரியும் சக்கரவாகப் பறவையைத் தொடர்ந்து சென்று, மார்பிலும், முகத்திலும், கால்களிலும் பாணங்களைப் பொழிந்து உடலைத் துளைத்தார். சக்கரவாகம் பதைத்துச் சிறகுகளை உதறியது; எண்டிசைகளிலும் கோபத்துடன் திரிந்தது. முருகப் பெருமான் அந்த இடங்களுக்கும் தொடர்ந்து சென்றார். முருகப் பெருமானுக்கு ஈடுகொடுக்கச் சக்கரவாகத்தினால் இயலவில்லை. வலிமை இழந்த அப்பறவை இறுதி முயற்சியாக முருகப் பெருமானின் கையில் உள்ள வில்லை முறிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நெருங்கி வந்தது. வேலாயுதக் கடவுள் வாளை வீசிச் சக்கரவாகத்தை இரு துண்டுகளாக வெட்டி வீழ்த்தினார். வானவர்கள் வாழ்த்தினார்கள்; மகிழ்ந்து கூத்தாடினார்கள். (தொடரும்)

பிராட்வே என்ற பெயரைக் கேட்டதும் அகலமான வீதியை எதிர்பார்த்தால் அன்றும் இன்றும் சங்கடம் தான். ஆனால் அன்று காலார நடந்து களைப்பாற மர நிழல் கிடைத்தது: இன்று கிடையாது என்பதுடன் வேறு பலவிதங்களிலும்தான் பிராட்வே நாற்சந்தி எவ்வளவு மாறிவிட்டது!






அன்றும் இன்றும்

அத்தியாயம் நாற்பத்தேழு

பதினைந்தாம் நம்பர் அறை

பெங்களூர் தண்டு, செவைத் ப்ரேட் ரோட்டில் மூன்று மாடிகள் கொண்டு அமைந்த- நவீன வசதிகளுடன் கூடிய- பெரியதொரு ஹோட்டல். அந்த ஹோட்டலின் இரண்டாவது மாடியில் வரிசையாகப் பதினைந்து அறைகள். அவை ஒவ்வொன்றிலும் தனித்தனியாகக் குளியலறை, ரேடியோ, டெலிபோன், மின்சார விசிறி, உயர்தர சோபாக்கள், இரண்டு கட்டில்கள், மேசை, நாற்காலிகள் முதலானவை இருந்தன. சன்னல், கதவுகளுக்கு அழகிய திரைச் சீலைகளும் போடப்பட்டிருந்தன. அறைக்கு வெளியே நீண்ட வராந்தாவின் நெடுகிலும் கண்ணுக்கினிய வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் பூத்தொட்டிகள் அழகுற வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் இடையிடையே உயிருள்ள மீன்கள் நீந்தும் கண்ணாடிப் பெட்டிகள், அறை ஒன்றின் ஒரு நாளைய வாடகை முப்பது ரூபாய்— உணவு, மற்ற வகையறுக்கள் நீங்கலாக!

அப்படி இருந்தும் அந்தப் பதினைந்து அறைகளில் பதினான்கு அப்போது நிறைவாகி யிருந்தன. ஒரே ஓர் அறைதான் — அதோ,



அந்தக் கடைசி அறை மட்டும் — காலியாயிருந்தது. அதுவும் இன்னுங் கொஞ்ச நேரத்துக்குள் நிறைவாகி விடுமென எதிர்பார்க்கலாம். காரணம், அன்று பெங்களூரில் குதிரைப் பந்தயம் ஆரம்ப நாள்!

இரண்டு அறைகளுக்கு ஒரு 'ரூம் பாய்' வீதம் அமர்த்தப்பட்டிருந்த ஏழெட்டுப் பையன்கள் வெகு சுறுசுறுப்பாக அங்கு மிங்கும் நடமாடிக் கொண்டிருந்தனர். அந்த ஹோட்டலின் சீருடையாகக் காலர் இல்லாமல் கழுத்துப் பிடிப்பான வெள்ளைக் கோட்டும், காக்கிக் கால்சராயும், வெள்ளைக் குல்லாயும் அணிந்திருந்த 'பையன்'களில் ஒருவனாக அப்போதுதான் ஏழாம் நம்பர் அறைக்காரர்களுக்கு ஏதோ வாங்கிக் கொடுத்துவிட்டு வெளியே வந்த ஓர் இளைஞன் நேரே போய், காலியாகக் கிடந்த பதினைந்தாம் நம்பர் கடைசி அறையின் சோபா, மேசை, நாற்காலி, கட்டில்களைத் தூசி தட்டித் துடைத்துச் சுத்தப்படுத்தி விட்டு வராந்தாவுக்கு வந்து அதன் கைப்பிடிக் கிராதி மேல் களைப்புடன் சாய்ந்தவாறு நின்றான். அவன் வேறு யாருமல்ல; சபேசன்தான்!

கோவை ரயில் நிலையத்தில் அவன் சந்தித்த பர்மா அகதியொருவரின் பேச்சைக் கேட்டுச் சென்னைக்குச் செல்லவிருந்த திட்டத்தை மாற்றிக்கொண்டு பெங்களூருக்குப் பயணமானான் அல்லவா? அது எவ்வளவு பெரிய பைத்தியக்காரத்தனம் என்பதை இப்போது நினைத்தாலும் அவனுக்கு அழுகை மட்டுமல்ல, தன் மீதே ஆத்திரமும் பொங்கிக் குமுறின.


ஆமாம்; தன் தந்தையைக் காணப்போகிறோம் என்ற ஆர்வத் துடிப்பும், அவரைச் சந்தித்தபின் தனது வாழ்க்கையில் ஏற்படவிருக்கும் பெரிய மாறுதல்களைப் பற்றிய இனிய கற்பனைகளுமாகப் பெங்களூர் கன்ட்டோன்மென்ட் ரயில் நிலையத்தில் இறங்கிய சபேசன், அங்கேயே சிலரிடம், 'இவ்வூரில் பர்மா அகதிகள் முகாம் எங்கே இருக்கிறது?' என்று விசாரித்தான். தமிழர்களாகத் தென்பட்டவர்கள் அவனுடைய கேள்விக்குச் சரியாகப் பதில் சொல்லாமல் போய் விட்டார்கள். கன்னடர்கள் நின்று நிதானித்து யோசித்து, 'அப்படி இங்கே இருப்பதாகத் தெரியவில்லையே, மிஸ்டர்! எதற்கும் வேறு யாரிடமாவது விசாரித்துப் பார்!' என்று பொறுப்பாகப் பதிலிறுத்து விட்டுச் சென்றனர். அவன் அவ்வாறே விசாரித்துக் கொண்டு நாளெல்லாம் தெருத் தெருவாக, சாலை சாலையாகச் சுற்றி வந்தான். பிறகு மறு நாள் கன்ட்டோன்மென்ட் பகுதியை விட்டு சிட்டி பக்கமாகப் போய் விசாரிக்கலானான். அதற்கு அடுத்த நாள் புறநகர்ப் பகுதிகளுக்கும் போய்த் தேடி அலைந்தான். இறுதியில் அவனுக்கு அந்த விஷயம் சந்தேகத்துக்கிடமில்லாத வகையிலே தெள்ளத் தெளிவாகி விட்டது: 'பர்மா அகதிகள் முகாம்' என்று. பெங்களூரில் எங்குமே இல்லை.

அப்படியானால் அந்தப் பர்மா அகதி ஆசாமி அவனிடம் சொன்ன தகவல்கள் அத்தனையும் பொய்யா? அவ்வாறு சொல்லிவிட முடியாது. பர்மா அகதிகளை ஏற்றி வந்த மூன்றாவது கப்பல் விசாகப்பட்டினம் வந்தது என்னவோ உண்மைதான். அதிலிருந்து இறங்கிய அகதிகள் வேறு பல ஊர்களுக்கு அனுப்பப்பட்டார்கள் என்பதும் நிஜம் தான். ஆனால் அவர்களில் சிலர் பெங்களூர் முகாமில் தங்கியிருக்கிறார்கள் என்ற கூற்றுத் தான் முற்றிலும் பிசகானது. இதை அந்த அகதி நபர் சொல்லும்போதே கொஞ்சம் சந்தேகமாகத்தான் சொன்னார்; அத்துடன் அவனது தந்தை அம்மூன்றாவது கப்பலில் வந்தார் என்ற விஷயத்தையும் அவ்வளவு நிச்சயமாக அவர் பிரஸ்தாபிக்க வில்லை. யாரோ சொல்லக் கேட்டதாகத்தான் கூறினார். எனவே, இவ்விவரங்களைச் சீர் தூக்கிப் பார்த்துச் சிந்திக்காமல் — அல்லது அங்கேயே யாராவது ஒரு பொறுப்பானவரிடம் விசாரித்துத் தெரிந்து கொள்ளாமல்— அவசரப்பட்டுப் பெங்களூருக்குப் புறப்பட்டு வந்தது அவனுடைய தவறுதானே?

'தவறு, தவறு, தவறு! இந்த நாட்டுக்கு வந்தது முதல் எத்தனை எத்தனை தவறுகளைச் செய்து, என்னென்ன துன்பங்களுக்கு உள்ளாகிறேன்! நான் கற்ற கல்வியும், அதனால் வளர்க்கப்பட்ட என் அறிவும் எனக்கு எந்தச் சமயத்திலுமே எள்ளளவும் உதவ மறுக்கின்ற எனது அநியாய தலைவிதியை என்னென்பது?'

தன்னையே விரோதித்துக் கொண்டு தன் மீதே வெறுப்படைந்து விட்டான் சபேசன். 'இனி உயிர் வாழ வேண்டுமா?' என்ற கேள்விகூட அவன் உள்ளத்தின் ஒரு மூலையில் எழுந்து விட்டது. அந்தப் பயங்கரமான எண்ணத்தால் அலைக்கழிக்கப்பட்டு அன்றெல்லாம் எங்கெங்கோ சுற்றியலைந்தான். கையிலிருந்த காசும் நேற்றோடு தீர்ந்து போயிற்று. இன்று காலையிலிருந்து குழாய்த் தண்ணீர் தான் அவனுக்கு ஆகாரம். முதல் நாள் பட்டினியானதால் அதைப் பற்றி அவன் அதிகம் கவலைப்படவில்லை. சென்னை நகரைப் போல் இரவு வேளைகளில் கண்ட கண்ட இடங்களிலே படுத்துத் தூங்குவதற்குப் பெங்களூரில் அத்தனை கெடுபிடி இல்லையென்றாலும் அவ்வாறு அங்கு யாரும் அதிகமாகப் படுப்பதுமில்லை. இதனைத் தெரிந்துகொண்ட அவன், கடந்த மூன்று இரவுகளை சிவாஜி நகர் பஸ் நிலையத்திலும், டாஸ்கர் டவுன் பார்வதி கோயில் மதில்சுவர் ஓரத்திலும், ரஸல் மார்க்கெட்டுக்குப் பின்புறமுள்ள கமர்ஷியல் தெருவிலே சாத்திக் கிடந்த ஒரு ஜவுளிக்கடைப் படி மீதுமாகப் படுத்து நிம்மதியாய்த் தூங்கி யெழுந்ததுபோல் நான்காம் நாள் இரவும் கிங்ஸ் பார்க்குக்குப் போய் அங்கிருந்த கான்மன் ஒன்றின் அருகில் ஒரு சிமென்ட் பெஞ்சு மேல் தன் கான்வாஸ் பையைத் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு சுருண்டு படுத்து விட்டான்.

முன்னிரவு வரை அயர்ந்து உறங்கிய அவன் நடுச்சாமத்துக்குப் பிறகு தூக்கம் பிடிக்காமல் எழுந்து உட்கார்ந்து கொண்டான். பசி வயிற்றைப் புரட்டி எடுத்தது. தாள முடியாத குளிர் வேறு நடுக்கிக் குலுக்



தகப்பனார்: கதை எழுதி முடித்து விட்டாயா? கடைசி வரிகளை வாசி.

மகன்: 'கடைசியில் அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டு நீண்ட காலம் சந்தோஷமாக வாழ்ந்தனர்.'

தகப்பனார்: இப்படி எழுது.... கடைசியில் அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டும்கூட நீண்ட காலம் சந்தோஷமாக வாழ்ந்தனர்!

கியது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, பொழுது விடிந்ததும் வயிற்றுப்பாட்டுக்கு என்ன செய்வது என்ற கவலை அவனைப் பேயாகப் பிடித்து ஆட்டியது. இத்துடன் மழையும் இலேசாகத் தூறல் போடவே அங்கிருந்து எழுந்து போய், மாலை நேரங்களில் இசை நிகழ்ச்சி நிகழ்வதற்கென அமைந்த ஓர் எழிலான மண்டபத்தில் ஒன்றி நின்றுகொண்டான்.

எப்படியோ அன்றைய இரவு கழிந்து பொழுது புலர்ந்தது. அந்தப் பார்க்கிலிருந்த அழகிய தண்ணீர்த் தொட்டியொன்றில் இறங்கிக் குளித்து விட்டுத் துவைத்த உடைகளை உலரப் போட்டு அணிந்துகொண்ட பின், 'எங்கே போவது, என்ன செய்வது?' என்ற சிந்தனையில் ஆழ்ந்தவனாய் மேற்கு நோக்கி மெல்ல நடக்க ஆரம்பித்தான். இது வரை அடங்கிக் கிடந்த பசி இப்போது இரட்டிப்பு வீரியத்துடன் வயிற்றை முறுக்கிப் பிழிய ஆரம்பித்தது.

'ஆய்ந்தோய்ந்து பாராமல் இவ்வூருக்குப் புறப்பட்டு வந்தது எவ்வளவு பெரிய தவறாகி விட்டது! முதலில் திட்டமிட்டது போல் நேரே சென்னைக்குப் போய் விட்டிருந்தால் இத்தனை கஷ்டங்களுக்கும் உள்ளாக நேர்ந்திருக்காதே' என்று பல முறை எண்ணி யெண்ணி மனம் குமைந்த அவன் அதனையே இப்போதும் நினைத்து நெஞ்சம் புகைந்தவனாய் நடந்துகொண்டிருந்த சமயம், நச்சியையும் வேதாவையும் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. 'சென்னையில் இதே போன்ற நிலையிலே நான் கிடந்து அல்லாடிக் கொண்டிருந்தபோது அவர்கள் எவ்வித பிரதி பிரயோசனத்தையும் எதிர்பார்க்காமல் எனக்கு என்னென்ன பேருதவிகளைச் செய்தார்கள்! அதற்கெல்லாம் நன்றியறிவிப்பாக நான் ஊருக்கு வந்ததும் அவர்களுக்கு ஒரு கடிதம்கூட எழுதாமல் போனது எவ்வளவு பெரிய அற்பத்தனம்! அந்த நன்றி கொன்ற செயலுக்குத் தண்டனையாகத்தான் இன்று மறுபடியும் அதே பசி, பட்டினி, இருக்க இடமற்ற பராரி நிலைமைகளை அநுபவிக்கிறேன் போலும்!'

கால்கள் சோர்ந்து கண்கள் மங்கிவிட நடக்கவும் திராணியற்றுப்போன சபேசன், வெறும் செந்நிறப் பூக்களாகவே குடை பரப்பி நின்ற ஒரு மரத்தடியில் அப்படியே துவண்டு உட்கார்ந்து விட்டான்.

அவன் உட்கார்ந்த இடம் 'கப்பன் பார்க்' எனப்படும் பிரும்மாண்டமான பூங்காவனம் ஆகும். எதிரே அழகும் துப்புரவுமான சாலையொன்று கிழக்கு நோக்கிச் சென்றது. அதிக ஜனநடமாட்டம் இல்லை. ஆனால் கார்களும் சைக்கிள்களும் நிறையவே போவதும் வருவதுமாக இருந்தன.

தன் வயிற்றில் பசியரக்கன் புகுந்து குடற் கொடிகளைச் சுழற்றி 'ஸ்கிப்பிங்' விளையாடும் 'கோர அழகை' அணு அணுவாக 'ரசித்தபடி' மரத்தடியில் சாய்ந்து உட்கார்ந்திருந்த சபேசன் தன்னை யாரோ ஆங்கிலத்தில் அழைத்த குரல் கேட்டு மெல்லத் திரும்பினான். சாலையின் எதிர்ப்புற நடைபாதையில் ஒரு வெள்ளைக்காரன்—அவன் ஆங்கிலேயனோ, அமெரிக்கனோ, பிரெஞ்சுக்காரனோ அல்லது வேறு எந்த நாட்டவனோ தெரியவில்லை—நின்று கொண்டிருந்தான். வயது முப்பத்தைந்து இருக்கும். அரைக் கால்சராய், பொம்மைகள் அச்சிட்ட உயர்தர டெரிலின் ஸிலாக் சட்டை, மடக்குத் தொப்பி, தோளில் ஒரு போட்டோ காமிரா, கையில் கனமான அழகிய தோல் பை, வாயில் புகைக் குழாய். இந்தியாவைச் சுற்றிப் பார்க்கவோ, அல்லது தொழில் நுணுக்கப் பயிற்சி அளிக்கவோ வந்திருப்பவனாயிருக்கலாம். அவன்தான் தன்னை அழைத்திருப்பான் என்ற ஊகத்துடன் மெல்ல எழுந்து அவனை நோக்கிச் சென்றான் சபேசன்.

டாக்சிக்காகத் தான் வெகு நேரமாய் அங்கு நிற்பதாயும், ஒன்றுகூட இந்தப் பக்கம் வரவில்லை எனவும் சாந்தப் புன்னகையோடு ஆங்கிலத்தில் கூறிய அவ்வெள்ளைக்காரன், "எனக்காக ஒரு டாக்ஸி பிடித்துக்கொண்டு வந்து உதவ முடியுமா?" என்று சிநேக பாவத்துடன் வினவினான்.

பசியால் களைத்துச் சோர்ந்திருந்த சபேசனுக்கு இந்தக் காரியத்தைச் செய்வதென்பது முடியாததுதான். என்றாலும் அந்த வெள்ளையனின் வேண்டுகோளை நிராகரிக்க மனமில்லாமல், "ஓ, யெஸ்" எனக் கூறிவிட்டுப் பிரதான சாலையை நோக்கிச் சென்றான்.

அந்தப் பக்கம் நிறையவே டாக்சிகளும், ஆட்டோ ரிக்ஷாக்களும் காலியாகப் போய்க் கொண்டிருந்தன. ஆயினும் ஒன்றுகூட அவன் கூப்பிட்ட குரலுக்கு நிற்கவில்லை. ஆளைப் பார்த்தே அவை 'எடை' போட்டுக்கொண்டு போய்விட்டன போலும்! சென்னை நகர டாக்சிக்காரர்களிடம் மரியாதைக்குப் பஞ்சம் என்பது அவன் அறிந்த விஷயம்; ஆனால் பெங்களூர் டாக்சிக்காரர்கள் மீட்டர் கருவியையும், வாடகைத் தொகையையும் சம்பந்தப்படுத்திப் பழக்கமில்லாதவர்கள் என்ற விவரம் அவனுக்குத் தெரியாது. ஆகவே, ஓர் இருபது நிமிஷ நேர முயற்சிக்குப் பின் அந்த வெள்ளைக்காரனிடம் திரும்பி வந்து, தன்னால் அச்சிறு உதவி செய்ய முடியாமல் போன

தற்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டான்.

பாவம், அவ்வெள்ளையனுக்கு என்ன அவசரமோ, எங்கே போக வேண்டுமோ-வாடகை வண்டி கிடைக்காமல் தனியாய்த் தவித்தான். அவனுடைய சங்கடத்தைப் பார்த்துக் கொண்டு நின்ற சபேசன், ஏதோ ஒரு முடிவுடன், ''நீ எங்கே போக வேண்டும்?'' என்று ஆங்கிலத்தில் வினவினான். அதிக தூரமில்லை என்றும், சௌத் ப்ரேட் ரோட்டிலுள்ள ஒரு ஹோட்டலுக்குப் போக வேண்டும் என்றும், அங்கே தன்னைக் காணப் பிரமுகர் ஒருவர் வந்து காத்திருப்பார் என்றும், அதற்காகவே தான் அவசரப்படுவதாகவும் விளக்கினான் வெள்ளையன். ''அப்படியானால், நான் உன் பையைத் தூக்கி வருகிறேன்; நீ நடந்தே போய்விடலாமே?'' என்று யோசனை தெரிவித்தான் சபேசன். மிகவும் வந்தனத்துடன் ஒப்புக்கொண்ட வெள்ளைத் துரை முன்னால் நடக்க ஆரம்பித்தான். அவனுடைய தோல் பையையும் தனது கான்வாஸ் பையையும் சுமந்து கொண்டு தள்ளாடித் தள்ளாடி அவனைப் பின்தொடர்ந்தான் சபேசன்.

ஓர் அரை மணி நேர நடைக்குப் பின் அந்தக் குறிப்பிட்ட பெரிய ஹோட்டலை அடைந்த வெள்ளையன், வாயிலில் நின்று திரும்பிப் பார்த்தான். கால்கள் பின்னவிட மேல் மூச்சு வாங்கத் தொய்ந்து துவண்டு வந்து சேர்ந்த சபேசன் பையை இறக்கி வைத்துவிட்டு முகத்தில் ஆறாகப் பெருகிய வியர்வையைத் துடைத்துக்கொண்டு நின்றான்.

நன்றியுணர்ச்சியால் முகம் சிவந்து மலர்ந்த வெள்ளையன் அவனைத் தட்டிக் கொடுத்து விட்டு ஓர் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான்.

பசியால் காது அடைக்க, கண்கள் இருள நின்ற சபேசனின் வாடியவதனம் அந்த ரூபாய் நோட்டைப் பார்த்ததும் கடவுளையே தரிசித்ததுபோல் ஒளியேறிப் பிரகாசித்தது. ஆனால் அது ஒரு விநாடி நேரம்தான்; மறுகணமே பழையபடி கறுத்துச் சிறுத்தது.

'எனது இப்போதைய நிலையில் இந்த ஐந்து ரூபாய் ஐயாயிரம் ரூபாய்க்குச் சமம் என்பதில் சந்தேகமில்லை. இறைவன் என்மீது இரக்கப்பட்டுத்தான் இச்சமயம் இவ்வளவு பெரிய உதவியை இத்தனை அற்புதமாகச் செய்திருக்கிறார். ஆனால்... இப்பணத்தை நான் ஏற்கலாமா? என்னுடைய பசித் தேவைக்கு இப்போது இது மகத்தான வரப்பிரசாதமாக இருந்தாலும் இதன் பின் விளைவு என்ன ஆகும்? எப்போதோ ஒரு சமயம் 'மேயோ' என்ற ஒரு வெள்ளைக்காரி இந்தியாவுக்கு வந்து இங்குள்ள இழிந்த பகுதிகளை மட்டும் எட்டிப் பார்த்துவிட்டுப் போய், 'அசிங்கம் பிடித்த தேசம் இந்தியா' என்று உளறி வைத்துப் புத்தகம் எழுதினாளாமே, அது மாதிரி இந்த வெள்ளைக்காரன் தனது சொந்த நாட்டுக்குத் திரும்பியதும், 'பாரத நாட்டு மக்கள் எல்லோருமே பிச்சைக்காரர்கள், கூலிகள்! ஓர் ஐந்து ரூபாய் கொடுத்தால் நமக்கு அவர்கள் எத்தகைய இழிவான ஊழியத்தையும் செய்ய முன் வந்துவிடுவார்கள்' என்று — பெரிய காரியமான புத்தகம் எழுத இறங்காவிட்டாலும் — தன் குடும்பத்தா



''ஒவ்வொரு மாதமும் என்கிட்டே ரெண்டு ரூபா கைமாற்று கேட்பீங்கள். இப்போ நாலு ரூபா கேட்கிறீங்களே?''

''உங்களுக்கு ஸ்பெஷல் இன்க்ரிமெண்ட் கெடச்சதாமே?''

ரிடமோ, நண்பர்களிடமோ கேவலமாகச் சொல்வான்; அல்லது தனக்குள்ளாகவாவது அவ்வாறு நினைத்துக் கொள்வான் அல்லவா? அதனால் தனி மனிதனான என் ஒருவனின் செயல், பாருக்குள்ளே சிறந்த இப்பாரத நாட்டுக்கும் அதன் மானமிக்க மகத்தான மக்களுக்கும் எவ்வளவு இழிபெயரை ஏற்படுத்தித் தர ஏதுவாகிறது! உயிரே போனாலும் இந்த ஈன காரியத்தை நான் ஒரு போதும் செய்ய மாட்டேன்!'

தன்னிடமிருந்த சக்திகளையெல்லாம் திரட்டி முகத்தில் நிறைத்துக்கொண்டு கம்பீரமாக நிமிர்ந்து அந்த வெள்ளையனை ஏறிட்டுப் பார்த்துப் புன்முறுவல் பூத்த சபேசன், ''உன் பெருந்தன்மைக்கு நன்றி, கனவானே! ஆனால் உனக்கு ஏவலாளாக நான் இந்தப் பையைத் தூக்கி வரவில்லை; நண்பனாக இருந்து உதவி செய்தேன்! எனவே, இதனை நீ அனுமதித்து ஏற்றுக்கொள்வாய் என்று நம்புகிறேன்!'' என்றான் பணிவு கலந்த உறுதியுடன் ஆங்கிலத்தில்.

வெள்ளையன் இதைக் கேட்டு வெட்கமோ வியப்போ அடைந்திருக்க வேண்டும். தன் சிறிய மர வர்ணக் கண்களை மலர்த்தி அவனை ஒரு கணம் கூர்ந்து பார்த்துவிட்டு, ''ஓ. மை டியர்ஃபிரண்ட் பிளீஸ் எக்ஸ்கியூஸ் மீ!'' என்றவாறு வந்து சபேசனின் கரத்தைப் பற்றிக் குலுக்கினான்.

அங்கிருந்து சபேசன் திரும்பி நடந்தான். இப்போது பழையபடி பசிக் களைப்பு அவனைத் தள்ளாடச் செய்தது. கால்கள் பின்னித் துவள நடந்துகொண்டிருந்த அவனை அந்த ஹோட்டல் சிப்பந்தி ஒருவன் பின்னால் ஓடி வந்தபடி கைதட்டிக் கூப்பிட்டதைக் கேட்டு நின்று திரும்பினான். தனது முதலாளி அவனை அழைத்து வரச் சொன்னதாகத் தெரிவித்தான் அந்தச் சிப்பந்தி.

சபேசனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகு உள்ளூற ஒருவித பயம் பிடித்துக் கொண்டது. ''ஏன், என்ன விஷயம்?'' என்று விசாரித்தான். ''எனக்குத் தெரியாது. முதலாளி உன்னை அழைத்து வரச் சொன்னார்'' என்றான் அவன்.

அந்த வெள்ளைக்காரனிடம் சபேசன் நடந்துகொண்ட முறையையும், பேசிய பேச்சையும் ஹோட்டல் முதலாளி கவனித்திருக்க வேண்டும்; அல்லது அவ்வெள்ளைக்காரனே அவரிடம் இவ்விஷயமாக ஏதேனும் சொல்லியிருக்க வேண்டும்.

முதலில் சபேசனைப்பற்றி அன்பும் பரிவுமாக விசாரித்து அவனுடைய அநாதரவான நிலையைத் தெரிந்துகொண்ட அவர், ''உனக்கு விருப்பமானால் இங்கே என் ஹோட்டலில் சிறிது காலம் 'ரூம் பாயாக' வேலை பார்க்கலாம். மாசம் இருபத்தைந்து ரூபாய் சம்பளம். மூன்று வேளை சாப்பாடு. பிறகு இங்கேயே வேறு நல்ல வேலைக்கு உன்னை மாற்றிப் போடுவேன்'' என்றார்.

இறைவனின் கருணையை எண்ணி நெஞ்சம் சிலிர்த்தான் சபேசன்.

இப்படி இந்த ஹோட்டலில் வேலைக்கு அமர்ந்து இன்றோடு ஐந்து நாட்களாகின்றன.

தொலை தூரத்தில்-'கப்பன் பார்க்'குக்கு அப்பால்—வண்ண வண்ணப் பூக்களும், பசிய இலைகளும் கொண்ட மரங்களின் சிரப் பரப்புக்கு மேலே மைசூர் ராஜ்ய சட்டசபை மாளிகையான 'விதான சௌதா'வையும், அதன் கோபுர உச்சியில் கம்பீரமாகக் காட்சியளித்த அசோகர் சின்னத்தையும் பிரமிப்போடு பார்த்துக்கொண்டு நின்ற சபேசனின் மனத்தில் சட்டென்று அந்த அழகிய அகதிப் பெண் சந்தியாவின் நினைவு நிமிர்ந்தது. அதைத் தொடர்ந்து கோவை சங்கனூர்ப் பள்ளத்தண்டை அவளை முதன் முதலாகச் சந்தித்த சம்பவம், பிறகு கவுண்டன்பாளையம் கோயில் ஆலமரத்தடியிலே அவள் தேசிய கீதத்தைத் தமிழில் விளக்கிய அந்த நெஞ்சு இனிக்கும் நிகழ்ச்சி, பிறகு அகதி முகாம் குடிசைக்குப் பின்னால் கண் கலங்கி நின்ற கோலம், இறுதியாகச் சேலம் ரயில் நிலையத்தில் போலீஸ் காவலோடு பல அகதிக் குடும்பங்களுடன் ஒருத்தியாக உட்கார்ந்திருந்த பரிதாபக் காட்சி—இவையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அவனது நினைவுத் தளத்தில் மளமளவென மோதவே அவனையறியாமல் கண்களில் நீர்த் திரை விரிய, அதனால் அந்தப் பிரும்மாண்டமான விதான சௌதாவும் அவன் பார்வையிலிருந்து மறைந்தது. சற்றைக்குப் பின், பதினைந்தாம் நம்பர் அறையின் வாசலுக்கு மேலே பொருத்தப் பட்டிருந்த 'காலிங் பெல்' கணகணவென்று ஒலிக்கவே சட்டென்று கண்ணைத் துடைத்துக் கொண்டு . திரும்பிய சபேசன், கீழே ஆபீஸ் அறையிலிருந்து ஹோட்டல் மானேஜர் தன்னை அழைக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு விரைந்து சென்றான்.

ஒரு வாரமாகக் காலியாகக் கிடந்த இரண்டாவது மாடி பதினைந்தாம் நம்பர் அறை இப்போது 'எங்கேஜ்' ஆகியிருப்பதாகவும், அதில் தங்கப் போகிறவர்களுக்குத் தேவையானதை யெல்லாம் கவனித்துச் செய்யும்படியும் மானேஜர் கட்டளையிட்டதைப் பணிவுடன் கேட்டுக் கொண்டு திரும்பிய சபேசன், அப்போதுதான் அங்கிருந்து ஹோட்டல் மினிட் புத்தகத்தில் கையெழுத்துப் போட்டு விட்டுச் சாவியுடன் வெளியே வந்த ஆளைப் பார்த்துச் சற்றே தயங்கி நின்றான்.

'இவரை எங்கோ பார்த்த ஞாபகமாயிருக்கிறதே! யார் இவர்?' — உடனே அவனுக்கு ஞாபகம் வரவில்லையானாலும் கண்ணை மூடிக் காதுப் பக்கம் சொறிந்து கொண்ட மறு விநாடியே பளிச்சென்று அது நினைவாகி விட்டது: 'ஓ.... அன்றொரு நாள் ரிப்பன் மாளிகையிலும், பிறகு கடற் கரையில் நடந்த பொதுக் கூட்டத்திலும் பார்த்த மப்ளர்காரரல்லவா இவர்?.... ஆமாம்; பெயர்? மருதமுத்து!'—

சில்க் ஜிப்பாவும், சரிகைக் கரை வேட்டியும், அவரது 'டிரேட் மார்க்'கான ப்ரௌன் கலர் மப்ளருக்குப் பதிலாகப் பட்டு அங்கவஸ்திரமும் அணிந்து அமர்க்களமாகக் காணப்பட்ட மருதமுத்து அவனை மேல் பார்வையில் பார்த்து, ''சீக்கிரம் மேலே வாப்பா!'' என்று அலட்சியமாகச் சொல்லி விட்டு மாடிப் படிகளில் ஏறிப் போனார். அவருக்கு அவன் யாரென்று தெரியாது. அவனை அவர் எங்கும் பார்த்ததில்லையல்லவா?

சபேசன் பதினைந்தாம் நம்பர் அறைக்கு வெளியே வராந்தாவில் தயங்கி நின்றான். உள்ளே மூன்று பேர் பேசும் குரல் கேட்டது. 'மருதமுத்துவுடன் இன்னும் இரண்டு பேர்கள் வந்திருக்கிறார்களாக்கும்.'

''ஏ, பாய்!''

''இருக்கிறேன், சார்'' என்று குரல் கொடுத்தான் சபேசன்.

அறைக் கதவைத் திறந்துகொண்டு வந்த ஒருவன், ''பையா! கீழே 'பாரில்' ஆர்டர் கொடுத்திருக்கிறேன். அதை வாங்கிக் கொண்டு, அத்துடன் ஒரு சோடாவும் கொண்டு வா, சீக்கிரம்!'' என்று கட்டளையிட்டான். அவன் வேறு யாருமல்ல; மருதமுத்துவின் அந்தரங்கக் காரியதரிசியான செங்கோடன்தான்.

ஹோட்டலுக்கு வந்ததுமே அவர்கள் குளிப்பதற்கு முன்னதாக இந்தக் 'குளியலை' நடத்திவிடத் துடிக்கிறார்கள் போலும்! இதற்காகத்தானே இவ்வளவு தூரம் பெங்களூரைத் தேடி வந்திருக்க வேண்டும்?

''ஆகட்டும், சார்!'' என்று சுறுசுறுப்புடன் கீழே இறங்கி ஓடிய சபேசன் சிறிது நேரத்துக்கெல்லாம் மூன்று கண்ணாடிக் கிண்ணங்களையும், -மூன்று தம்ளர்களையும், சோடா பானத்தையும் தட்டில் ஏந்திக்கொண்டு மேலேவந்து, ''சார்!'' என்று குரல் கொடுத்தவாறு அந்த அறைக்குள் செல்லக் காலெடுத்தவன், ஏதோ மின்சாரத்தால் தாக்குண்டவன் போல் துடித்துப் பதறிக் கையிலிருந்த தட்டைக் கீழே போட்டு உடைக்காத குறையாகப் பின்னால் நகர்ந்தான்.

அதே சமயம், அவ்வறையின் ஒரு மூலையில் அழுது அழுது முகமெல்லாம் வீங்கிக் கிடக்கப் பயந்து நடுங்கிக்கொண்டு நின்றிருந்த வேதா அவனை நிமிர்ந்து பார்த்தாள்! (தொடரும்)

நேரு தந்த பொம்மை

அழ. வள்ளியப்பா



நேரு காரில் வருவதை
நேரில் காணும் ஆசையில்,
ஊரிலுள்ளோர் யாவரும்
ஒன்று திரண்டு வந்தனர்.

தெருவில் நேரு செல்கையில்
சின்னச் சின்னப் பொம்மைகள்
ஒருவர் விற்கக் கண்டனர்;
உடனே கீழே இறங்கினர்.

பொம்மைக் காரர் அருகிலே
போனார் நேரு, வேகமாய்.
'என்ன விலையோ பொம்மைகள்?'
என்றே அன்பாய்க் கேட்டனர்.

பொம்மைக்காரர்

ஒன்றின் விலையைக் கூறவா?
ஓர் அணாத்தான் விற்கிறேன்.

நேருஜி

நன்று. பொம்மை யாவையும்
நானே வாங்கிக் கொள்கிறேன்.

பொம்மைக்காரர்

ஐந்து ரூபாய் தானய்யா
அத்தனைக்கும் மொத்தமாய்.

நேருஜி

இந்தா ரூபாய் தருகிறேன்,
எனக்கே எல்லாம் கொடுத்திடு.

நேரு நோட்டை நீட்டினார்;
நிறையப் பொம்மை வாங்கினார்.
யாருக் காக வாங்கினார்?
அனைவ ருக்கும் தெரிந்ததே!

அங்கு நின்ற பிள்ளைகள்
அனைவ ருக்கும் நேருஜி
தங்கக் கையால் பொம்மைகள்
தந்து தந்து மகிழ்ந்தனர்.

அருமை மாமா நேருஜி
அன்பாய்ப் பொம்மை தந்ததைப்
பெருமை யோடு குழந்தைகள்
பேசிப் பேசிக் களித்தனர்!



நேருஜியின் பிறந்த நாளையொட்டி, அவர் ஆந்திர நாட்டில் சுற்றுப் பயணம் செய்தபோது மல்லியவந்தம் என்ற கிராமத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் குறித்த பாடலை வெளியிடுகிறோம்.



தரத்திற்குத் தாயன்பே உரைகல்...
DALDA
தரமறிந்த தாயன்பின் தங்கமான தேர்வு: டால்டா
அரவணைத்து வளர்க்கும் அருள்வடிவோ... அகமகிழவைக்கும் ஆரமுதோ... அவள் படைக்கும் ஒவ்வொரு உணவும்...உரைக்குதம்மா எல்லையில்லா அன்பின் சுவை...நல்ல நல்ல பண்டங்களின் நயம்..டால்டா வனஸ்பதியின் திறம். வளரும் கண்மணிகளுக்கு ஊட்டமளிக்கும், வைட்டமின்கள் செறிந்த டால்டா... என்றுமே புதுமை மாறாத தூய்மையோடு, ஸீலிட்ட டப்பாக்களில் மட்டுமே கிட்டும் டால்டா...எல்லா உணவுகளுக்கும் சொல்லொணாத சுவையூட்டும் டால்டா.
டால்டா வனஸ்பதி: தூய்மையான தனிப்பெரும் சமையல் சாதனம்,
ஹிந்துஸ்தான் லீவர் தயாரிப்பு
லின்டாஸ்-DL. 117-140

பல்சுவைப் பக்கங்கள் 1

பிள்ளையின் குழப்பம்

நவநீதம் செட்டியாருக்குச் சொந்தமானதொரு வீட்டில் மூன்று பேர்கள் குடியிருந்தார்கள். அவர்களிடம் வாடகை வசூல் பண்ணி வரச் சுந்தரம்பிள்ளையை நியமித்திருந்தார் செட்டியார். ஒரு நாள் வாடகை கேட்கக் காலையில் பிள்ளைவாள் போனபோது வீட்டிலிருக்க வேண்டிய மூன்று பேரில் ஒருவர்தான் இருந்தார். அவர் பத்து ரூபாய் கொடுத்தார். பகலில் போனபோது மற்றொருவர் இருந்தார். அவரும் பத்து ரூபாய் கொடுத்தார். மாலையில் போனபோது மூன்றுமவர் தம் பங்குக்குப் பத்து ரூபாயைக் கொடுத்தார். பிள்ளை முப்பது ரூபாயையும் வீட்டுக்காரரிடம் சேர்ப்பித்தார். செட்டியாரோ கண்டிப்பான பேர்வழி.

"ஐயா, சுந்தரம் பிள்ளை! அந்த வீட்டுக்கு வாடகை ரூ. 25தான். இந்தாரும் இந்த ஐந்து ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிடும்" என்று சொல்லியனுப்பினார். பிள்ளை போகும் போது ஒரு சின்ன வேலை செய்தார். வீட்டில் குடியிருந்தவர்களிடம் ஆளுக்கு ஒரு ரூபாயைத் திருப்பிக் கொடுத்தார். மீதி இருந்த இரண்டு ரூபாய்க்கு டிபன் சாப்பிட்டார். வீட்டுக்குப் போனதும் கணக்குப்பிள்ளையான பிள்ளைவாளின் மனம் கணக்குப் போட ஆரம்பித்தது. 'மூவரும் தனித்தனியே ஆளுக்குப் பத்து ரூபாயைக் கொடுத்து ஒரு ரூபாய் திருப்பி வாங்கிக்கொண்டதன் மூலம் ஆளுக்கு ஒன்பது ரூபாய் கொடுத்தவர்கள் ஆகிறார்கள். அதன்படி பார்த்தால் 3×9=27 ரூபாய் ஆகிறது. நான் டிபன் சாப்பிட்டது 2 ரூபாய்க்கு. ஆகமொத்தம் ரூ. 29. ஆனால் வசூல் பண்ணியது மொத்தம் ரூ. 30 அல்லவா? மீதி ஒரு ரூபாய் என்னவாயிற்று?' பிள்ளையின் மூளை குழம்பலாயிற்று. —ஜோதி



வல்லவனுக்கு வல்லவன்......



காட்சி 1

அறையின் மூலையில் அனாதை போல் கிடந்தது காதல் படகு பாட்டுப் புத்தகம். அந்தப் பாட்டுப் புத்தகத்தைப் பார்க்கப் பார்க்க ரகுவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. காதல் படகு படத்தைப் பார்க்கும் வரையில் கண்ணியமானவன் என்று அவன் எண்ணிக்கொண்டிருந்த கமலக் கண்ணன் இழிந்தரமான காரியம் செய்வாரா? இப்படிப் பிறருடைய எழுத்தைத் திருடித் தன்னுடையது என்று சொல்லிக் கொள்வதைவிட, பிச்சை எடுத்துப் பிழைக்கலாமே!

அருவருக்கத் தக்க பொருளைத் தொடுவது போன்ற வெறுப்புடன் அந்தப் பாட்டுப் புத்தகத்தைக் கையில் எடுத்தான். பக்கங்களைப் புரட்டினான். கதை - கண்ணன் என்று தென்பட்டதும் அவன் கண்கள் நிலைகுத்தி நின்றுவிட்டன. சின்னத்தனமான காரியம் செய்பவர், பெயரைச் சின்னதாகச் சுருக்கிக் கொண்டதில் ஆச்சரியமேது?

காதல் படகு பாட்டுப் புத்தகம் ரகுவின் கையில் கசங்கியது.

ரகுவுக்கு எழுத்து ஜீவனமல்ல; அது அவனுடைய ஜீவன்!

காலைமணி பத்திரிகையின் சினிமாப் பகுதி ஆசிரியர் கமலக்கண்ணன் சினிமா உலக பிரமுகர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். கையோடு கொண்டுபோயிருந்த காதல் மாலை என்னும் குறுநாவலை அவரிடம் கொடுத்துத் தகுதியாக இருந்தால் காலை மணியில் வெளியிடும்படி கேட்டுக் கொண்டான் ரகு. பரிசீலித்துப் போடுவதாகக் கமலக்கண்ணன் கூறினார். மாதங்கள் உருண்டு ஓடின. காலைமணி வழக்கம் போல் வந்து கொண்டிருந்ததே தவிரக் காதல் மாலை அதில் பிரசுரமாகவில்லை. ஆனால்--

நேற்று காதல் படகு படம் பார்த்ததிலிருந்து ரகுவின் உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது. அவன் எழுதிய காதல் மாலைக்கும், காதல் படகுக்கும் அதிகம் வித்தியாசமில்லை. கமலக்கண்ணன் தாம் ஒரு கதாசிரியர் என்பதைக்காட்டிக் கொண்டு விட்டார்! கமலக் கண்ணனிடம் காதல் மாலை பரிசீலிக்கக் கொடுத்ததற்கு அத்தாட்சி ஏது? சே! என்ன உலகம்! ரகுவின் கையில் கசங்கித் திணறிய காதல் படகு பாட்டுப் புத்தகம் அறையின் மூலையை மறுபடியும் சரணடைந்தது.

(காட்சி இரண்டு என்ன? - 43-ம் பக்கம் பார்க்க)

பல்சுவைப் பக்கங்கள் 2

நம்பமுடிகிறதா?

வாக்காளர் பட்டியலின் படி அந்த நகரத்தின் வாக்காளர்களின் எண்ணிக்கை 17000. ஆனால் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களின் பட்டியலின்படி

காங்கிரஸ் அங்கத்தினர்களின் எண்ணிக்கை:

பிரைமரி அங்கத்தினர்கள்	8500
தீவிர அங்கத்தினர்கள்	270

ஆனால் சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெற்ற வாக்குகள் என்ன தெரியுமோ? 2371

கூறுவது திரு கே. பி. ஜார்ஜ், கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரும் முன்னாள் எம். எல். ஏ.யும். நகரம்: கொடக்காரா தொகுதியில் உள்ள புதுக்காடு பஞ்சாயத்து.

ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்.
தகவல்: சாந்தா பத்மநாபன், வேலக்கை.

பிளாஸ்டிக் ரோடு!

நாளொரு குழியும் பொழுதொரு குண்டுமாகத் திகழும் சென்னைச் சாலைகளில் அவதிப்படுவோர் இதைப் படித்துப் பொறுமைப்படலாம்! தெருக்களில் கப்பிகளுக்குப் பதிலாக, பிளாஸ்டிக் தகடுகளைப் பரப்பி, ''பிளாஸ்டிக் சாலை'' அமைக்கும் முறையை ஒரு மேற்கு ஜெர்மன் இன்ஜினியர் உருவாக்கியுள்ளார். இந்த விசேஷ ரக பிளாஸ்டிக் தகடு, உறுதியானது; எதுவும் அரிக்க இயலாதது; அமிலங்களிலும் கெடாதது. 120 டிகிரி உஷ்ணமானாலும் சரி, கடும் குளிரானாலும் சரி, இந்த பிளாஸ்டிக் தகடு தாங்கக் கூடிய சக்தி வாய்ந்தது. 15 அடி அகலமும், 0.15 அங்குல கனமுமே உள்ள இந்தப் பிளாஸ்டிக் தகட்டின் மீது எவ்வளவு எடையுள்ள வாகனம் சென்றாலும், பிளாஸ்டிக் தகடு சிறிதும் சேதமடையாது. 15000 இராத்தல் எடையுள்ள வாகனத்தை ஓட்டியும், 100 இராத்தல் சம்மட்டி கொண்டு அடித்தும் இது சேதமடையவில்லை. ஒவ்வொரு கெஜ தூரத்திற்கும் இந்த பிளாஸ்டிக் தகட்டைப் பதிக்க 5 நிமிட நேரமே பிடிக்கும். தகட்டின் ஓரங்களில் உள்ள நீண்ட ஆணிகளை நிலத்தில் அறைந்து, பிளாஸ்டிக் தகடுகளைக் கெட்டியாகத் தரையில் பிணைத்துக் கொள்ளலாம். (யூ. பி. எஸ்.)



கேள்வி கேட்டான் குறும்பாக; கிடைத்தது பதிலும் குறும்பாக!



பல வருடங்களுக்கு முன்பு சென்னை மாநிலக் கல்லூரியில் நிகழ்ந்த சம்பவம் இது:

அந்தக் கல்லூரி மாணவர்களின் சங்கத்தின் சார்பில் காளிதாஸனின் சாகுந்தலம் நாடகம் நடிக்கப்பட்டது; அதுவும் சம்ஸ்கிருதத்தில்.

நாடகம் முடியும் தறுவாயில், தலைமை வகிக்க வந்திருந்த பிரமுகரை மேடைக்கு அழைத்தார் மாணவர் சங்கத் தலைவர்.

அந்தப்பிரமுகரும் சாகுந்தலம் நடிக்கப்பட்ட மேடை மீதேறிப் பேசத் தொடங்கினார். 'இன்று நான் இந்த நாடகத்தைக் கண்டதும், இதே கல்லூரியில் மாணவனாக இருந்து இதே மேடையில் இந்த நாடகத்தில் நானும் நடித்தது நினைவுக்கு வந்தது'. சொற்பொழிவின் தொடக்கத்தில் இடையூறு கேள்விக் குரலாக ஒலித்தது.

'அப்போது நீங்கள் என்ன வேடம் தாங்கினீர்கள்?'

கேட்டவன் அங்கு வீற்றிருந்த மாணவர்களில் ஒருவன். குறும்புத்தனமான கேள்விதான்!

பதில் உடனேயே ஒலித்தது: 'நான் ஓர் இள மங்கையாகத் தோன்றவில்லை என்று மட்டும் சொன்னாலே போதும், கேள்வி கேட்டவர் திருப்தியடைவாரென்று நம்புகிறேன்!...'

சபையில் மெல்லிய நகையொலி எதிரொலித்தது.

இவ்விதம் பதிலளித்தவரும் அன்று தலைமை தாங்கியவருமான அந்தப் பிரமுகர் இன்றைய அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றி வரும் டாக்டர் சி. பி. ராமஸ்வாமி ஐயரவர்கள்தான்!

ஆதாரம்: புகழ் பூத்த தமிழர்
தகவல்: ஏ. சுவாமிநாதன்

ஸ்ரீ கோவிந்தராகவையர் ஒருபாதிரியாரைப் பற்றிய பின்வரும் கதையை காந்தி மகானுக்கு அனுப்பி வைத்தார்.

ஒரு பாதிரியார் மலைமீது ஏறிப் போய்க்கொண்டிருந்தார். ஆறு வயதுச் சிறுமி ஒருத்தி, இரண்டு வயதுள்ள தம் தம்பிப் பாப்பாவைத் தோளின் மீது தூக்கிக் கொண்டு மலைமீது ஏறிக்கொண்டிருந்தாள். பாதிரியார் ஏதோ பேச்சுக் கொடுக்க வேண்டுமென்று 'என்ன அம்மா! குழந்தை ரொம்பக் கனக்கிறதா?' என்று கேட்டார். 'இல்லவே இல்லை; என் தம்பியாச்சே!' என்றாள் சிறுமி.

கடிதத்துக்கு காந்திஜி பதில் எழுதினார்:




உங்கள் கடிதம் வந்தது. அது தான் எவ்வளவு உன்னதமான கருத்து. 'அவன் கனக்கவில்லை; என் தம்பியாச்சே! மிக மிகக் கனமான வஸ்துக்களும் இறகுபோல் இலேசாகி விடுகின்றன அன்பு சுரக்கும்போது!

உதவியவர்: வி. ஆர். நரசிம்மன்

கணவன்: என்மேல் என்னதான் கோபம் உனக்கு?''
மனைவி: பின்னே என்னவாம்? என் 'பிரண்ட்ஸ்'களுக்கு முன்னாலே எனக்குச் சமைக்கத் தெரியும் என்று சொல்லி என்னை ஏன் கேவலப்படுத்தினீர்கள்? - வி. கே.

...வையகத்தில் உண்டு

<u>காட்சி இரண்டு</u>



'சே! என்ன உலகம்! - காதல் படகு ஆரம்ப விழாவில் கலந்து கொண்ட கமலக் கண்ணன் அலுத்துக் கொண்டார். முன்னெல்லாம் கதை ஆரம்பிப்பதற்கு முன்பு 'டைட்டில்'கள் காட்டப்படும். இப்போது என்னடா வென்று கேட்டால் கதையை ஒரு பத்து நிமிஷம் திரையில் ஓட்டி விட்டுப் பிறகு திடீரென்று 'டைட்டில்'களைக் காண்பிக்கிறார்கள். காத்திருந்த டைட்டில்கள் வந்தன. கமலக்கண்ணன் நிமிர்ந்து உட்கார்ந்தார். முதன் முதலாக அவரது டைட்டில் பெயர் வெள்ளித் திரையில் இடம் பெறப் போகிறது! சினிமாவுக்குக் கதை எழுத வேண்டும் என்கிற ஆசையில் அவர் ஒப்பந்தம்கூடச் செய்து கொள்ளவில்லை. படம் ஓடினால் பணம் என்று பேச்சு. காதல் படகு - கதையின் பெயரைத் தொடர்ந்து மற்றப் பெயர்கள் வந்து போயின. கதை - கண்ணன் என்று அறிவித்தன டைட்டில்கள் கமலக்கண்ணனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. நினைத்தால் முகம் சிவந்தது. காட்சி முடிந்த பின் நடந்த பாராட்டு விழாவில் பேசிய நடிகர்களும், நடிகைகளும், டைரக்டர்களும் பத்திரிகையாளர்களும் பிரமாதமான கதை அமைப்புக்காக டைரக்டரைப் பாராட்டினார்கள். ஏனென்றால் டைரக்டரின் பெயர் கண்ணன்!

விழா முடிந்ததும் கமலக்கண்ணன் தட்டுத் தடுமாறி டைரக்டர் கண்ணன் அருகே சென்று பிடித்தார்: 'என்ன இப்படிப் பண்ணிவிட்டீர்கள்! என் பெயர் டைட்டில்களில் கூட வரவில்லையே. பதிலுக்கு உங்கள் பெயரைப் போட்டு விட்டீர்களே!' என்றார் நாக்குழற. 'மன்னிக்கணும்! கமலக்கண்ணன் என்ற பெயரைச் சுருக்கிக் கண்ணன்னு போட்டிட்டேன்! அப்போது என் பேரும் கண்ணன் என்பது எனக்கு நினைவே வரவில்லை. ஸாரி ஸார்! என் பெயர்கூட ஞாபகம் இல்லே!' டைரக்டர் கண்ணன் பட உலகப் பிரமுகர் ஒருவரை வழியனுப்ப விரைந்தார். ஆட்டம் முடிந்தது. வெளியேறிய ரசிகர் ஒருவர் 'வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு' என்று யாரிடமோ எதற்கோ சொல்லிக் கொண்டு போனார்.

-மகார்





நேர்த்தியான வேலைப்பாட்டிற்கு
பிரசித்திபெற்ற
அரவிந்த்
SANFORIZED
Arvind Quality
அரவிந்த் மில்ஸ் லிமிடெட்

சாதல் இல்லையேல் காதல்

'சோ'

காட்சி 20

சபேசன் வீடு

[திருவாளர் சபேசன் வீட்டுச் சாப்பாட்டு அறையில் டேபிள் மீது பலவிதமான தின்பண்டங்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. பிங்கான் தட்டுகள், ஸ்பூன்கள் முதலிய உபகரணங்களுக்கும் குறைவில்லை. ஒரு விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் தயார் என்பது பார்த்த உடனே தெரிகிறது. அமர்ந்து சாப்பிட நாற்காலிகளோ மற்ற வசதியோ இல்லை. ஓ! இது 'பொப்பே' விருந்து. பெரிய மனிதர்கள் இல்லங்களுக்கே உரிய பாணி. பொப்பே விருந்தின் சிறப்பு எல்லோருக்கும் தெரிந்திருக்கும். விருந்தினர்கள், அவரவர்களே கைகளில் தட்டுகள் ஏந்தி விரும்பிய பண்டங்களை, வேண்டிய மட்டும் தாங்களாகவே எடுத்துக்கொண்டு, உண்டு களித்துச் செல்வதே 'பொப்பே' விருந்து. யாரும் பரிமாறமாட்டார்கள். தன் கையே தனக்கு உதவி.

'பொப்பே' விருந்தில் மாட்டிக் கொள்ளும் விருந்தாளிகளின் நிலைமை எவ்வளவு தர்ம சங்கடமானது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சில பண்டங்களைப் பார்த்தால் நாக்கிலே ஜலம் ஊறும்; எடுத்துக் கொண்டால் என்ன நினைப்பார்களோ என்று உள்ளத்தில் அச்சம்; யாராவது ஒருவர் முதலில் எடுத்துக் கொண்டால் நாமும் எடுத்துக் கொண்டு விடலாம் என்ற நப்பாசை; நாம் விரும்பும் பண்டத்தை வேண்டிய மட்டும் எடுத்துக் கொள்ளாமல் தடுத்துத் தொலைக்கும் நமது வறட்டுக் கௌரவம். இப்படிப் பற்பல உணர்ச்சிகளுக்கிடையே மனம் அலைமோதி, கடைசியில் ஒருவாறு மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு விரும்பிய பண்டத்தை ருசித்து விடுவது என்று நிர்மானித்து அதை நெருங்கும்போது, விருந்துக்கழைத்தவர் விருந்தாளியை நெருங்கி "உம்.. ஹெல்ப் யுவர் ஸெல்ப்- எடுத்துக் கொள்ளுங்கள்" என்று புன்முறுவலோடு விஷமத்தனமாகக் கூறுவார். "உமது அல்ப ஆசையை நான் பார்த்து விட்டேன் - பரவாயில்லை சாப்பிடுங்கள்" என்று கூறாமல் கூறும் அவரது புன்னகையைக் கண்டு விருந்தாளி வெட்கி, தலை குனிந்து அசடு வழிய "உம். உம்.. வயிறு புல்!.. அப்பாடா!" என்று மென்று விழுங்குவார்- எச்சிலைத் தான்! வேறென்ன இருக்கும் மென்று விழுங்க? பண்டங்கள் தான் வைத்தது வைத்தபடி மேஜையின் மீதே காட்சியளிக்குமே!

வயிற்றைப் பசி கிள்ளியெடுக்க, ஏன் இங்கு வந்தோம் என்று விருந்தாளிகள் பரிதவித்து நிற்க, விருந்துக்கு அழைத்தவர் "என்ன ஒன்றுமே சாப்பிடலையே?" என்று கேட்டு வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் போது என்ன பதில் சொல்வது? "வாஸ்தவம் தான். ஹோட்டலில் போய்ச்சாப்பிட்டு விட்டு வீட்டுக்குப் போய்த் தொலைக்கப் போகிறேன்" என்று மனத்தில் எழும் எண்ண அலைகளை வெளியிட முடியுமா? ஆனால் ஒன்று. வெற்றிலை பீடாவை மட்டும் வெகு உபசாரமாக விருந்தாளிக்குக் கையிலே எடுத்துக் கொடுப்பார்கள். இதற்கு என்ன அர்த்தமோ? "உன் சாப்பாடு முடிந்துவிட்டது. ஏதாவது அரைகுறை சபலம் இருந்தால் மறந்து விடு. இந்தா பீடா!" என்று கூறி நமது விருந்தை முடிக்கிறார்களோ என்னவோ!

விருந்தாளியைக் கூப்பிட்டு அமர்த்தி, "வேண்டாம் போதும், போதும்" என்று சொல்லுமளவுக்கு உபசரித்து, வழியனுப்புவது அநாகரிகம் என்று கருதுபவர்கள் அளிக்கும் விருந்துதான் பொப்பே! "இதில் என்ன தவறு? விருந்தினர்கள் இதைத் தங்கள் வீடு மாதிரி நினைத்துக்கொள்ள வேண்டும். வேண்டிய மட்டும் உண்டு களிக்க வேண்டும் என்றுதானே இம் மாதிரி விருந்தளிக்கிறோம்" என்று அவர்கள் நினைக்கலாம். ஆனால் விருந்தாளி என்ன நினைப்பார்? "உன்னை உபசரிக்க என்னால் முடியாது. ஏதோ விருந்துக்கு வந்து தொலைத்துவிட்டாய். சாப்பிட்டுவிட்டுப் போய்த் தொலை!" என்று சொல்வதாகவே நினைக்கலாம் அல்லவா?

இந்த விருந்துகளில் ஏது இருக்கிறதோ இல்லையோ, நல்ல பெயர்ப் பொருத்தம் இருக்கிறது. விருந்தாளிகளை அழைத்து "உனக்கும் 'பெப்பே' உன் பசிக்கும் பெப்பே" என்று கூறுவதுதானே 'பொப்பே' விருந்து!

அப்படிப்பட்ட 'பொப்பே'யிற்கான ஏற்பாடுகள் சபேசன் சாப்பாட்டு அறையில் தயாராக இருக்கின்றன.

சபேசன், சுரேஷ், நாகராஜன் மூவரும் அறைக்குள் நுழைகிறார்கள்.)

சுரே: என்ன ஸார் இன்னிக்கு விசேஷம்? கேட்டால் சொல்லவே மாட்டேங்கிறீங்களே? எதுக்கு இந்த விருந்து?

சபேசன்: இது.... தெரியும்.... நம்ப கவிஞர் தம்பி தியாகராஜனுக்குத்தான் இந்த விருந்து.....

சுரே: எதுக்கு ஸார், இதெல்லாம்...... சாயந்திரம்தான் மீட்டிங் இருக்கே.....

சபே: அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? என்ன தியாகராஜன் — ஒண்ணுமே பேச மாட்டேங்கிறியே?

நாக: ஹி...ஹி... ஒண்ணுமில்லே ஸார்....

சபே: ரொம்ப அடக்கமான பய...உனக்கு இப்படி வரவேண்டாம். அட, அண்ணன் தான் போயிட்டான். உனக்குமா சித்தப் பிரமை பிடிக்கணும்...... பாவம்....பாவம்!

நாக: ஸார்.... சித்தப் பிரமை வந்து....

சுரே (குறுக்கிட்டு): யெஸ்! யெஸ்.... சித்தப் பிரமை!... பாவம்! ஸார் விருந்துக்கு யாரோ இன்னும் இரண்டு பேர்கள் வராங்கன்னு சொன்னீங்களே யாரு ஸார்?

சபே: நம்ப நாகராஜனுக்கு வேண்டியவங்கதான். மெட்ராஸ்லேயிருந்து வந்திருக்காங்க! என்னோடதான் தங்கறாங்க.

நாக: நாகராஜனுக்கு வேண்டியவங்களா?

சபே: ஆமாம்...... உங்கண்ணனுக்கு ரொம்ப வேண்டியவங்க. எனக்கும் உறவு தான்! தூரத்து உறவு! ஆனால் ரொம்ப நெருங்கின சிநேகிதங்க! உறவு தூரப் போகப் போகத்தானே, சிநேகிதம் கிட்டக் கிட்ட வருது!



நாக: ஆஹா! என்ன தத்துவம்! என்ன தத்துவம்!

சபே: தேவலையே! புத்திசாலியா இருக்கியே!

கரே: அவன் இப்படித்தான் ஸார், ஏதாவது உளறுவான்.

சபே: என்னய்யா! என்னை பிரெய்ஸ் பண்றான் — என் ஐடியா நல்லாயிருக்குதுன்றான்...அது உளறலா? நீதான் உளர்றே!

கரே: ஸார்! ஆமாம்.........அவங்க யாருன்னு சொல்லலியே!

சபே: ஓ! யெஸ்! யெஸ்!...அவங்கதான்டா.. என் வீட்டுக்கு வந்திருக்காங்கன்னு சொல்லலே, அவங்கதான்!

கரே: உங்க வீட்டுக்கு வந்திருக்கறவங்கதான் யாருன்னு கேக்கறேன்?

சபே: வீட்டுக்கு யாருய்யா வருவாங்க? ரொம்ப வேண்டியவங்கதான்.

கரே: அந்த ரொம்ப வேண்டியவங்க யாருன்னுதான் தெரியலே!

சபே: அதான் என் வீட்டுக்கு வந்திருக்கறவங்க! எழவு எத்தனை தடவை சொன்னாலும் உனக்குப் புரியாது! (நாகராஜனிடம்) ஏம்பா, உனக்கும் புரியலே!

நாக: ஓ! யெஸ்! அவங்கதான் உங்களுக்கு ரொம்ப வேண்டியவங்க!

சபே: அது யாரு?

நாக: அதான் வீட்டுக்கு வந்திருக்காங்களே! அவங்க தான்!

சபே: கரெக்ட்! (கரேஷிடம்) பார்த்தியா? இவன் எவ்வளவு நல்லா புரிஞ்சிகிட்டான் பாரு!

கரே: எனக்குக்கூடத்தான் புரிஞ்சுடுத்து.

சபே: என்ன புரிஞ்சுது?

கரே: அதான் நீங்க சொன்னீங்களே...அதான்...

சபே: நான் என்ன சொன்னேன்?

கரே: நான் புரிஞ்சுக்கிட்டேனே, அதைத்தான் சொன்னீங்க!

சபேசன் (ஆத்திரமாக): நீ புரிஞ்சுக்கிட்டதைத்தான் என்னன்னு கேக்கறேன்.

கரே: நீங்க சொன்னீங்களே, அதைத்தான்!

சபே: என்னய்யா இது கர்மம்! நாம இப்ப எதைப் பத்திப் பேசறோம்? எழவு உன்னோட பேரிலே கன்ப்-யூஷன்! இதோ பாருய்யா மாலதியும், கனகசபையும் மாடி ரூம்லே இருக்காங்க. இப்ப வந்துடுவாங்க...அவங்க எதிரிலே இந்த மாதிரி உளறாதே!

நாக (திடுக்கிட்டு): யாரு மாலதியா?

கரே: மாலதி, கனகசபையா? அவங்களா வந்திருக்காங்க?

சபே: யெஸ்! ஏன் வந்தா என்னய்யா? ஏன் இப்படிக் கத்தறே! நீ என்ன கேக்கறது?

நாக: ஸார், மாலதி இப்ப இந்த வீட்டுலே இருக்காளா! மாலதி...

சபே: மாலதியை உனக்குத் தெரியுமா?

நாக: தெரியுமாவா? அவளைத் தானே ஸார், நான் காதல் கல்யாணம்...

சபேசன் (திகைத்து): என்னது? மாலதியை நீ. கல்யாணம்... ஓய்! வாட் ஈஸ் திஸ்!

கரே: திஸ்... ஈஸ்... சித்தப் பிரமை! யாரைப் பார்த்தாலும் காதலின்னு நினைச்சுக்கறான்!.... பாவம்! காதல் பைத்தியம்!

சபே: ஐயோ பாவம்! ஏன்யா கரேஷ்... இவனுக்கு அண்ணன் செத்ததுனாலேதானே சித்தப் பிரமை பிடிச்சுது? காதல் பைத்தியம்னு சொல்றியே! கல்யாணம் வேறே ஆயிடுச்சுன்னே!

கரே: ஆமாம், ஸார்! (சமாளித்து) ஸார், இவன் அண்ணன் பாவம்! காதலிச்சவளைக் கல்யாணம் பண்ணிக்காமலே செத்துப் பூட்டான்! அதனாலே இவனுக்குக் காதல் பைத்தியம்.

சபே: என்னய்யா இது? அண்ணனுக்குக் காதல் நிறைவேறலே. அதனாலே தம்பிக்குக் காதல் பைத்தியமா? அண்ணனுக்கு இல்லே புடிக்கணும்!

கரே: அவனுக்கு எப்படிப் பிடிக்கும்! அவன் தான் செத்துப் பூட்டானே!

சபே: ஓ! யெஸ்! யெஸ்!.... கரெக்ட்! அவன்தான் செத்துப் பூட்டானே. செத்துப் போனவனுக்கு எப்படிப் பைத்தியம் பிடிக்கும்?

கரே: கரெக்ட்! சொன்னவுடனே புரிஞ்சுக்கிறீங்க ஸார்!

சபே: யெஸ்! யெஸ்! எதையும் 'டக்'னு புரிஞ்சுக்கணும்!

நாக: இப்போ எதுக்கு மாலதி இங்கே வந்தா?

சபே: உன்னைக் கல்யாணம் பண்ணிக்க!

நாக: நிஜமாகவா?

சபே: ஆசையைப் பாரு! நல்ல பைத்தியம்யா நீ...உன்னை விருந்துக்குக் கூப்பிட்டதே தப்பு! மாலதி பாவம், ஒரு பெரிய கவிஞன்



செத்துப்பூட்டானேன்னு வருத்தமா இருக்கா. நீதான் அவன் தம்பியாச்சே, உன்னே அவ பார்க்கட்டும்னு கூப்பிட்டு வெச்சேன்!...... இதோ பாரு சுரேஷ்..... இவனேக் கொஞ்சம் கண்ட்ரோல்லே வை!

சுரே: நான் பார்த்துக்கறேன் ஸார்....! ஸார்..... நாகராஜன் செத்ததினுலேயா மாலதி ரொம்ப வருத்தமா இருக்கான்னு சொன்னீங்க ?

சபே: ஆமாம்பா! அவளுக்கு நாகராஜனே நல்லாத் தெரியுமாம்! அவன் கவிதைன்னு உசிராம்! அந்தப் பையன் நாகராஜன், தான் இவ்வளவு பிரபலமானவன்னு அவன் கிட்டகூடச் சொல்லலேயாம்பா!

சுரே: அவன் செத்தது அவளுக்கு எப்படி ஸார் தெரிஞ்சுது?

சபே: எல்லாம் உன் பேப்பர்லேதான் வந்துதே..... 'பம்பாய்த் தமிழன்'.

சுரே: அதை மெட்ராஸுக்கு நாங்க அனுப்பறதில்லேயே.....

சபேசன்: நீங்க அனுப்பாட்டி என்ன? அவங்க வீட்டுக்கு ஏதோ சாமான் பொட்டலம் கட்டிக் கடையிலேயிருந்து வந்திருக்குது! உன் பேப்பர் அதுக்குத்தானே லாயக்கு!

சுரே: அப்படியா விஷயம்.....?

சபே: அவளாலே தாங்க முடியலே.... சித்தப்பனேயும் கூட்டிக்கிட்டுப் பம்பாய் வந்து சேர்ந்துட்டா!....

சுரே: இங்கே வந்து என்ன பண்ணப்போரு?

சபே: அவன் இங்கேதானேய்யா செத்தான்? அவன் செத்த வீட்டைப் பார்க்கணுமாம்...... ஏன் செத்தான், எப்படிச் செத்தான் எல்லாம் தெரிஞ்சுக்கணுமாம்..... அதுக்காக அவன் தம்பி தியாகராஜனேப் பார்த்துப் போகணுமின்னு...... அதனுலே உங்களெ யல்லாம் விருந்துக்குக் கூப்பிட்டேன்.. தெரியுதா ?

நாக: கடவுளே! சுரேஷ் வேண்டான்னு சொன்னேன், கேட்டியா? இது என்ன தகராறு! எல்லாம் அவுட் ஆயிடப் போறது...... நல்லா மாட்டிக்கிட்டோம்.

சபே: என்னய்யா சொல்றே?

கரே: அவன்..... அவன்.... (நடுங்கிறான்)

சபே: நீ இருய்யா.... சும்மா குறுக்கே, பேசிக்கிட்டு..... (நாகராஜனிடம்) நீ சொல்லுப்பா.....! என்ன நல்லா மாட்டிக்கிட்டே! என்ன நடந்திருக்க?

நாக: இன்னும் என்ன நடக்கணும்? மாலதி வந்து பார்த்தா தனிச்சா தெரியுது! கனகசபையிட்டே மாட்டிக்கிட்டு முழிக்கணும் உங்களுக்கு எல்லாம் தெரிஞ்சுடப்போவுது!

கரே: ஸார்...அவன் என்ன சொல்றான்னு..

நாக: சரிதான் போடா! எல்லாந்தான் தெரியப் போறதே! என்னமோ சமாளிக்கப் பார்க்கிறான்!

கரே (நாகராஜனிடம் மெதுவாக): டேய்! பேசாமல் இர்ரா..... காரியத்தைக் கெடுக்காதே...... (உரக்க) டேய், உனக்கு உடம்பு சரியாயில்லே, ஏதாவது உளறுதே... மானம் போறது!

நாக: உன் பேச்சைக் கேட்டுக் கேட்டுத் தான் ஏமாந்து போனேன்!.... ஸார் நான் சொல்றேன் ஸார்...... அவங்க வந்தப்புறம் தெரியறது இப்பவே தெரியட்டும்!

கரே: டேய் உளறுதேடா வேண்டான்டா!

நாக: இடியட்! மடையா! பேசாதே.... வம்புலே மாட்டிவிட்டு வேடிக்கையா பார்க்கிறே! நீங்க நான் சொல்றதைக் கேளுங்க ஸார்!

கரே: டேய் பிளீஸ்..... உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். தயவுசெஞ்சு பேசாமஇர்ரா!

நாக: மண்ணாங்கட்டி! நீ ஒரு அயோக்கிய ராஸ்கல்! என்னை ஜெயிலிலே தள்ளி வேடிக்கை பார்க்கப் போறே!..... இப்ப என்ன இருந்தாலும் எல்லாம் தெரிஞ்சுடப் போறது. நானே சொல்லிடறேன்! ராஸ்கல்! முட்டாள்! இடியட்!

கரே: என்னைத் திட்றான் ஸார்.....!

சபே (பயந்து): உஸ்....ஸ்... (நாகராஜனிடம்) அந்த மாதிரி பேசக் கூடாது. அவன் நல்ல பையன்...... கரேஷ் தங்கமானவன்... அவனை இப்படியெல்லாம் பேசாதே!

நாக: அவனைப் போய் நம்பறீங்களே!

கரே: பார்த்தீங்களா ஸார்! உங்களையே திட்றான்! அவனுக்கு முத்திப் போச்சு!

நாக: ஸார், நம்புங்க! நாகராஜன் கவிஞனே இல்லே! அவன் சாதாரண முட்டாள்!

கரே: அண்ணனைத் திட்றான்!

நாக: நான்தான் நாகராஜன்!

கரே: உளர்றான்!

நாக: முதல்லேயே சொல்லியிருக்கணும். நான் ஒரு முட்டாள்.

கரே: தன்னையே திட்டிக்கிறான்....

நாக (உரக்க): மிஸ்டர் சபேசன்!

சபேசன் (பயந்து நடுங்கி): கரேஷ், இவன் என்னப்பா....இவன் அய்யய்யோ....

நாக: பயப்படாதீங்க! நான் பைத்தியம் இல்லே! . (அவரை நெருங்குகிறான்)

சபே: கரேஷ்...... அவன் கிட்டேவரான். கிட்ட வரான்......! பிடிச்சுக்க அவனை!

கரே: பயப்படாதீங்க, ஸார்!....இன்னும் அடிதடியெல்லாம் ஆரம்பிக்கலே....

சபே: அடிதடி ஆரம்பிக்கிற வரைக்கும் நீ விடமாட்டே போலிருக்கே! அதுக்குள்ளே அழைச்சுக்கிட்டுப் போயிடுப்பா... ப்ளீஸ்!

கரே: சாயந்திரம் மீட்டிங்க்......

சபே: வரேன்.... சத்தியமா வரேன்.... என்னை இப்ப விட்டுடு..... இவனை மீட்டிங்குக்கு அழைச்சிக்கிட்டு வராதே..... இப்ப கூட்டிக்கிட்டுப் போயிடு...... சீக்கிரம்..... ப்ளீஸ்...... அய்யய்யோ..... அவன் சிரிக்கிறானே..... சிரிக்கிறானே!

கரே: இப்ப நாங்க போயிட்டா எப்படி ஸார்? விருந்து என்ன ஆறது?

சபே: இன்னொரு நாள் பார்த்துக்கலாம்! இவனுக்கு மட்டும் தனியா விருந்து குடுக்கறேன்...... (பரிதாபமாக) போகமாட்டியா?

நாக: சரியான பைத்தியம் சார், நீங்க!

சபே (கரேஷிடம்): அவன் என்ன சொல்றான் பார்த்தியா..... என்னைப் பைத்தியம்னு சொல்றான்!


கரே: இந்தப் பைத்தியங்களே இப்படித் தான் ஸார்!

நாக: நாங்க போயிட்டு வரோம் ஸார். நல்லதுக்குக் காலமில்லே! மாலதியையே பார்த்துப் பேசிக்கறேன்.....

சபே: இப்ப சாதாரணமா பேசறானே!

கரேஷ் (போய்க் கொண்டே): அதனாலே தானே அவன் பைத்தியமா இருக்கான்! எப்பவுமே பைத்தியக்காரத்தனமா பேசறவன் எப்படி ஸார் பைத்தியமா இருக்க முடியும்? அப்படிப் பேசறவன் அரசியல்வாதி! நடு நடுவே சரியாப் பேசிட்டா அவன் பைத்தியக்காரன்! இது தான் ஸார், உலகம்!

சபே: சரி.... சரி.... அவனோட சேர்ந்து உனக்கும் ஒரு மாதிரியா இருக்கு! நல்ல வேளையா போய்ச் சேரு! (தொடரும்)



இந்தியாவில் முதன் முதலாக டெலிவிஷன் மூலம் இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் கதீட்ரல் காரியாலயத்தில் சில விநாடிக்குள் உங்கள் காரில் இருந்தபடியே உங்கள் செக்கிற்கு பணம் பெறலாம். இதே மாதிரி பணமும் கட்டலாம்.
மவுண்ட் ரோடு
இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்
தலைமைக் காரியாலயம்: 151, மவுண்ட் ரோடு, சென்னை-2.
எம். ஸிடி. முத்தையா
சேர்மன்
கே. எம். நஞ்சப்பா
ஜெனரல் மானேஜர்

சலவைக்கு சலவை...

துணிகளுக்கு அதிக ஒளியூட்டுவது

மேம்பாடடைந்த, புதிய

ஸன்லைட்



<u>மேம்பாடடைந்த, புதிய ஸன்லைட்!</u> ஒரு முறை வெள்ளோட்டம் பார்த்தீர்களானால் வெட்டவெளிச்சமாகத் தெரியும் அதன் மேன்மை! உண்மை, சலவைக்கு சலவை உங்கள் துணிகளுக்கு அதிக ஒளி. சிறிதே தேய்த்தாலும் செழுசெழுவென்று கொழிக்கும் நுரை...தூய்மை ஓங்க வெளுத்து, ஒளி பிறக்க உதவும்! உங்கள் துணிகள் அனைத்துக்கும் உபயோகியுங்கள்: <u>மேம்பாடடைந்த புதிய ஸன்லைட் சோப்.</u>

உங்கள் அன்றாடத் துணிகளின் சலவைக்குரியது
மேம்பாடடைந்த, புதிய ஸன்லைட்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

புயலில் பயணம்

கல்யாணசுந்தரி ஜகந்நாத்



விடிந்தால் தீபாவளி. இன்னும் அந்தி சாயவில்லை. தெருவில் படபடவெனப் பட்டாசு வெடிச் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அவுட் வாணங்கள் ஆகாயத்தின் மீது மங்கிய ஒளிக் கோடுகளாகத் தோன்றி மறைந்தன. வாடைக் காற்று சில்லென்று அடித்துக் கொண்டிருந்தது. குழந்தைகளின் கலகலப்பான சிரிப்பும், அக்கம் பக்கத்து வீடுகளில் காலை கங்கா ஸ்நானத்துக்காகக் கங்காளங்களைப் புரட்டித் தேய்க்கும் ஓசையும் கலந்து கேட்டவாறிருந்தன.

நாளெல்லாம் அலைந்து வந்த அலுப்பைக் கூடத் தீர்த்துக் கொள்ளாமல் ருக்மிணி மெதுவாக மதுசூதனின் படுக்கையின் அருகில் வந்து குனிந்து பார்த்தாள். படுத்திருந்த மதுசூதனின் முகம் சுவர்ப் பக்கமாகத் திரும்பி யிருந்தது.

''பசிக்கிறதா? கஞ்சி காய்ச்சித் தரட்டுமா? முதலில் டானிக் சாப்பிடுகிறீர்களா?'' என்று மெதுவாகக் கேட்டாள் ருக்மிணி.

''அடாடா, உன்னுடைய புறாக்களை விட்டு விட்டு என்னிடம் வந்து விட்டாயே? அவைகள் என்ன நினைக்கும்?'' என்றான் மது குத்தலாகத் திரும்பாமலே.

''ஜோடிப் புறாவில் ஒன்றுதான் இறந்து விட்டதே. மிருந்திருக்கும் ஒன்றும் எதையுமே சாப்பிடுவதில்லை'' என்றாள் ருக்மிணி தாபத்தோடு.

''பீடை போயிற்று.''

''என்னங்க இது? கனிவுள்ள நெஞ்சம் படைத்த நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?'' என்று தீனமாகக் கேட்டாள் ருக்மிணி. சற்று நேரம் அங்கேயே நின்றாள். மது பேச்சுக் கொடுக்கவில்லை. எவ்வளவு நேரம்தான் நிற்பாள்? கெஞ்சும் கால்களை எப்படியோ எடுத்து வைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். பிறகு மாற்றுச் சேலை உடுத்திக் கொண்டு சமையலறை ஜன்னலின் மீது உட்கார்ந்து விட்டாள். வயிற்றில் பசி தீயாகத் தகித்துக் கொண்டிருந்தபோதிலும், எதையும் சாப்பிட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. மதுவின் கோபம் தணியும்வரை அப்படியே உட்கார்ந்திருக்க நினைத்தாள் ருக்மிணி. அவளுக்கும் உள்ளூறக் கோபம்தான்.

அந்தப் பெண் எதற்காகவோ மறுபடியும் ருக்மிணியின் நினைவிலே தோன்றினாள். எவ்வளவு அழகான சாட்டின் பாவாடை அணிந்திருந்தாள் அவள்! டெரிலின் புடவை வழியாக ரோஜா இதழ்களைப் போன்று மிருதுவாகவும், லேசாகவும் தெரிந்தது. அவள் அணிந்திருந்த உள் பாவாடை.

அன்று காலை அவள் விற்பனைக்காகப் புறப்பட்டவள் கேவல்ராம் மாளிகைக்குள்ளிருந்த கதவைத் தட்டினாள். அப்பொழுது உள்ளிருந்து இலேசான சிரிப்பொலி கதவுக்கு இப்பாலும் கேட்டது.

சிரிப்பை அடக்கிக் கொள்பவள் போல் உள்ளிருந்து ''யாரது? வாருங்கள்'' என்றாள் ஒரு மங்கை. உள்ளே யாரோ ஆண்பிள்ளை மெதுவாகச் சீட்டியடித்துப் பாடும் சத்தம் கேட்டது. கலைந்த தலை மயிரோடிருந்தாலும் எவ்வளவு அழகாக இருந்தாள் அந்தப் பெண்! எவ்வளவு ஆதரவோடு, அன்போடு, அவளுக்குத் தலையணையைச் சரிசெய்து வைத்தான் அந்த ஆண்மகன்!

ஏன் இந்த எண்ணங்கள்? ஒரு வருடத்துக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சி! எதற்கு அதெல்லாம் இப்போது? வேண்டாமென்றாலும் அந்த ஞாபகங்கள் வரத்தானே செய்கின்றன? அதுவும் தீபாவளியன்றுதானே நடந்தது.

அப்போது தாத்தா இறந்து நான்கு மாதங்களே ஆகியிருந்தன. பாட்டனாரோடு வீடு வாசல் எல்லாமே போய் விட்டன. காமாட்சி அத்தை ஒருத்திதான் அவளுக்குக் கதி. அந்த அத்தைக்கு வாய்த்த கணவரோ மகா முகடு. ஒரே வாரத்தில் அவரும் அத்தையும் அமெரிக்கா போய்விடப் போகிறார்கள். அதனால் தனக்குத் தெரிந்தவர்கள் வீட்டில் அவளை விட்டு வைப்பதாகவும் பிறகு உத்தியோகம் பார்த்துக் கொள்ள வேண்டும்

என்றும் யோசனை கூறினாள் அத்தை. ஏற்கெனவே ருக்மிணிக்கு அந்த வீட்டில் இருப்பது நரக வேதனையாகத்தான் இருந்தது.

ஒரு நாள் எப்படியோ துணிவை வரவழைத்துக் கொண்டு அமைதியை நாடி வீட்டை விட்டுப் புறப்பட்டாள். தாத்தாவோடு , கடற்கரைக்குச் செல்லும் பழக்கத்தில் அவள் கால்கள் அவளை அறியாமலேயே கடற்கரையை நோக்கி நடந்தன.

அப்பொழுது கடற் கரையிலே இருள் பரவத் தொடங்கியது. காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. பொங்கும் கடலுக்கு ஓரே சீற்றம். காற்றைத் தடுப்பதற்காகத் தான் தூணுக நீல நிற அலைகளை எழுப்பியது. ஆனால் பேய்க் காற்றுக்கோ நம் வழியில் குறுக்கிட இவன் யார் என்ற ஆத்திரம்! நீலக் கடல் எழுப்பும் அலைகளைச் சாடி வீழ்த்தி, கெக்கலி கொட்டி நகைத்தது.

யோசனையில் ஆழ்ந்துவிட்ட ருக்மிணிக்கு நேரம் போனதே தெரியவில்லை. 'நான் ஒரு வேலை தேடிக் கொள்ள வேண்டும். கல்லூரிப் படிப்போ முடிந்தபாடில்லை. இன்னும் ஒரு வாரத்தில் அத்தை வீட்டு நிழலும் நமக்கு இராது. மதுவைச் சந்தித்து எத்தனை நாட்களாகின்றன? தாத்தா இறந்த புதிதில்தான் அவரைப் பார்க்க முடிந்தது. பிறகு மதுவோடு நாம் பேசினாலேயே காமாட்சி அத்தைக்குப் பிடிப்பதில்லை. அதுமட்டுமா? அவர் வீட்டுக்கு வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு விதத்தில் அவரை அலட்சியப்படுத்தவும் தொடங்கி விட்டாள்.

அதென்னவோ இவ்வளவு கஷ்டங்களிலும் மதுவின் முகமே அழியாத உயிரோவியமாக அவள் மனத்தில் பதிந்து விட்டது. மதுவின் ஒவ்வொரு பேச்சும், ஒவ்வொரு செய்கையும், ஒவ்வொரு பார்வையும் அவளது உள்ளக் கிடக்கையிலே பதிந்து, இனம் தெரியாத இன்பப் பூரிப்பிலே அவளை மிதக்கச் செய்து கொண்டிருந்தன. ஏதோ ஓர் இனிமை அவள் இதயத்தைக் கவர்ந்தது. மிகுந்த சிரமப்பட்டுத்தான் இன்ப மயக்கத்தை அளிக்கும் அந்தக் கனவு உலகத்திலிருந்து விடுபட்டு, விழிப்புற முயல்வாள். தன்னைச் சுற்றிய சூழ்நிலை அவள் முகத்தில் தண்ணீரால் அடித்ததுபோல் அவளை விழிப்புறச் செய்யும்.

ஆ! எத்தனை நாட்களாகி விட்டன, மதுவை நேருக்கு நேராகப் பார்த்து! மது அவளது விழித் திரையிலே நடமாடி! இனி இந்தச் சிந்தனை யெல்லாம் எதற்கு? அவளோ அநாதை. பரம ஏழை. மதுவோ தாய் தந்தையரின் நிழலில் வாழ்பவர். பெரும் பணக்காரர். எல்லாவற்றுக்கும் மேலாக அவருக்கு வீட்டிலேயே அத்தை மகள் முறைப் பெண்ணுக வளர்கிறுள். ஆஸ்தி பாஸ்தி உள்ளவர். செல்வத்தில் மிதப்பவர். குடும்பத்தினர் அவளையும் அவரையும்தான் இணைத்துப் பேசுவார்கள். இனிமேல் மதுவை மறந்துவிட வேண்டும். அது எப்படி முடியும்?

சட்டென்று யாரோ முகத்தின் மீது எதாலோ அடித்தாற் போலிருந்தது. அவள் முகத்தின் மீது வந்து விழுந்தது மணல். முறங்களால் எடுத்து முகத்தில் அடிப்பது போல் நாற்புறத்திலும் வந்து விழுந்தது. ராக்ஷஸ பலத்தோடு காற்றடித்துக் கொண்டிருந்தது. பெரிய மலைகளைப் போன்ற அலைகளோடு நுரை கக்கியபடி கடல் குமுறிக் கொண்டிருந்தது. வானம் கார் முகில் கவிந்து கனம் தாங்க மாட்டாமல் வளைந்து கொடுத்தது போலிருந்தது. அதுவரையில் முத்து முத்தாகத் தெறித்துக் கொண்டிருந்த தூற்றல் பெரு மழையாக மாறிப் பேய் மழையாகவும் பரிணமித்தது.

அந்தி இருள் கருமேகங்களின் நிறத்தை மேற்கொண்டு தன்னை மறைத் திரைகளால் மூடிக் கொண்டது. சுற்றிலும் வெள்ளக்காடு. கண்ணுக்கு எட்டியவரையில் ஆளரவம் காணேம். ருக்மிணி மழையில் நனையலானுள்.

''ருக்கு! ருக்கு!'' யார் கூப்பிடுகிறார்கள்? கடலின் இரைச்சலில், காற்றின் கர்ஜனையில், மழையின் அழுகையில் பயங்கரமாக வெறிக் கூத்தாடும் இயற்கையின் அட்டகாசத்தில் கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஒரு தெய்வம் வீணை மீட்டியது.

நன்கு தெரிந்த குரல்தான். யார் குரல்? எங்கிருந்து வருகிறது? மனத்தில் உருவாகும் தீவிரமான ஆசைகள் இப்பூவுலகில் உருவம் புனைந்து நடமாடுவது உண்டு என்று கூறுவார்கள். அப்படி ஏதாவது இருக்குமோ? சே! பிரமை! பைத்தியக்காரத்தனமான பிரமை!

அது சரி, இப்போது எப்படித் திரும்பிப் போவது? இங்கிருந்து எந்தப் பக்கம் போவது? எங்கு போவது?


''ருக்கூ! ருக்கூ!! எங்கே இருக்கிறாய்? இருக்கும் இடத்திலேயே நில். நான் வந்து கொண்டிருக்கிறேன்.'' த ற் செ ய லா க மதுவேதான், அவளைத் தேடி வந்து கொண்டிருந்தான்.

''மது, இதோ இங்கேதான் இருக்கிறேன்'' என்றாள் ருக்மிணி உரத்த குரலில். இந்த இருட்டிலே, இந்தப் புயலிலே மது அவளுக்காகவா வந்தார்? அப்பா! அவளுக்குத் தாங்க முடியாத சந்தோஷம் பொங்கி வந்தது. அவள் இங்கு இருப்பது மதுவுக்கு எப்படித் தெரிந்தது?

''உன் அத்தை வீட்டுக்குப் போயிருந்தேன். உனக்கு இருக்கும் மனநிலையில் நீ இங்குதான் எங்கேயாவது இருக்க வேண்டும் என்று எண்ணினேன். அதற்கு ஏற்றாற்போல் உன்னை இந்தக் கடற்கரையிலே பார்த்ததாக உன் அத்தை வீட்டு டிரைவரும் சொன்னார். எனவே, காரை இப்படித் திருப்பி ஓட்டி வந்தேன். வழியிலேயே காற்று மழை பிடித்துக் கொண்டு விட்டது. டாப் கியரில் வண்டியை ஓட்டி வந்தேன். வா, போவோம்'' என்று ஒரே மூச்சில் சொல்லி அவள் கையைப் பிடித்து ஈர மண்ணிலிருந்து தரதரவென்று கார் பக்கமாக இழுத்துச் சென்றான் மது.

இதயத்திலுள் எழுந்த பற்பல உணர்வுகள் பந்தாக உருண்டு திரண்டு ருக்மிணியின் தொண்டையை வந்து அடைத்தன. மந்திரத்தால் கட்டுண்டவள்போல் மதுவின் பின்னலேயே நடந்தாள்.

கார் புறப்பட்ட பின், ''அப்பா! இவ்வளவு நனைந்து போய்விட்டாயே! உடம்புக்கு


மக்ளீன்ஸ் பற்பசையின் புதிய புல்லரிக்கும்
ருசியே சொல்லும் உங்களுக்கு,
அது செயலாற்றுகிறதென்று!
சுத்தமாக்க
– உங்கள் பற்களிலிருந்து அந்த மங்கிய மஞ்சள் நிலையைப் போக்குகிறது
வெண்மையாக்க
காக்க
– சொத்தைக்குக் காரணமான கிருமிகளை நீக்கி உங்கள் வாயைப் புத்துணர்ச்சியுடன் சுத்தமாக வைக்கிறது.
Macleans
tooth paste
மக்ளீன்ஸ்–அதிவெண்மையான பற்களுக்கு

கவை மிக மிக அதிகமானுல் அது கசக்கும். கவைமாதிரிதான் அன்பும் காதலும். இவை அதிகமாகும்போது? ருக்குவிடம் மதுவிற்கு ஏற்பட்ட மன மாற்றத்தின் அடிப்படைத் தத்துவமே இதுதான். கலியாணசுந்தரி ஜகந்நாத் 'புயலில் பயணத்தை' தம் தென்றலைப் போன்ற நடையிலே அளித்திருக்கும் அழகுக்கு இதைச் சிறப்புச் சிறு கதைகளாகவும் அட்டைப்படக் கதையாகவும் வெளியிடுவது பொருத்தம்தானே ?



ஆகுமா? முதலில் துடைத்துக் கொள்'' என்றான் மது, ஒரு கையை ஸ்டியரிங் சக்கரத்தில் வைத்து இரண்டாவது கையால் தனது கைக் குட்டையை எடுத்துக் கொடுத்துக்கொண்டே. ருக்மிணிக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

இந்த நிலையில் தன் அத்தை கண்ணில் பட்டு விட்டால்?—வேறு வினையே வேண்டாம். அவள் எதிரில் மதுவின் காரிலிருந்து அவள் இறங்கினால் உடனே வெளியே நடக்கச் சொல்லி விடுவாள். அதன் பிறகு போக்கு ஏது?

''ருக்கு! என்ன பேச மாட்டேன் என்கிறாய்? உன் அத்தை கொன்று விடுவாள் என்றா? எங்கள் வீட்டிலும் அப்படித்தான்.''

ருக்மிணிக்குத் தன் மானம் தாக்கப் பட்டாற் போலிருந்தது.

''அப்படியென்றால் எதற்கு வந்தீர்கள்? எனக்காக உங்கள் வீட்டிலே சண்டை வராதா?'' என்று கேட்டாள்.

''எதற்கு வந்தேனு? என்ன பைத்தியக் காரக் கேள்வி இது? முதலில் உன்னை என் நண்பன் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன். அவன் ஓர் உத்தியோகத்தில் இருப்பவன். குடியும் குடித்தனமுமாக இருப்பவன்.''

''ஏன்! உங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்லப் பயமா?'' என்று கேட்டாள் ருக்மிணி சற்றுக் கடுப்புடன்.

''ஆம்'' என்றான் மது.

ருக்மிணியின் முகம் சிவந்தது.

''உன்னை நான் கல்யாணம் செய்துகொள்வது எங்கள் வீட்டில் யாருக்கும் பிடிக்கவில்லை.''

''கல்யாணமா?''

பேய்க்காற்றையும், மழையையும் கிழித்துக்கொண்டு, இடியையும், மின்னலையும் கிண்டல் செய்வதுபோல் உறுமிக்கொண்டு அம்பு வேகத்தில் கார் போய்க் கொண்டிருந்தது.

ருக்மிணி ஓராண்டாகவே கோரிய இந்தச் சௌபாக்கியம் முடவனுக்குக் கொம்புத் தேன் கிடைத்தது போலிருந்தது.

சிறிது நேரம் இருவரும் மௌனமே உருவாயிருந்தனர்.

''ஏன், சம்மதமில்லையா?'' என்று கேட்டான் மது, மின்னலொளியில் ருக்மிணியின் முகத்தைப் பார்த்து.

தான் இப்படி அநாதையானதால்தான் மது இப்படித் தயை காட்டுகிருரே என்று நினைத்தாள் ருக்மிணி. அவள் மனத்தில் ஓர் ஏக்கம் கண்ணுமூச்சி ஆடியது.

''என் உத்தியோகம் ஒன்றே போதும். குடும்ப ஆஸ்தி எதுவுமே எனக்கு வேண்டாம். நீதான் எனது ஆஸ்தி'' என்றான் மது மென்மையான குரலில். ருக்மிணியின் உடலில் ஒவ்வோர் அணுவும் விவரிக்க வொண்ணுத ஆனந்தத்தால் கிறங்கியது. கார் சாலை விளக்கின் கீழ் வந்தது. சட்டென்று காரை நிறுத்தினான் மது.

''ருக்கு! எத்தனைதான் இடையூறுகள் வந்தாலும், எத்தனைதான் கஷ்டங்கள் நேர்ந்தாலும் என்னை நீ கைவிட மாட்டாயல்லவா? என்றென்றும் நான் உன்னைக் காதலித்துக் கொண்டே இருப்பேன்'' என்றான் மது. இதயத்தைக் கிழித்துக் கொண்டு வந்தது அவன் குரல். கண்களில் படர்ந்த ஈரம் விளக்கொளியில் மின்னியது.

அவர்களது எதிர்கால இல்லற வாழ்க்கைக் கோயிலில் விளக்கு சுடர் விட்டுப் பிரகாசித்தது.

அந்த நாட்களில் அவள் கண்ட மது எங்கே? இப்போது அவள் காணும் மது எங்கே? இந்த மது உண்மையில் அவள் கணவன்தானு?

இந்த நினைவுகளுக்கிடையில் உள் அறையில் இருந்து மது முனகுவது கேட்டது. ருக்மிணிக்கு வயிற்றை ஏதோ கலக்கியது. அவர் எவ்வளவு உபாதைப் படுகிறார்? எந்தக் கெட்ட வேளையில் கார் சவாரி போனார்களோ, இந்த விபத்து ஏற்பட்டு விட்டது. அப்பா! கல்யாணமான புதிதில், இல்லறம் நடத்திய அந்த ஆறு மாதங்களில், இருந்ததைக் கொண்டு திருப்தி அடைந்து எவ்வளவு இன்பமாக வாழ்ந்தார்கள்! இப்படிக் கால் முறிந்து, படுக்கையில் விழுந்ததும் அவருக்கு உத்தியோகம் போய் விட்டது. ஆறு மாதங்கள் கழித்துத் திரும்பவும் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றார்கள் டாக்டர்கள்.

தவிர்க்க முடியாமல் ருக்மிணி ஓர் உத்தியோகத்தைத் தேடிக் கொள்ள வேண்டி வந்தது. விற்பனையாளர் வேலையில் அமர்ந்தாள். அதனால்தான் மதுவுக்கு டானிக் முதலியன வாங்கிக் கொடுக்க முடிந்தது. இருந்தாலும் ருக்மிணிக்கு வாழ்க்கையில் நிம்மதி இல்லாமல் போயிற்று.

அன்று ஒரு நாள் சம்பளம் வாங்கியதும் அவருக்காக மருந்துகள், டானிக்குகள், பழங்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு மனத்தில் மகிழ்ச்சி ததும்ப வீட்டுக்கு வந்தாள். அவற்றைப் பார்த்த மாத்திரத்தில் ''இதெல்லாம் எனக்கு வேண்டாம்'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டு, சுவரின் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கண்களை இறுக மூடிக்கொண்டு படுத்துவிட்டான் மது.

மற்றொரு நாளும் இதே போலத்தான். அலைந்து அலுத்துக் கால் கடுத்துப் போய் வீடு திரும்பினுள் ருக்மிணி.

"ஊர் சுற்றி முடிந்ததா? வீட்டு நினைவு வந்ததா? உனக்கு என்ன? கால் போன வழி, கை காட்டிய வழி சுற்றுகிறாய்!" என்றான்.

வீட்டுக்குள் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே ஒருவர் இப்படிக் கேட்டால்? – ருக்மிணிக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

"வெய்யிலில் அலைந்துவிட்டு வருகிறேன். எதற்காக நீங்கள் வேறு இப்படிச் சொற்களால் சுடுகிறீர்கள்?" என்றாள் தன்னைச் சமாளித்துக் கொண்டு.

"ஏன்? சம்பாதிக்கிறோம் என்ற கர்வமா? என்ன, வாய்த்துடுக்கு அதிகமாகி விட்டது? என் தலையெழுத்து பெண்சாதி சம்பாதித்துச் சாப்பிட வேண்டும் என்று ஏற்பட்டுவிட்டது. தலைவிதி! தலைவிதி!!" என்று ஒரு பெருமூச்சு விட்டான் மது.

ருக்மிணிக்கு மூச்சுத் திணறியது. அப்படியே நிலைகுத்தவிட்டவள்போல் நின்றுவிட்டாள்.

"ஏன் நின்று விட்டாய்? சம்பாதிக்க அலைந்து திரிந்து வந்தாயே! நான் வேண்டுமானால் கால் கழுவத் தண்ணீர் கொண்டு வந்து தரட்டுமா? இப்படியெல்லாம் உனக்குப் பணி புரிந்து பெருமையுறலாம் என்றால் எழுந்து நடக்கும் வாய்ப்பைத் தரவில்லையே இந்தப் பாழும் கடவுள். இந்தக் கையாலாகாத பிழைப்பு இன்னும் எத்தனை நாட்களோ, கடவுளே! ஆபரேஷன் எப்போது செய்து என்னை நடமாடச் செய்யப் போகிறார்களோ!" என்று கூறியவண்ணம் முகத்தைத் திருப்பிக்கொண்டான் மது.

இப்படிக் கடந்தன நாட்களெல்லாம்.

இரண்டு நிமிடங்களில் மீண்டும் மதுவின் கோபமான சொற்கள் காதில் விழுந்தன.

"ஏய்! உன்னைத்தான். ஏய்! புருஷன் இன்னும் பிழைத்திருக்கிறான் என்பதை மறந்துவிட்டாயா? எவ்வளவுதான் படுக்கையே கதியாக இருந்தாலும் புருஷன் என்பதை மறக்காதே! அவனுக்கு என்ன வேண்டும், ஏது வேண்டும் என்று கவனிப்பதில்லை. எப்படியிருக்கிறான் என்றும் பார்ப்பதில்லை. கைப்பிடித்த மனைவி ஒருத்தி இப்படி அலட்சியப்படுத்தினால் கட்டிய புருஷனுக்கு எப்படி இருக்கும்?"

"இதோ மருந்து எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறிய ருக்மிணி எழுந்து மருந்துடன் அவன் அருகில் சென்றாள்.

"எனக்கு எதற்கு இந்த மருந்தும், மாயமும்? நீ சுகமாக ஊர் சுற்றித் திரிந்தால் போதாதா? படுத்த படுக்கையாயிருக்கும் கணவன் எப்படிப் போனால் என்ன?" இப்படிக் கேட்ட வண்ணம் கையில் கொடுக்க இருந்த மருந்துப் புட்டியை ஒரு தட்டுத் தட்டிக் கீழே வீழ்த்தினான் மது.

கீழே விழுந்து சிதறிய கண்ணாடித் துகள்களை எடுத்து வெளியே போட்டாள் ருக்மிணி. பதில் ஒன்றும் சொல்லாமல் நிதானமாக நடந்து சென்று வெளியே தட்டி போட்ட கேட்டைப் பிடித்துக் கொண்டு நின்றாள். இன்னும் அக்கம் பக்கத்தில் குழந்தைகளின் ஆரவாரம் கேட்டபடியிருந்தது. 'டப்டப்' என்று பட்டாசுகள் வெடித்துக் கொண்டிருந்தன. அவளுக்குப் பசி என்பதே குன்றிப் போயிற்று. தலை வெடித்துவிடும் போல் இருந்தது. ஆய்ந்த பஞ்சு போன்ற சிறு சிறு மேகங்கள் ஆகாயத்தில் மிதந்து கொண்டிருந்தன. வெளியே சிறிது குளிராக இருந்தது. அது அவளது தலைவலியைச் சற்றுத் தணிப்பது போல் தோன்றியது.

கடந்த ஆறு மாத காலமாகவே மதுவின் முகத்தைப் பிடித்திருந்தன, கடுகடுப்பும், சிடுசிடுப்பும். அவை மறையுமா? இனி இந்த ஜன்மத்தில் புன்சிரிப்பும், சாந்தமும் முன்போல் அவர் மனத்தில் நிலவுமா? எப்போதாவது பழைய அன்போடு "ருக்கு" என்று அழைப்பாரா? தீபாவளித் திருநாளன்றுதான் நரகாசுரன் என்ற தீயவன் ஒழிந்தான். தீமைகள் ஒழிந்து நன்மைகள் நாடி வரும் நன்னாள், இந்தத் தீபாவளித் திருநாள்தான் என்று அடிக்கடி கூறுவார் அவள் பாட்டனார்.

எதிரே தூரத்திலிருந்த உயர்ந்த மாடியில் ஜகஜ்ஜோதியாய் விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. மாடியிலிருந்து மெல்லிசை ஒலித்தது. அலுத்து வந்த ருக்மிணிக்குத் தூக்கம் வரும்போல் இருந்தது.

மறுபடியும் அந்தப் பெண்ணின் நினைவு வந்தது. அவளை மறந்துவிட வேண்டும் என்றுதான் எண்ணினாள். தினம் காலையில் எழுந்து வேலைக்கு என்று புறப்பட்டுவிட்டால் எத்தனையோ பெண்களைப் பார்க்கிறாள் அவள். ஆயினும் அந்த ஒரு பெண் மட்டும் அடிக்கடி அவள் நினைவில் தோன்றுவானேன்?

இசை இனிமையாகக் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. எதிர் மாடியில் யார் பாடுவது? யாருடையது அந்த மாடி? நினைவுக்கு வந்தது. அது டாக்டர் சுந்தரத்தினுடையது. ஆமாம். அவர் இன்று விருந்து வைக்கிறார், தமது நண்பருக்கு – எலும்புச் சிகிச்சை நிபுணருக்கு.

மாலை தமது காரில் அவளை அழைத்து வந்து அவள் வீட்டில் விட்டபொழுது அவர் விருந்து பற்றி அவளிடம் சொன்னார். அவரோடு இப்படிக் காரில் வருவதைச் சுட்டிக் காட்டித்தானே அடிக்கடி அவள் அவருடைய காரிலேயே ஊர் சுற்றுவதாகக் கோபித்துக் கொண்டார் மது. அதற்காகவே எத்தனையோ நாட்கள் வேலை முடிந்ததும் சுந்தரத்தின் கண்ணில் படாமல் வீடு திரும்பி வந்திருக்கிறாள் அவள். ஆனால் இன்று அவளால் தவிர்க்க முடியவில்லை. ஆம், எதற்காகத் தவிர்க்க வேண்டும்? அவள் என்ன தவறான காரியம் செய்தாள், சுந்தரத்திடமிருந்து ஒதுங்கி ஓடுவதற்கு? இவ்வளவுக்கும் மதுவின் பால்ய நண்பர் சுந்தரம். அவளுடைய பாட்டனாருக்கும் நன்றாய்த் தெரிந்தவர். அவளுக்கும் அவரைத் தெரியும். ஆனால் இப்பொழுதெல்லாம் மதுவுக்குச் சுந்தரத்தின் பெயரை எடுத்தாலே பிடிக்கவில்லை. அப்படிப் பிடிக்காததற்குக் காரணமும் அவளுக்கு விளங்கவில்லை. இவ்வளவுக்கும் சுந்தரத்தைச் சில தினங்களுக்கு முன்புதான் சந்தித்தாள் அவள்.

ஒருநாள் அவள் கால் நடையாகப் பதைபதைக்கிற வெய்யிலில் வீடு திரும்பும்போது பின்புறத்திலிருந்து மெதுவாக ஒரு பெரிய கார் வந்து பக்கத்தில் நின்றது. அதிலிருந்து

''ருக்கு, ருக்கு'' என்று மகிழ்ச்சி கொப் புளிக்கக் கூறிக் கொண்டே இறங்கினார் டாக்டர் சுந்தரம்.

''ருக்கு! ஏன் இப்படித் தனியாகப் போகி றாய்? மது எங்கே? இவ்வளவு வெய்யிலில் எங்கிருந்து வருகிறாய்? ஏன் இப்படி இளைத்து விட்டாய்?'' என்று மூச்சு விடாமல் கேள்வி கேட்டார் அவர்.

அவரை அவ்வளவு சுதந்திரமாகக் கூப்பிடு வது ஆண்களிலே அவளது பாட்டனாரைத் தவிர, மதுவும் சுந்தரமும்தான்.

ருக்மிணிக்கு எல்லை மீறிய சந்தோஷம் ஏற்பட்டது. ''நீ எப்போது வந்தாய்?'' என்று திரும்பக் கேட்டாள்.

''என்னை இந்த ஊரில் 'போஸ்ட்' பண்ணி யிருக்கிறார்கள். உங்களைத் தேடினேன், விலா சம் கிடைக்கவில்லை.''

''நான் உத்தியோகம் செய்கிறேன், அவ ருக்கு உடல் சரியாக இல்லை, சுந்தர்'' என்றாள் அவள்.

''ஏன்? என்ன உத்தியோகம்? நீ காரில் உட்கார் முதலில். வா, அவனை நான் பார்க்க வேண்டும்'' என்றபடி காரின் கதவைத் திறந்து ஒதுங்கி நின்று, ''ஊம்.. ஏறு, என்ன பார்க்கிறாய்? அவனுக்கு என்ன உடம்புக்கு?'' என்று மறுபடியும் கேட்டான் சுந்தரம்.

சங்கோசப்பட்டுக் கொண்டே காரில் ஏறி னாள் ருக்மிணி.

காரில், கீழே ஒருபுறமாக இரும்புக் கம்பி களால் பின்னிய மரக் கூண்டிலே வெண் ணெய்க் கட்டியைப் போல் வெண் புறா ஜோடி ஒன்று அங்கும் இங்கும் திரிந்தபடி இருந்தது.

''எவ்வளவு அழகாக இருக்கின்றன இந்தப் புறாக்கள்!'' என்றாள் ருக்மிணி, அவற்றைப் பார்த்து.

''இவை ஒருவித ஜாதிப் புறாக்கள். இவற் றால் பறக்க முடியாது. எனக்கு மிகவும் பிடித்தவை. ஒரு மாணவன் எனக்குப் பரி சாக அளித்தான். நான் உனக்குப் பரிசாகத் தருகிறேன். பெற்றுக் கொள்.''

''ஊஹூம். எனக்கு எதற்கு சுந்தர்? நீயே வைத்துக் கொள்.''

''நான் ஒரு பிரம்மசாரி. இவற்றை வளர்ப்பது கஷ்டம். குடும்பஸ்தர்கள் நீங்கள்தான் வளர்க்க வேண்டும். ஆமாம், உங்கள் விலாசம் என்ன?''

''ஆபரேஷன் ஆன பிறகு ஏதாவது வேலை தேடிக் கொள்வேன். அப்புறம் பெரிய வீடாகப் பார்த்துக் கொள்ளலாம் என்கிறார். அதனால் இந்தச் சின்ன வீட்டிலேதான் இப்போதைக்கு நாங்கள் இருக்கிறோம்'' என்று கூறியவாறே ருக்மிணி காரை விட்டு இறங்கினாள்.

''அடே, சுந்தர்! இதென்ன? எப்போது வந்தாயடா?'' என்றான் மது மிகுந்த ஆச்சரி யத்தோடு.

''மிகவும் துரதிர்ஷ்டசாலி. எல்லாவற்றை யும் ருக்கு எனக்குக் காரிலேயே சொன்னாள். ஒன்றும் பயமில்லையடா'' என்று கூறிய வண்ணம் கைகளில் அணைத்திருந்த புறாக் கூண்டைக் கீழே வைத்தான் சுந்தரம்.

''நான் நடந்து வந்து கொண்டிருந்த போது என்னை வழியில் பார்த்து, அழைத்து வந்தான். உங்களைப் பார்த்தே தீரவேண்டும் என்று வீடு வரைக்கும் வந்து விட்டான். நாற்காலியில் உட்கார், சுந்தர்! ரூட் நறுங்கி விடும்'' என்றாள் ருக்மிணி, மதுவின் பக்கத் தில் கட்டிலின் மேல் போய் உட்காரவிருந்த சுந்தரத்தைப் பார்த்து.

சுந்தரம் நாற்காலியில் கால் மீது கால் போட்டு அமர்ந்து மதுவைப் பார்த்து, ''ஆளே மாறிவிட்டாயேடா'' என்றான்.

குழந்தைகள் மார்கழி மாதத்தில் என்ன செய்ய வேண்டும்?

அருமைக் குழந்தைகளே!

1. மார்கழி மாதம் பிறக்குமுன் திருப் பாவை, திருவெம்பாவை பாசுரங்களை மனப் பாடம் செய்யுங்கள். மார்கழி முப்பது நாட் களும் காலையில் நீராடி ஆண்டவனை நினைத்துப் பாடல்களைச் சொல்லிக் கொண்டு ஊர்வலம் வாருங்கள்.

2. திருவெம்பாவை இருபது பாடல் களையோ திருப்பாவை முப்பது பாடல் களையோ தெளிவாகவும் அழகாகவும் பாடப் பழகிக் கொள்ளுங்கள்.

3. குழந்தைகளே! இப்பொழுதே மனப் பாடம் செய்ய ஆரம்பித்தால்தான் மார்கழி மாதம் ஆரம்பத்துக்குள் 'நெட்டுரு' ஆகும்.

4. மார்கழிக்குள் மனப்பாடம் செய்யுங்கள்; மார்கழி நீராடுங்கள்; ஊர்வலம் வாருங்கள்; தூங்கும் குழந்தைகளையும், பெரியவர்களையும் பாட்டுப் பாடி எழுப்புங்கள்; ஆயுள் பூர்ண மாக ஆனந்தமாக வாழுங்கள்.

— ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

★



★

''ஆமாண்டா, உன்னைப் போலவே நானும் இங்கிலாந்துக்கு மேல் படிப்புக்குச் சென்று வந்திருந்தால் உன்னைக் காட்டிலும் சுத்த மாகவும், மிடுக்காகவும் உடை உடுத்துவேன். ஆனாலும் உன்னைப் போன்ற அழகும் உட லமைப்பும் எனக்கு எங்கிருந்து வரும்?'' என்றான் மது, தனக்கு வந்த எரிச்சலைக் காட்டிக் கொள்ளாமல்.

''அதென்னடா! படுக்கையில் விழுந்து தாடி வளர்ந்து இளைத்துப் போயிருப்பதால் இப்படி இருக்கிறாய். நான் டென்னிஸ் அது இது என்று பல விளையாட்டுகள் ஆடுவதால் உடற்கட்டு குன்றாமல் இருக்கிறேன்'' என்ற சுந்தரம், ''ருக்கு, மது ஒரு சமயம் எவ்வளவு அழகாக இருப்பான், தெரியுமா?'' என்று புன்சிரிப்புடன் கபடம் ஏதும் இல்லாமல் கேட்டான்.

''படுத்த படுக்கையாகக் கிடக்கிறார் அல்லவா, சுந்தர்? அதனால் ஆளே மாறிய மாதிரி இருக்கிறார்'' என்றாள் ருக்மிணி. அப் போதுதான் புறுக்களை உள் வராந்தாவில் வைத்து விட்டுத் திரும்பி வந்து கொண் டிருந்தாள் அவள்.

''நான் திரும்பி எழுந்தால் பார்த்துக் கொள்ளலாம்'' என்றான் மது ஒரு பெரு மூச்சு விட்டு.

''அதென்னடா பேச்சு! நீ ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டும். அப்போது நான் பக்கத்தில் இருப்பேன். இது பற்றி ருக்குவும் நானும் காரிலேயே யோசித்துக்கொண்டு வந்தோம். எலும்பு நிபுணர் சொற்பொழி வுக்காக வெளியூர் சென்றிருக்கிறார். இந்தத் தீபாவளிப் பண்டிகைக்கு வீடு திரும்புவார். இரண்டு மூன்று தினங்களே இருப்பார். மறுபடியும் அவருக்குச் சுற்றுப் பயணம் இருக்கிறது. நான் அவரை அழைத்து வந்து காட்டுகிறேன். சுகமாக எப்போதும்போல் ஜம்மென்று ஆகிவிடுவாயடா'' என்றான் சுந்தரம்.

மது பேசவில்லை. ''நான் இதோ போய்க் காப்பி போட்டுக் கொண்டு வருகிறேன் ஒரு நொடியில். அதுவரை பேசிக்கொண் டிரு, சுந்தர்'' என்றாள் ருக்மிணி.

''எனக்குச் சமையற்காரன் இருக்கிறான். உனக்கு ஏன் வீண் சிரமம் ருக்கு? நான் வாங்கியுள்ள வீடு இங்கிருந்தே தெரியுமே. அதோ பார்'' என்று தன் மாடி வீட்டைச் சுட்டிக் காட்டினான் சுந்தரம்.

''ரொம்பப் பக்கத்தில்தான் இருக்கிறது. சமையற்காரர் இருந்தாலும் நான் போட்டுத் தந்து நீ சாப்பிடக் கூடாதா? நீ காப்பி சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் — உங்களுக்கும் கஞ்சி காய்ச்சித் தரட்டுமா?'' என்று கேட்ட வண்ணம் சமையலறைக்குச் சென்றாள் ருக்மிணி.

''ருக்கு, எதற்கு இந்த உபசாரங்கள்? நீ முதலில் அவனுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுப்பதைப் பார். நானே டிகாக்ஷனைக் கலந்து கொள்கிறேன்'' என்றபடி சுந்தரம் ருக்மிணியின் பின்னால் சென்றான்.

கஞ்சியை ஒரு கையிலும், காப்பியை மற்றொரு கையிலுமாக எடுத்துக்கொண்டு சுந்தரம் வெளியே வந்தபோது மது தலைக்கு உயரமாகக் கைகளை வைத்து மல்லாந்து படுத்திருந்தவன் கீழ் உதட்டை ஒரு பக்கத் துப் பற்களால் கடித்தபடி கூரையைப் பார்த்த வண்ணம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

''இந்தாடா கஞ்சி! இந்தத் தரம் நான் என் கையால் கஞ்சி தருகிறேனடா'' என்று கூறிச் சுந்தரம் கஞ்சியை நாற்காலியின்மீது வைத்தான்.

''ரொம்ப சந்தோஷம். காலில்லாதவ னுக்குக் கஞ்சியாவது கொண்டு வந்தாயே!'' என்றான் மது கபட்டுச் சிரிப்புடன்.

''நேரமாகிறது. நான் போய் வருகிறேன். ஆஸ்பத்திரிக்கு வேறு போக வேண்டும்'' என்று கூறி எழுந்தான் சுந்தரம்.

''உத்தியோகஸ்தர்கள்! அலைந்து கஷ்டப் பட்டுச் சம்பாதிக்க வேண்டுமல்லவா? வீட்டி லேயே இருக்க முடியுமா?'' என்றான் மது நமட்டுச் சிரிப்புடன்.

''சரிடா. அந்த ஸ்பெஷலிஸ்டைக் கூட அழைத்து வருகிறேன். ருக்கு பை...பை... ஆபரேஷனுக்கு ஏற்பாடு செய்கிறேன்.''

கார் சப்தம் சற்றுத் தொலைவில் மங்கிய தும், ''இப்போது பசிக்கிறதா? கஞ்சி சாப் பிடுகிறீர்களா?'' என்று கட்டிலின் மீது மது வின் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டே கேட்டாள், ருக்மிணி.

''சட்! போ; அந்தப் பக்கம்'' என்று கத்தி னான் மது.

அன்றிலிருந்து காரணமில்லாமல் ஏதாவது ஒரு சாக்கில் சுந்தரத்தைத் திட்டிக்கொண்டே இருந்தான் மது.

அதற்கு மறுநாள் சுந்தரம் வரும்போது மது தூங்கிக் கொண்டிருப்பது போல் பாசாங்கு செய்தான். மற்றொரு நாள் கார் சப்தம் கேட்டதும் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டான்.

இவ்வளவு நாட்களுக்கப்புறம் அன்றுதான் சுந்தரத்தின் காரில் மறுபடியும் அவள் வந்தாள்.

மறுநாள் நிபுணரை அழைத்து வருவதாகச் சொன்னான் சுந்தரம். ஆபரேஷன் ஆனால் அவர் குணமடைவார்.

எதிரே மாடியில் சுந்தரம் சித்தார் வாசிப் பது கேட்டது.

ருக்மிணி எழுந்து சமையலறைக்குச் சென்று கஞ்சியைச் சூடு பண்ணிக் கொண்டு வந்தாள். கட்டில் பக்கத்திலிருந்த நாற்காலி மீது வைத்து ஆற்றியபடி, ''என்னங்க, நாளைக்கு அந்த நிபுணரை அழைத்து வருவ தாகச் சொன்னான் சுந்தர்'' என்று மெதுவாக ஆரம்பித்தாள்.

சட்டென்று முழங்கை மீது தலையை ஊன் றியபடி சீறிவிழுந்தான் மது. ''மூடு வாயை. உன் பாட்டன் வர வேண்டும் எனக்கு ஆப ரேஷன் செய்து வைக்க. அவனும் நீயும் சேர்ந்து ஜாலியாகக் காரில் சுற்றிக்கொண்டு எனக்கு ஆபரேஷன் செய்யத் தீர்மானித் தீர்களோ? என் உயிர் உள்ளவரை இந்த ஆபரேஷனுக்கு நான் சம்மதிக்க மாட் டேன். இப்படியே கட்டிலிலேயே கிடந்து செத்தாலும் சாவேன். 'ருக்கு, பை...பை...



''என்னண்ணே! மணி நாலு ஆயிட்டுது. 'வாக்' போக வரல்லியா?''

''உடம்பு என்னமோ மாதிரி இருக்குது. வெளியே வரவே புடிக்கல்லே!''

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

ருக்கு. உனக்குச்சிரமம் எதற்கு? ருக்கு! ருக்கு!' அவளுக்கு என்ன அவ்வளவு சுதந்திரம்? இனி அவனே உன்னை ருக்கு என்று கூப்பிடட்டும். அவன் ஆசையோடு அப்படிக் கூப்பிட ஆரம்பித்ததிலிருந்து நான் உன்னை அந்தப் பெயரிட்டு அழைப்பதில்லை, தெரியுமா? செத்தாலும் நான் ஆபரேஷன் மட்டும் செய்து கொள்ள மாட்டேன். அப்படிச் சாகவில்லையென்றால் அவனையே கேட்டுக் கொஞ்சம் விஷத்தை வாங்கிக் கொடு. அப்புறம் என் தொல்லை உங்களுக்கு இருக்காது. நீயும் அவனும் சந்தோஷமாகக் காரில் சுற்றலாம்.... கடவுளே, ஏன்தான் இந்தக் கல்யாணத்தை செய்துகொண்டேனோ?''

மது தனக்கு வந்த ஆத்திரத்தில் ருக்மிணி கையிலே கொடுத்த வெது வெதுப்பான கஞ்சியோடு டம்ளரை அவள் முகத்திலேயே விட்டு எறிந்தான்.

ருக்மிணியின் கண்களில் இருள் படர்ந்தது. தன்மானம் குன்றி முகம் சிவந்தது. பீறிக் கொண்டு வரும் கண்ணீரைத் தடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள். பிறகு கீழே சிந்திய கஞ்சியையும் துடைத்துச் சுத்தம் செய்துவிட்டு உள்ளே சென்றாள். மதி இழந்தவள் போல் சமையலறைக்குச் சென்று கீழே விழுந்தாள். சுற்றுப்புறத்தில் நிலவிய ஆரவாரம் எதையும் அவள் உணரவில்லை.

தனது கோபத்தை அவள்மீது கக்கிய பிறகு சக்தியற்றவனாய்ச் சோர்வடைந்தான் மது. தலையணையின் மீது தலையைப்போட்டுப் படுத்தான். கோபம் இன்னும் முழுதும் தணியவில்லை.

''சே, சே, எதற்கு இந்தப் பிழைப்பு நமக்கு?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான், எதிரில் ருக்மிணி இல்லாத போதும்கூட. ''என்னைப் போன்றவன் பிழைத்தாலும் ஒன்றுதான், போனாலும் ஒன்றுதான். நான் சாவதே மேல். அன்று கால் முறிந்த போதே இறந்து போயிருந்தால் எனக்கு இந்த மன வேதனையே இருக்காதல்லவா? அப்போதே இறந்துவிட வேண்டுமென்றுதான் தோன்றியது. அதை எப்படியோ தவிர்த்து இந்த மகராசி புண்ணியத்தைக் கட்டிக் கொண்டாள். எதற்காக? இந்தக் காட்சியை நான் கண்டு வெதும்ப வேண்டுமென்று? பெரிய உத்தியோகம் பார்த்துக் கிழிக்கிறான் அல்லவா? என்னையே எதிர்த்துப் பேசவும் ஆரம்பித்து விட்டாள்! எப்படித் தெரிந்து கொண்டாளோ, என் கையிலிருந்து தூக்க மாத்திரைப் புட்டியை எனக்குத் தெரியாமல் ஒளித்து விட்டாள். அதுமட்டுமா? பக்கத்திலே என் கட்டிலின் மீதே உட்கார்ந்து கொண்டு சிரிப்பும், கேலியுமாகப் பேசவும் தொடங்கி விட்டாள். 'காரை ரிப்பேர் செய்துகொள்வோம். அடுத்த வருடம் வீடு கட்டிக்கொள்வோம்' என்ற இவளது அர்த்த மற்ற பேச்சையும் சிரிப்பையும் இப்போது நினைத்தால்கூட ஆத்திரம் பற்றிக்கொண்டு வருகிறது. ஏதடா, கணவனுக்குக் கால் முறிந்து விட்டதே என்று துளியாவது வருந்தினாளா? அன்று இரவு முழுவதும் செங்குத்தாகப் பொம்மை போல் அல்லவா உட்கார்ந்து என்னைக் காவல் புரியத் தொடங்கிவிட்டாள்! அப்புறம் நான் எங்கே போய்ச் சாவது?''

மதுவுக்கு உடலெல்லாம் தாங்க முடியாத வலி. 'அப்பா!' என்று முனகிக்கொண்டே ஒருக்களித்துப் படுத்தான். அசையாமல் படுத்திருப்பது என்றால் எவ்வளவு கஷ்டம்! ஒரே நிலையில் அசைவற்றுக் கிடப்பதென்றால் பெரிய சாண்டோவுக்குமே கஷ்டம்தான்!! ஒவ்வொரு நாளும் அவன் சாப்பிட்டானோ சாப்பிடவில்லையோ, கடவுளுக்குத்தான் தெரியும். தலை குனிந்து பேசாமல் அவனருகில் வந்து அமர்ந்து முதுகை வருடித் தூங்கப் பண்ணுவாள் ருக்மிணி. அவளுக்குள்ள உடம்பு வலி அவனுக்குத் தெரியும்போதும்! ஏன் தெரியாது? விபத்து ஏற்பட்ட அன்று இரவு துளியும் நகராமல் அவன் அருகிலேயே உட்கார்ந்து கிடந்தாளே, அப்பொழுது அவளுக்கும் உடம்பு வலி எடுத்துத்தானே இருக்கும்? ''அப்பாடா! முதுகெல்லாம் எப்படிக் குடைகிறது? ஏன் அவள் இன்னும் வரவில்லை தூங்கப் பண்ண? செத்தாலும் அவளைக் கூப்பிடுவதா? அவளாகவே வரட்டும்.'' இந்த ஆலோசனைகளில் சோர்வடைந்து கொட்டாவி விட்டான் மது.

அப்படியே எத்தனை நேரம் இருந்தானோ, ருக்மிணிக்கே தெரியாது. தான் இனி உயிர் வாழ்வதில் அர்த்தமில்லை. தன்னால் அவளுக்கு ஏன் அவ்வளவு கஷ்டம்?

எழுந்து மதுவின் தாய் தந்தையருக்கு மதுவை அவர்களிடம் ஒப்படைப்பதாக ஒரு கடிதம் எழுதினாள். ஏதோ தூக்கத்தில் நடப்பவள் போல் நடந்து வெளியே வந்தாள்.

திரும்பவும் கேட்டின் பக்கம் நின்றாள். காற்று இன்னும் அதிகமாகக் குளிர்ந்து வீசியது, அவள் முகத்திலே. பக்கத்து வீடு

கவில் கங்கா ஸ்நானத்தை ஆரம்பித்து விட்டார்கள். தானும் நிச்சயித்துக் கொண்டாள். கங்கா ஸ்நானம்தான்! அதுவே கடைசி ஸ்நானம்! மறுபடியும் அதே சமுத்திரத்துக்கே போக வேண்டும்.

'தொப்' என்று பின் கட்டில் ஏதோ ஒரு சத்தம் கேட்டது. உள்ளே சென்று என்னவென்று பார்த்தாள். சுந்தரம் கொடுத்த இரண்டாவது புறாவும் இறந்து கீழே விழுந்து கிடந்தது.

முன்பு அதற்கு ஆகாரம் வைக்கக் கூண்டின் கதவைத் திறந்தவள் கூண்டை மூட மறந்துவிட்டது நினைவுக்கு வந்தது. முதல் புறா இறந்து விட்டதிலிருந்து இரண்டாவது புறா தினி, தண்ணீர் எதையுமே சாப்பிட மறுத்தது. ஜோடிப் புறாவில் ஒன்று போனால் மற்றது பிழைக்காது என்பார்கள். ஒருவேளை உண்மைதானோ, என்னவோ! வாயில்லாப் பிராணிகளுக்குத்தான் எவ்வளவு பிரேமை! எவ்வளவு ஒற்றுமை!

அறைக்குள் ருக்மிணி வந்து குனிந்து மதுவைப் பார்த்தாள். அவன் உறங்கிக்கொண்டிருந்தான். அவன் முகத்தில் விவரிக்க இயலாத ஒரு சாந்தி நிலவியது. கடந்த ஆறு மாதங்கள் புயல் வாழ்க்கையில் இது போன்ற மந்தகாசத்தை அவள் காணவே இல்லை. தூக்கத்தில் மது ஏதேதோ பிதற்றிக்கொண்டிருந்தான். இத்தனை நாட்களில் இன்றுதான் இதுபோன்ற நிலையான குரலைக் கேட்டாள்: ''ருக்கு! ருக்கு!'' — அப்பா! எவ்வளவு அன்போடு அழைக்கிறார் அவர்!

''ருக்கு! எத்தனைதான் இடையூறுகள் வந்தாலும், எத்தனைதான் கஷ்டங்கள் நேர்ந்தாலும் நீ என்னைக் கைவிட மாட்டாயல்லவா? என்றென்றும் நான் உன்னைக் காதலித்துக்கொண்டே இருப்பேன்.''


ருக்மிணியின் மனம் பொங்கி எழுந்தது. கோபமும் துக்கமும் கரைந்து போயின. கையிலே இருந்த கடிதத்தைக் கீழே போட்டுவிட்டு மதுவின் நெற்றிமேல் கை வைத்து, வருடி, ''மது! மது! நான் போக மாட்டேன்.! நான் சாக மாட்டேன்! நான் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன்! உங்களுக்குச் சிகிச்சை செய்விப்பேன்!'' என்றாள், பெற்ற தாய் குழந்தையைச் சமாதானம் செய்வது போன்ற பாசத்தோடு. அவளுக்குத் தெரியாமலே அவளது காதல் அவளது குரலில் ஒலித்தது.

மது ஆனந்தத்தோடு கண் விழித்தான். தனது மனைவியின் கரங்களைப் பற்றிக் கொண்டான்.

''ஆபரேஷன் செய்துகொள்ளுகிறேன், ருக்கு! நீ எத்தனை நாட்கள் இப்படிக் கஷ்டப்படுவாய்! என்னையும் மீறிச் சில சமயம் உணர்ச்சி வசப்பட்டு உன்னைக் கொடுமைப் படுத்தினேன். என்னை மன்னித்துவிடு, ருக்கு'' என்றான் மது மிகுந்த அன்போடு பழைய மாதிரி.

வெளியே விடிவானம் வெளுத்து வந்தது. சிறு சிறு மழைத் துளிகள் தீபாவளியின் அறிகுறியாக ஜன்னலிலிருந்து அவர்கள் மீது தெளித்தன. தெருவெங்கும் பட்டாசுகள் வெடிக்கும் சப்தம் அதிகரித்தது.

பொழுது விடிந்து கொண்டிருந்தது. ''இன்று பண்டிகை. சுந்தரத்தை இங்கேயே சாப்பிடச் சொல்லுவோமே'' என்றான் மது.


மதிப்புள்ள
உங்கள்
டீசல் இன்ஜெக்ஷன்
சாதனங்களை
பாதுகாக்க
உண்மையான
"மைகோ" பில்டர்
இன்ஸ்டர்ட்டுகளை
உபயோகிக்கவும்
MICO
MICO
MICO
LICENCE BOSCH
மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிமிடெட். பெங்களூர்

அத்தியாயம் மூன்று

குருவும் சீடனும்

மிருணாளினி தனக்கிருந்த செல்வத்தின் பெரும் பகுதியைத் தான் எந்தக் கட்சியின் கொள்கைகளை விரும்பி ஏற்றாளோ அதற்கு எழுதி வைத்து விட்டு மீதியைச் சமூக சேவை புரியவும் பொதுவுடைமைப்பிரசாரம் செய்யவும் ஊர் ஊராகச் செல்வதற்குப் பயன்படுத்தி வருகிறாள் என்பது தங்கப்பனுக்குத் தெரிந்திருந்தது. பெருமதிப்புடைய சொத்தைக் கட்சிக்கு என்று எழுதி வைத்து விட்டதாலோ கூடவே கட்சிக் கொள்கைகளையும் ஒப்புக்கொண்டு விட்டதாலோ மட்டும் தனக்கு அங்கே செல்வாக்கு மிகுந்து விடாது என்றும் அதன் மையத்திலிருந்து கொண்டு அனைத்தையும் நிர்வகித்துவரும் முக்கியஸ்தர்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் பெற வேண்டுமானால் தான் உழைத்தாக வேண்டும் என்றும் தன் அறிவுத் திறனைக் காட்டுவதுடன் விசுவாசத்தையும் நிரூபித்தாக வேண்டுமென்றும் மிருணாளினியே அவனிடம் கூறியிருந்தான். முக்கியஸ்தர்கள் என்று மிருணாளினி குறிப்பிட்ட போது அவள் பிரபலஸ்தர்கள் என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை என்பதையும் அவள் வாயிலாகவே அவன் அறிந்திருந்தான். கிராமம் கிராமமாகப் போய் அவள் முதியோர் பள்ளி, வாசகசாலை, சுகாதார போதனை, விவசாய அறிவு வளர்ச்சி என்றெல்லாம் பலவாறாகவும் பாடுபடுவதன் நோக்கமும் அவனுக்குப் புரிந்தது. இவளைப் போலவே இதே காரியங்களில் ஈடுபட்டுள்ள வேறு எத்தனையோ பேர்கள் இருக்கலாம். ஆனால் அவர்களில் யாரும் மிருணாளினியைப் போல் கட்சியின் மையப் பெரும் புள்ளிகளின் மதிப்பில் அத்தனை விரைவாக உயர முடியாது என்பது நிச்சயம். அறிவுக்கும் திறமைக்கும் உழைப்புக்கும் விசுவாசத்துக்கும் மதிப்புக் கொடுக்கும் — இல்லை, இவற்றுக்கு மட்டுமே மதிப்புக் கொடுக்கும் இந்த நடைமுறைப் பழக்கம் தங்கப்பனுக்குப் பிடித்திருந்தது. இது வரையில் பொதுவுடைமையைத் தீவிரமாக எதிர்த்து வந்த தன்னை - ஒரு தொழிலகத்தின் முதலாளியை — அடியோடு மனம் மாறச் செய்தால் அது கட்சி முக்கியஸ்தர்களுடைய நோக்கில் அவளுடைய மதிப்பு உயர மேலும் துணை புரிவதாகத்தானிருக்கும். இப்படி ஓர் உள்நோக்கம் அவளுக்கு இருக்கலாம். உண்மையைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடன் இருந்தான் தங்கப்பன்.



காலச் சக்கரம்

கி. ராஜேந்திரன்

தான் தூக்கி வந்த புத்தகங்களின் பளு வைத் தாங்க முடியாமல் சற்று முன்னால்தான் அவன் அவற்றைக் கைநழுவ விட்டிருந்தான். கீழே, தரையில் குவியலாகக் கிடந்த அந்தக் கைக்குப் பழகிய பழைய புத்தகங்களைச் சுட் டிக்காட்டி வினவினான் தங்கப்பன்: "இதெல் லாம் என்ன? இந்தப் பரந்த உலகத்திலே உங்களுக்கென்று இருக்கிற பொருள்கள் சிறி தும் பெரிதுமான இரண்டு பெட்டிங்கதானே? மந்திரத்தில் மாங்காய் வரவழைக்கிறது போல அவற்றிலே இருந்தா இத்தனை புத்த கங்களையும் வெளியே எடுத்தீங்க?"

"பொதுவுடைமைத் தத்துவத்தை உங்க ளுடைய கடினமான மண்டையிலே ஏற்ற எனக்குத் திறமை போதவில்லை" என்றாள் மிருணாளினி. "அதனால் மார்க்ஸையும் லெனினையும் துணைக்கு அழைத்திருக்கிறேன்."

"தலைகாணிப் புத்தகங்கள்!" என்றான் தங் கப்பன்.

"அதோடு நீங்களே சற்று முன் கூறியது போல மந்திரம் போட்டு என்னால் தருவிக்கப் பட்டவை என்பதையும் மறக்காதீர்கள். இவற்றைப் படிக்கவே வேண்டாம்! இவற்றின் மேல் தலை வைத்துப் படுத்தாலே போதும். காலையில் விழித்தெழும்போது உங்கள் மூளையே கனக்கும்! சிந்தனை முழுதும் பொது வுடைமையின் சிறப்பு பற்றியே இருக்கும்!" என்றாள் மிருணாளினி.

"நான் பொதுவுடைமை வாதியாக மாற வேண்டும் என்பதில் உங்களுக்கென்ன அவ் வளவு அக்கறை? எதற்காக நீங்க இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்கிறீங்க? எனக்கு உண்மை தெரியணும்."

தரையில் கிடந்த ஒரு புத்தகத்தை அவ னுக்குக் காட்டுவதற்காகக் குனிந்து எடுக்கப் போன மிருணாளினி அதனை மீண்டும் நழுவ விட்டாள். இடது புருவத்தை மட்டும் உயர்த்தி அவனை ஒரு மாதிரியாகப் பார்த் தாள். பிறகு ஒரு பெருமூச்சுடன் அங்கிருந்த கட்டிலில் அமர்ந்தவாறே, "நான் என்ன பதில் சொல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?" என்று புறங்கையில் முக வாயைப் பதித்துச் சிந்தனையுடன் கேட்டாள்.

அவள் காலடியில் அவன் சம்மணம் போட்டு உட்கார்ந்தான். "நான் விரும்பு வதை நீங்க சொல்ல வேண்டாம். உங்க மனசிலிருப்பதைச் சொல்லுங்க!" என்றான்.

"நீங்கள் ரொம்பவும் நல்லவர். உங்களை எனக்குப் பிடித்திருக்கிறது..." என்று கூறி ஏதோ யோசனையுடன் நிறுத்தினாள் அவள்.

தங்கப்பனின் நெஞ்சு திக்திக்கென்று அடித் துக்கொள்ள வாரம்பித்தது. "அப்புறம்?" என்றான் அவன் ஆவலுடன்.

"சமீபத்திய நிகழ்ச்சிகள் உங்களுக்குக் கொடுத்த துன்பங்கள், அதிர்ச்சிகள் இவை காரணமாக நீங்கள் மனமுடைந்து போய் ஒன்றுக்குமே லாயக்கில்லாதவராகி விருப் பீர்கள். உங்கள் வாழ்க்கை பயனற்றதாகிச் சீர்குலைந்து போகும்படி விட என் மனம் இடம் தரவில்லை. நீங்கள் இதுவரை சென்ற பாதையில் முன்னேற்றம் காண முடியவில்லை என்பதனால் மனம் தளர்ந்துவிட வேண்டாம் என்று எடுத்துச் சொல்லி முன்னேற்றத்துக் கான மற்றொரு பாதை இருப்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்."

"அவ்வளவுதானா?" என்றான் தங்கப்பன் ஓரளவு ஏமாற்றம் தொனிக்கும் குரலில்.


"அவ்வளவுதான்! நீங்கள் வேறென்ன வென்று நினைத்தீர்கள்?"

அவள் தன்னைக் காதலிக்கிறாளோ என் பதாக உள்ளூறத் தான் கொண்டிருந்த சந் தேகத்தை மறைத்துக் கொண்டான் தங் கப்பன். "நான் ஒரு தொழிலகத்தின் முதலாளி. வெளிப் பார்வைக்குத் தொழிலதிப ராக வேஷம் போட்டு இதயத்தினுள் பொது வுடைமைச் சித்தாந்தத்தை வணங்குபவனாக இருந்தால் நல்லது. இவனைக் கொண்டு பல காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம் என்று நீங்கள் கணக்குப் போட்டிருக்கலாம்."

"அச்சா! அச்சா!" என்றாள் மிருணாளினி, தன்னையும் மீறி வியந்தவளாக. "நீங்கள் இங்கே கட்டிலில் உட்காருங்கள். நான் கீழே கைகட்டி வாய் பொத்தி அமர்ந்து உங்க ளிடம் பாடம் கேட்கிறேன்" என்றாள்.

தங்கப்பன் சிரித்துக் கொண்டே, "குரு வுக்கு மிஞ்சிய சிஷ்யனாக இருக்க நான் விரும்ப வில்லை. நீங்களே தொடர்ந்து சொல் லுங்கள்" என்றான்.

"உலக கம்யூனிஸம் வேகமாக உருவா வதற்கு மாவ் சே துங் கூறிய வழிகளில் மிக முக்கியமான ஒரு தத்துவத்தை எத்தனை அழ காகச் சொல்லி விட்டீர்கள்! கம்யூனிஸம் அதிகாரத்தில் வேரூன்றாத நாடுகளில் எவ் னொருவன் தான் ஒரு கம்யூனிஸ்ட் என்பது வெளிப்படத் தோன்றாமல் நடந்து கொள் கிறானோ அவனே சிறந்த கம்யூனிஸ்ட்! இதோ பாருங்கள், சற்றுமுன் புத்திசாலித்தனமான உங்கள் கணக்கில் நான் என் வழிக்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் எனக்கு அதி லெல்லாம் திருப்தியோ பெருமையோ இல்லை. எங்க ளுக்கு அவர்களால் ஏற்படக் கூடிய அநுகூலமும் அவ்வளவுதான். ஆனால் உங்கள் நெஞ்சம் மிகவும் உறுதி யானது. பச்சோந்தி போல்



அடிக்கடி நிறம் மாறுவது. ஒரு விஷயத்தில் நம்பிக்கை விழுந்துவிட்டால் போதும், அப்புறம் அதில் மனம் நிலையாக நிற்கும். அப்படிப் பட்டவர்கள்தான் எங்களுக்குத் தேவை. உங்களை முதன் முதலில் சந்தித்துப் பேசியதுமே நான் என்ன நினைத்துக் கொண்டேன், தெரியுமா? 'இதோ, உன் திறமையை, தகுதியை உனக்கு நீயே பரிட்சித்துப் பார்த்துக் கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இவன் உள்ளத்தை வசப்படுத்தக் கூடிய சக்தி உனக்கு இருக்கிறதா என்று சோதித்துப் பார்' என்றுதான் எண்ணிக் கொண்டேன். வெற்றியும் பெற்று விட்டேன்!''

''அடடா! இறந்த காலத்தில் பேசறீங்களே! நீங்கள் நினைப்பது போல் நான் இன்னும் நிறம் மாறவில்லை. நீங்களாகவே என்மேலே உங்களுக்குப் பிடித்தமான வர்ணத்தைப் பூசிவிட்டு நான் நிறம் மாறிவிட்டதாக நினைத்துக் கொள்கிறீங்க.''

மிருணாளினி ஒரு பெருமூச்சுடன் எழுந்தாள். ''இன்று போய் நாளை வருகிறேன்!''

''செய்யுங்க, செய்யுங்க! என் மனசை நீங்க மாத்தறத்துக்கு முன்னாடி உங்க மனசை என் வழிக்கு மாற்றிடாம இருக்கணும்'' என்றான் தங்கப்பன் கிண்டலாக.

''நான் உங்க பேச்சுக்கு 'ஊ'!'' என்றாள் மிருணாளினி செல்லக் கோபத்துடன். அழகான தன் அதரங்களை மாதுளம் மொட்டுப் போல் குவித்து. ஓர் எறும்புக்குக் கூடத் தீங்கிழைக்கச் சக்தியற்றது போன்ற மென்மையான தன் பாதங்களால் தரையை



உதைப்பது போல நடந்து அந்த அறையை விட்டு வெளியேறினாள். தங்கப்பனின் சிரிப்பொலி அவளைப் பின்தொடர்ந்தது.

மாடிப் படிகள்வரை சென்றவள் சற்றுத் தயங்கி நின்று திரும்பிப் பார்த்தாள். தங்கப்பன் தன்னைப் பின்தொடர்ந்து வரவில்லை எனக் கண்டாள். ஓசைப்படுத்தாமல் அவனுடைய அறையை நோக்கித் திரும்பிப் போனாள்.

திறந்திருந்த கதவு வழியே மெல்ல எட்டிப் பார்த்தாள். அவன் அதுவரை உட்கார்ந்திருந்த பெஞ்சுக் கட்டிலில் ஒருபுறம் சுருட்டி வைக்கப்பட்டிருந்த படுக்கையில் சாய்ந்து மறுபுறம் கால் நீட்டியிருந்தான் அவன். இப்போது. அவன் முதுகு அவளைப் பார்க்க இருந்தது. கையில் அவள் சற்று முன்னால் அங்கு தரையில் போட்டுவிட்டுச் சென்ற புத்தகங்களுள் ஒன்றைப் பிரித்து வைத்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரம் அவள் அசையாது நின்று இந்தக் காட்சியை ஆர்வ ஒளி மின்னும் கண்களால் விழுங்கினாள். பிறகு இலேசாகத் தொண்டையைக் கனைத்தாள். தங்கப்பன் திரும்பிப் பார்க்கவில்லை. அசையக்கூட இல்லை. அவனுடைய இந்த லயிப்பு அவளை முகம் மலரச் செய்தது. புன்முறுவலைத் தருவித்தது. பூனைபோல் நடந்து அந்த வீட்டை விட்டு வெளியேறினாள் அவள்.

அத்தியாயம் 4

திடீர் விஜயம்

எந்த ஒரு காரியத்திலும் முழுமனத்துடன் ஈடுபடும் சுபாவம் கொண்டவன் தங்கப்பன். அதற்காகவே, ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னால் தொழிலகம் சம்பந்தமாகக் கவனிக்க வேண்டிய ஜோலிகள், வாங்க வேண்டிய பொருள்கள், எழுத வேண்டிய கடிதங்கள் என்ற ரீதியில் மனத்தில் வேறு ஏதேனும் எண்ணங்கள் இருக்குமேயானால் அவற்றை ஒரு தாளில் ஞாபகக் குறிப்பாக எழுதி வைத்து விட்டுப் பிறகு குறிப்பிட்ட ஒரு காரியத்தில் இறங்குவான். மனத்தையும் அறிவையும் அதில் ஒரு நிலைப்படுத்துவான். அந்த விதமாகத்தான் அவன் இப்போதும் தான் இது வரை தொட்டுக்கூடப் பார்த்தறியாத கம்யூனிஸ சித்தாந்த நூல்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கரைத்துக் குடித்துக் கொண்டிருந்தான். ஒரு புதிய சௌந்தரிய உலகினுள் சென்று உலவுவதற்கான நுழைவாயில் அவனெதிரே திறந்து கொண்டது போலிருந்தது. ஆனால் கூடவே இது ஒரு மாயத் தோற்றம் என்றும் அவன் உள் மனம் எச்சரித்தது. தான் படித்தவற்றை அவன் அப்படியே முழுமையாக ஒப்புக் கொண்டு விடவுமில்லை. படிப்பதற்கு ருசிகரமாகவும் சிந்தனைக்குத் தெளிவாகவும் எழுத்தளவில் குறைகளற்ற ஒரு லட்சிய சமுதாயமாகவும் திகழ்வது எளிதாயிருக்கலாம்; நடைமுறையில் எத்தனையோ சிக்கல்கள் உள்ளன என்பதை அவன் சிந்தித்துப் பாராமல் இருக்கவில்லை. உலகில், சுற்றுப்புறத்தில் கம்யூனிஸ நாடுகளில் நடப்பனவற்றை, பிற தேசங்களில் கம்யூனிஸம் பரவுகிற வேகத்தை அவன் பார்த்துக் கொண்டும் படித்தறிந்து கொண்டும்தான் இருந்தான். மாலைப் பொழுதில் அவனுக்கும் மிருணாளினிக்கும் இடையில் நீண்ட தர்க்கங்கள் நடக்கும். விட்டுக் கொடுக்காமலே பேசுவான் தங்கப்பன்; விடாப்பிடியாகப் போராடுவாள் மிருணாளினி. இப்படியே நாட்கள் சுவாரஸ்யமாகச் சென்று கொண்டிருந்தன.

அன்று காலை தங்கப்பன் உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையிலுள்ள ஒரு நிலையில் மிதந்து கொண்டிருந்த போது ''அத்தான், அத்தான்!'' என்ற குரல் ஒலித்தது. நீண்ட காலத்துக்குப் பிறகு செல்லம் தன் கனவுகளில் இடம் பெறுவது அவனுக்கு வியப்பையளித்தது. அவள் குரல்தானே இது? எதற்காக அவள் என்னை இப்படித் தோளைத் தொட்டு உலுக்கியும் உரக்க அழைத்தும் எழுப்புகிறாள்? 'என் வரையில் — என் வாழ்க்கை, எதிர்காலம் இவற்றைப் பொறுத்த வரையில் நீங்கள் இன்னும் ஆழ்ந்த உறக்கத்தில்தான் இருக்கிறீர்கள்' என்று அறிவுறுத்தித் தன்னை விழிப்படையச் செய்ய நினைக்கிறாளா?

''அத்தான்!'' என்று மீண்டும் அவள் கூப்பிடும் குரல் கேட்டது.

தங்கப்பன் கனவைக் கலைத்துக் கொள்வதற்காகக் கண் விழித்தான். தன் மீது நியாயமாகக் குறைப்பட்டுக் கொள்ள ஒருத்திக்கு இடமளித்தது அவனுக்கு என்னவோபோல் இருந்தது. உள்ளத்தில் நிலவும் குறுகுறுப்புக்கு முடிவு கட்ட நினைத்து எழுந்து அமர்ந்தான். கண்களுடன் முகத்தையும் கசக்கி விட்டுக் கொண்டான்.

''அத்தான்!''

தங்கப்பன் திடுக்கிட்டுத் துள்ளி எழுந்து திரும்பிப் பார்த்தான். ஆவி பறக்கும் காப்பியுடன் நின்று கொண்டிருந்தாள் செல்லம்.

''என்ன அத்தான், பயந்துட்டீங்களா?'' என்றாள் அவள். இலேசாக நாணம் எட்டிப் பார்த்த புன்னகையுடன் அழகுறவிளங்கினாள்.

''செல்லம்! நீயா? நீ எப்படி, எப்போ, இங்கே....?''

''ஏன் அத்தான், இத்தனை ஆச்சரியம் உங்களுக்கு?'' அவள் சிரித்தாள். ''வரக் கூடாதவளா வந்து விட்டேன்?''

''வருவதாகத் தகவலே இல்லையே? இப்படித் திடீருன்னு வந்து நின்னா ஆச்சரியமா இராதா?''

''இல்லையே! மாமிதானே எழுதியிருந்தாங்க? 'எனக்குத் தள்ளாமையா இருக்குது. உதவிக்கு யாருமில்லாமெ கஷ்டப்படறேன். முடிஞ்சா ஒரு நடை வந்துட்டுப் போ' என்று. அதனால்தான் புறப்பட்டு வந்தேன்'' என்றாள்

அவன் 'தனக்கும் சுயகௌரவம் உண்டு' என்பது போல.

"அம்மா கூடிதாக போடாட்டாலுமே நீ வந்து அவளுக்கு உதவியா இருக்கலாம். ஒண்ணும் குறைஞ்சு போயிடாது" என்றான் தங்கப்பன் குத்தலாக.

"அப்பா விடமாட்டாரே! இல்லாட்டி இதற்குள் ஆயிரம் தடவை வந்து போயிருப்பேனே!" என்றாள் அவள் ஆர்வத் துடிப்புடன். அவளுக்கென்று ஓர் அபிப்பிராயம் இருந்தால்தானே? அத்தானின் மனத் திருப்திக்காக எப்படியும் பேசத் தயாராக இருந்தாள் பேதை. தங்கப்பனின் போர்வையை மடித்து வைத்துத் தலையணையைத் தட்டி ஒழுங்கு செய்து படுக்கையைச் சுற்றி வைத்தாள். தான் பல் விளக்கி விட்டுத் திரும்பும் வரையில் அவள் தன் அறையிலேயே ஏதேதோ இல்லாத வேலைகளைச் செய்து கொண்டு காத்திருப்பதைக் கண்டான் தங்கப்பன்.

"ஏழ மாமி மாமா, யாருடைய பேச்சுக் குரலையும் காணோமே! காப்பி சாப்பிட்டாங்களா அவங்க?" என்று கேட்டான், தனக்கு அவள் கொண்டு வந்து வைத்திருந்த காப்பியை ருசி பார்த்தவாறே.

"நான் மட்டும்தான் வந்திருக்கிறேன், அத்தான்!" என்றாள் செல்லம். இதைச் சொல்லும் போது ஒரு விதப் பெருமிதமும் குறும்புத்தனமும் இழையோடின அவள் குரலில்.

"தனியாகவா?" கவலை தொனித்தது கேள்வியில். அதில் இன்பம் துய்த்தாள் அவள்.

"இல்லையே! மாருதி ஊருடைய மாப்பிள்ளையும் பெண் லட்சுமியும் சென்னைக்கு வந்திருந்தாங்க. அவங்க திரும்பறச்சே பின்னோடு தொத்திக்கிட்டேன் நான். லட்சுமி போட மச்சானுக்குக் கல்யாணம் நடந்துச்சே. உங்களைக்கூட நேரிலே வந்து அழைச்சதாகச் சொல்லிக்கிட்டாங்களே! நீங்கதான் சென்னைப் பக்கமே எட்டிப் பார்க்கிறதில்லை; இந்தக் கல்யாணத்துக்காவது வருவீங்கன்னு நினைச்சோம்."

"வரதாவது? வாழ்த்துச் செய்திகூட அனுப்பலியே. வர வர என்க்கு இதிலே யெல்லாம் சிரத்தை குறைஞ்சு போயிடுச்சு."

"கல்யாணத்துக்கு வர்றதுன்னு அதுமட்டும்தானா? அதைச் சாக்கிட்டு எங்களை.... எங்களை யெல்லாம் ஒரு தடவை எட்டிப் பார்த்து விட்டுத் திரும்பலாமில்லையா?"

"வந்திருக்கலாம்" என்றான் அவன் அசுவாரஸ்யமாக.

"இந்தப் பாழும் பேர்வழி தேர்தலிலே தோத்துப் போனதுதான் என்ன? அதுக்காக நீங்க இத்தனை தூரம் அலுத்துக்கிட்டுனுமா எல்லாத்துக்கும்?"

"தோல்வியா? எனக்கா? நான் தோற்றுப் போனதாக மட்டும் இன்னும் ஒரு தடவை சொல்லாதே செல்லம்!" என்று சீறினான் அவன். "எனக்குக் கெட்ட கோபம் வரும். தோற்றுப் போனது, சத்தியம், நேர்மை, ஒழுக்கம், ஜனநாயகம், இவைதான். முதல் தோல்வி — பெரிய தோல்வி, காந்தி தாத்தாவுக்கு — காந்தீயத்துக்கு. நான் தோற்கப் போவது இனி மேல்தான்" என்ற தங்கப்பன், "மிருணாளினியிடம்தான்" என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டான்.

குபுக்கென்று கோபம் கொண்டு அவன் அதட்டுவதைக் கண்டு பிரமித்துப் போனவளாய் நின்ற செல்லம் பிறகு சமாளித்துக் கொண்டு, "எனக்கு இதெல்லாம் ஒண்ணும் புரியாது, அத்தான். உங்களுக்கு மத்தியான சாப்பாட்டுக்கு என்ன சமையல் செய்யட்டும்? அதைச் சொல்லுங்க!" என்றாள்.

தங்கப்பனால் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பரிகாசமாக நகைத்தான்.

அடுத்த விநாடியே எப்படியோ கண்ணீர் வெள்ளமாகப் பெருக்கெடுத்தது செல்லத்திடம். "நான் என்ன பண்ணட்டும்? எனக்கு ஓர் இழவும் தெரியவில்லை. இந்த நிர்மூடத்தைக் கட்டிக்கிட வேண்டாம் என்றுதானே கல்யாணத்தை இப்படி ஒத்திப் போட்டுக்கிட்டே போறீங்க?" என்று விம்மலுக்கிடையே வினவினாள் அவள்.

"சே! இதென்ன தர்மசங்கடம்!" என்றான் தங்கப்பன். "நீ வந்திருக்கிறாய் என்று கண்டதுமே நினைத்தேன், நீ இப்படி ஏதாவது புலம்ப ஆரம்பித்து விடுவாயென்று." துண்டை உதறிப் போட்டுக் கொண்டு அவன் தடதட வென்று மாடிப் படிகளில் இறங்கிக் கிணற்றடிக்குப் போனான் குளிப்பதற்காக.

நீண்ட நேரத்துக்குச் செல்லத்தின் அழுகை ஓயவில்லை.

அன்று மாலை தொழிற்சாலையிலிருந்து வீடு திரும்புகையில் அவன் மிருணாளினியுடன் ஒரு காரசாரமான விவாதத்தை எதிர் நோக்கி வழக்கமான உற்சாகத்துடன் வந்து கொண்டிருந்தான். வீட்டை நெருங்கும் போதுதான் அவனுக்குச் செல்லத்தின் ஞாபகம் வந்தது; கூடவே அவளுக்குத் தாமரை கடிதம் எழுதி வரவழைத்ததன் தாத்பர்யமும் புரிந்தது. மிருணாளினியைத் தினமும் தான் சந்தித்துப் பேசிப் பழகுவது அவன் தாயாரின் உள்ளத்தைக் குடைந்திருக்க வேண்டும். அதனால்தான் செல்லத்தைத் தருவித்திருக்கிறாள்; தன்னிடம் ஒருவார்த்தை கூடச் சொல்லாமல்! 'சொன்னால் எங்கே நான் வேண்டாம் என்று விடப் போகிறேனோ என்ற பயமாயிருக்கும். ஆகா! வீட்டு அரசியலின் ராஜதந்திரமா இது!'

தனக்குள் சிரித்துக் கொண்ட தங்கப்பன், இப்போது செல்லம் வந்திருக்கிறாள் என்பதற்காக மிருணாளினியைத் தன் வீட்டுக்கு இனி அடிக்கடி வரவேண்டாம் என்று கூறித் தடுப்பதோ அல்லது அவளை வேறு இடத்தில் சந்திப்பதோ தவறு என்ற முடிவுக்கு உடனடியாக வந்து விட்டான். அப்படிச் செய்தால் அதுவே தான் இது வரை ஏதோ குற்றம் புரிந்து வந்ததாகவும் அதை ஒப்புக் கொள்வதாகவும்கூட ஆகும். வழக்கம் போலவே எல்லாம் நடக்க வேண்டியதுதான். மிருணாளினியை வரவேற்றுச் செல்லத்துக்கும் அவளை அறிமுகம் செய்து வைத்துவிட்டு, என்றும்போல் தான் அவளுடன் தன் அறையில் பேசிக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

இந்தத் தீர்மானத்துடனேயே வீட்டினுள் அடியெடுத்து வைத்தான் தங்கப்பன்.

(தொடரும்)

விளையாட்டும் பிரயாணமும்

புத்தகப் பார்வை

ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம்

பிரபல ஹாலிவுட் பட அதிபர் டட்டில் இங்கிலாந்துக்கு வந்திருந்தபோது ஆங்கிலேயர்களின் பண்பாட்டை அறிந்துகொள்ள விரும்பினார். உடனே அவரை ஹார்வி டே லார்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்துக்கு அழைத்துச் சென்றாராம். கிரிக்கெட் ஆங்கிலேயர்களுக்குத் தேசிய விளையாட்டு அல்லவா? அதனைப் பார்த்துவிட்டால் ஆங்கிலேயரின் பண்பாட்டை அவருக்குப் புரிய வைத்துவிடலாம் என்று ஹார்வி டே நினைத்தார். பட அதிபர் டட்டிலின் லார்ட்ஸ் கிரிக்கெட் மைதான விஜயத்தைப் பற்றி ரசமாகவும் ஹாஸ்யமாகவும் எழுதுகிறார் ஹார்வி டே, ஸ்போர்ட் அண்ட் பாஸ் டைம் வருஷாந்திர மலரிலே! பக்கத்துக்குப் பக்கம் விளையாட்டு மன்னர்களின் வண்ண ஓவியங்கள் இந்த மலருக்கு அழகூட்டுகின்றன. ஹாக்கி, கால் பந்து, கூடைப் பந்து, ஓட்டப் பந்தயங்கள் ஆகியவற்றைப் பற்றி ரசமான கட்டுரைகள் இம்மலரில் உள்ளன. விஜயநகரம் மகாராஜா தமிழ்நாட்டுக் கிரிக்கெட் ஆட்டக்காரர் வேங்கடராகவனின் விளையாட்டுத் திறமையை விளக்கி 'இந்த வருஷத் தலைசிறந்த இளைஞர்' என்ற விருதையும் அவருக்கு வழங்குகிறார். தமது கிரிக்கெட் நினைவு அலைகளைச் சுவைபடத் தருகிறார் திரு எஸ். கே. குருநாதன். 1953ல் இங்கிலாந்தில் வெம்ப்ளி ஸ்டேடியத்தில் திரு ஆட்லியைச் சந்தித்தபோது, திரு குருநாதன் சென்னையைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து ''ராஜாஜியின் தலைமையில் உள்ளதும் அறிவாளிகள் மிகுந்ததுமான அந்த மாகாணத்திலிருந்தா?'' என்று வியந்தாராம் ஆட்லி. இந்த மலரில் விளையாட்டுக் கலை பற்றிய கட்டுரைகளோடு வெள்ளித்திரை பற்றிய கட்டுரைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

பிரசுரம்: ஸ்போர்ட் அண்ட் பாஸ் டைம், 'ஹிந்து' மவுண்ட் ரோட், சென்னை — 2; விலை ரூ. 2.50

சாவித்திரி

பாரதப் பெண்களின் தனிப் பெரும் பண்பான பதிவிரதா தருமத்தின் சிகரத்தைச் சாவித்திரியின் வரலாற்றில் காண்கிறோம். மாண்ட கணவனுக்கு மீண்டும் உயிரூட்டிய அக் கற்பரசியின் கதை நம் நாவுக்கே ஓர் அணிகலன்.

வியாஸ பாரதத்தினிடை வரும் இவ்வற்புதக் காதையை நல்லாப்பிள்ளையின் தமிழ்ப் பாரதத்திலும் சுருக்கமாகக் காண்கிறோம். இவற்றின் மீது நூலாசிரியர் திருப்புகழ் மணி அவர்கள் தமது 'சாவித்திரி' நூலை அற்புதமாக நிர்மாணித்திருக்கிறார்.

நூலாசிரியர் அவர்கள் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் சகோதரர் என்பதை அவரது பக்தி, புலமை, சநாதன தருமத்தில் உள்ள சிரத்தை, சொல் நயம், இசை அறிவு, கதை சொல்லும் உத்தி, இடையிடையே தத்துவங்களை விளக்கும் பாங்கு இவை யாவற்றிலும் நுட்பமாகக் கண்டு மகிழ்கிறோம்.

இந்நூலைப் புத்தகமாக எண்ணிப் படிக்காமல், ஆசிரியர் பிரவசனம் நிகழ்த்துவதாகக் கருதிப் படித்தால் அதிகமாக ரசிக்கலாம். சாவித்திரியை ஒரு தமிழ் மகளாகவே ஆக்கி அவளது தமிழறிவை ஆங்காங்கே ஆசிரியர் நிலைநாட்டுவது தவிர, மற்றபடி பிராசீன மரபுக்கு முற்றிலும் உகந்த முறையிலேயே சரிதம் அமைந்துள்ளது. முக்கியமாக இயமனைக் கொடுங்கோலனாக வருணியாமல், தரும ராஜன் என்ற பெயருக்கு ஏற்றபடி அறம் சார்ந்த அன்புத் தேவதையாகக் காட்டியிருப்பது பாராட்டத் தக்கது.

பாரதத்தின் விசேஷப் பண்புகள் இன்னதென்றே அறியாத இளம் தலைமுறையினர்— முக்கியமாகப் பெண்மணிகள் — அவசியம் படித்துப் பயன்பெற வேண்டிய நூல் — 'சாவித்திரி'.

வெளியிட்டோர்: திருப்புகழ் மணி, காங்கேயநல்லூர் போஸ்ட், காட்பாடி, வடார்க்காடு மாவட்டம்; விலை ரூ. 3-00

Hindustani for the Tourist

வெளிநாட்டிலிருந்து வரும் பிரயாணிகள் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்றால், இந்திய மொழிகளில் ஒன்றை ஓரளவாவது கற்றால், பயணம் சுலபமாயிருக்கும் என்பதற்காக இயற்றப்பட்ட நூல் இது.

பயணிகள் தங்களுக்குத் தேவையான விவரங்களை அறிவதற்கான ஆங்கில வாக்கியங்களுக்குச் சரியான ஹிந்துஸ்தானி வாக்கியங்களைக் கொடுக்க முயன்றிருக்கிறார்கள். ஹிந்துஸ்தானியில் ஆங்கிலச் சொற்களுக்கேற்ற சொற்பெருக்கம் இல்லை என்பதை இந்த நூல் நன்றாக எடுத்து உணர்த்துகிறது. ஹிந்துஸ்தானி மொழிபெயர்ப்பு வாக்கியங்களில் பல இடங்களில் இலக்கண வழுக்கள் காணப்படுகின்றன. ஓரளவு ஹிந்துஸ்தானியை நன்கு பயின்றவர்கள் இதனை எந்த முறையில் எடுத்துக் கொள்ளுவார்கள் என்று யோசித்தால் இதைத் தவிர்க்க வேண்டிய அவசியம் புலனாகும்.

அடுத்தபடியாக இந்த நூலைத் தயாரித்தவர்கள் இன்னுமொரு விஷயத்திலும் கவனம் செலுத்தவில்லை. இந்த நூலின் உதவி கொண்டு அயல்நாட்டவர்கள் தங்கள் கருத்தை ஓரளவு ஹிந்துஸ்தானியில் தெரிவிக்க இயலுமே தவிர, அவர்களுக்குக் கிடைக்கும் விடைகள் எத்தகையனவாக இருக்கும் என்பதை அறிய இயலாது.

ஆயினும் கைக்கு அடக்கமாக நேர்த்தியான முறையில் பல படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கும் இந்த நூலை 'புஸ்தகம் ஹஸ்த பூஷணம்' என்னும் முதுமொழியைப் பின்பற்றி வாங்கி வைத்துக்கொள்ளத் தோன்றும்.

வெளியிட்டோர்: என். ஜே. ஹாமில்டன் பப்ளிகேஷன்ஸ், இ. ராயல் பாம்பே யாட் கிளப், பம்பாய், விலை: ரூ. 3.75.



புதுக் குழந்தை

• கஸ்தூரி •

"லெப்ட், ரைட், லெப்ட்!"

"பொத், பொத், பொத்!"

"லெப்ட், ரைட், லெப்ட்!"

"பொத், பொத், பொத்!"

"ரைட் அபௌட் டேர்ன்."

"மார்ச்!"

ஃ ஃ ஃ

"என்னாலே முடியல்லேடா, மூச்சு வாங்குகிறது!" என்று கலியாணி சொன்னாள்.

"அப்படியானால் போதும். காலடி எடுத்து வைக்கும்போது பொத், பொத் என்று சத்தம் கேட்கிறது. பூட்ஸ் போட்டுக் கொண்டால் டக், டக் என்று சப்தம் கேட்கும். அதுதான் காதுக்கு இனிமையாயிருக்கும். ஒன்று வாங்கிக்கொண்டு வருகிறேன், அம்மா!" என்றான் மோகன்.

"வெறுங் காலோட நடக்கிறதே காலை வலிக்கிறதே!"

"என்னம்மா சேர்ந்தாற்போல் மூன்று தரங்கூட அடி எடுத்து வைக்கவில்லை. வலிக்கிற தென்கிறாயே. தினம் ஒரு ஐந்து நிமிஷம் இதுமாதிரி செய்து கொண்டு வா. உடம்பு பலமாகும். கெட்டிப்படும். கொஞ்சம் நடந்தால் காலை வலிக்கிற தென்கிறாயே. அந்த வலியெல்லாம் ஓடிப் போய்விடும். இப்படிக் கஷ்டமாயிருந்தால் சுலபமாக ஒன்று சொல்கிறேன். 'கூஸ் ஸ்டெப்' என்று கேள்விப்பட்டிருக்கிறாயோ?"

"போடா பைத்தியம்! எனக்கு இதெல்லாம் எதற்கடா! நாளைக்கு உனக்குப் பெண்டாட்டி வந்தால் அந்தப் பெண்ணுக்குச் சொல்லிக் கொடு!"

"கட்டாயம் சொல்லிக் கொடுக்கப் போகிறேன். அந்த 'கூஸ் ஸ்டெப்பை'ப் பற்றிச் சொல்கிறேன். அதற்கு 'வாத்து நடை' என்று அர்த்தம் வைத்துக் கொள்ளேன். ஹிட்லர் காலாட் படை சிப்பாய்கள் அந்த நடை போட்டுத்தான் பயிற்சி செய்வார்கள். அது ஒன்றும் பெரிய கஷ்டமில்லை" என்று மோகன் கூறி அது மாதிரி நடை போட்டுக் காண்பித்தான்.

"நடை போட்டுக் கொண்டு போய்க் கொண்டே இருக்க வேண்டுமென்றுகூட அவசியமில்லை. நின்ற இடத்திலேயே நின்று கொண்டும் செய்யலாம். சிலபேர்கள் ரயிலில் பிரயாணம் செய்யும்போதுகூட இந்தப் பயிற்சி செய்வது வழக்கம். எங்கே, நான் செய்தாற்போல் செய்பார்க்கலாம், அம்மா!"

"போடா!"

"நாலு தடவை செய்தால் போதும்!"

கல்யாணி 'கூஸ் ஸ்டெப்' செய்துகொண்டிருந்தபோது அறைக்கு வெளியே யாரோ கனைக்கும் சத்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். மோகனின் தந்தை பரசுராமன் நின்று கொண்டிருந்தார்.

"இவனைப் பாருங்கள். என்னை மிலிட்டரி டிரில் செய்யச் சொல்லிக் கொண்டிருக்கிறான்" என்று கலியாணி தன் கணவனிடம் வேடிக்கையாகப் புகார் செய்தாள்.

"அப்பா வெளியில் போய்விட்டார். அவர் இருந்திருந்தால் இரண்டு பேரையும் சேர்த்துச் செய்யச் சொல்லி யிருப்பேன். அதைப் போட்டோ கூட எடுத்திருப்பேன்" என்று மோகன் சிரித்துக் கொண்டே கூறினான்.

மோகன் அவன் பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. ஆறடி உயரம். அதற்கேற்ற பருமன். இராணுவப் பயிற்சியினால் அவன் உடல் உரம் பெற்றிருந்தது. மேலுதட்டில் சிறு மீசை. அவன் முகத்தில் வீரக் களையும் இளமையும் நிரம்பியிருந்தன. தங்கள் பிள்ளையைப் பார்த்துப் பெற்றோர், மகிழ்ச்சியும், பெருமையும் அடைந்தனர்.

மோகனுக்கு இராணுவப் பயிற்சி முடிந்து விட்டது. அவன் வேலை ஒப்புக் கொள்வதற்கு முன்னதாகத் தன் பெற்றோர்களைப் பார்த்து விட்டுப் போவதற்காக இரண்டு வாரம் லீவு எடுத்துக் கொண்டு வந்திருந்தான். அவன் வந்து இரண்டு தினங்களாகியிருக்கும்.

"என்ன சமையல் செய்திருக்கிறாய்?" என்று பரசுராமன் தமது மனைவியை விசாரித்தார்.

''காலி பிளவர் கூட்டு, பட்டாணிக் கறி, நூல்கோல் சாம்பார்; உருளைக்கிழங்கு வறு வல்'' என்றாள் அவர் மனைவி.

இந்த ஜாபிதாவைக் கேட்டதும் மோஹ னின் முகம் சிணுங்கிற்று. ''சரிதான் நான் இன்றைக்குப் பட்டினிதான்'' என்றான்.

''ஏன்?'' என்று தாயார் கேட்டாள்.

''பொழுது விடிந்தால் பொழுது போனால் இந்தக் கறிகாய்களின் முகத்தில்தான் விழித் துக்கொண்டு வந்திருக்கிறேன். இங்கே வீட்டி லாவது ஏதாவது புதிதாகச் சாப்பிடலா மென்றால்...''

''உனக்கு என்ன வேண்டும் சொல்லு'' என்றார் தந்தை.

''எது வேண்டுமானாலும் சொல்லு. இதோ பண்ணிவிடுகிறேன்'' என்றாள் கல்யாணி.

''இன்றைக்குச் சமைத்திருப்பதைப் பல்லைக் கடித்துக் கொண்டு சாப்பிட்டு விடுகிறேன். நாளையிலிருந்து நான் சொல்கிறதைப் பண் ணிப் போடு. அப்புறம் நீ மறந்து போய் விடுவாய். ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்து விடுகிறேன்'' என்று கூறி அப்படியே செய் தான் அவன்.

கல்யாணி அந்த ஜாபிதாவைச் சிரித்துக் கொண்டே படித்தாள்.

''மாங்கொட்டைக் குழம்பு
பறங்கிக்காய் தித்திப்புக் கூட்டு
மோர்க்களி
உருண்டைக் கொழுக்கட்டை
பொருள் விளங்காய் உருண்டை.''

''அதெல்லாம் அம்மாவுக்கு மறந்து போயிருக்கும். யாராவது பாட்டியைத் தேடிப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்து செய்யச் சொல்லணும்! ஆமாம், 'பொருள் விளங்காயுருண்டை' என்று எழுதியிருக்கிறாயே அது என்ன?'' என்று பரசுராமன் கேட்டார்.

''அதுதான் அப்பா! அரிசி, பருப்பு எல் லாம் போட்டுப் பண்ணுகிறது. கிரிக்கெட் பந்து மாதிரி இருக்கும். அதைக் கதவு இடுக்கிலே வைத்துக் கதவைச் சாத்தி உடைத்துத் தின்னவேணே, அது!'' என்று மோஹன் விவரமாகக் கூறினான்.

அவர்கள் இப்படித் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தபோது ''தந்தி'' என்று சப்தம் கேட்டது. மறுகணம் தந்திச் சேவகர் உள்ளே வந்து ''மிஸ்டர் மோஹனுக்குத் தந்தி வந்தி ருக்கிறது'' என்று கூறினார். மோஹன் தந்தி யைப் பெற்றுக்கொண்டு சேவகரை அனுப்பி விட்டு வந்து அதை உடைத்துப் பார்த்தான்.

''யுத்த நிலைமை. ஆறு மணி நேரத் துக்குள் புறப்படத் தயாராயிருக்கவும்.''

இந்தச் செய்தியைப் படித்தபோது மோஹன் ஒரு கணம் திகைப்புற்றவன் போல் காணப்பட்டான். பிறகு சிரித்துக் கொண்டு, ''அம்மா! ஜாபிதா ஒன்று கொடுத் தேனே அதற்கு லீவு கொடுத்துவிடு. நான் ஊருக்குப் போய்விட்டு வந்து பிறகு செய்து கொள்ளலாம்!'' என்றான்.

''ஏண்டா, அதெல்லாம் பண்ணுகிறது எனக்கு ஒன்றும் சிரமமில்லை!'' என்றாள் தாயார்.

பிள்ளை தம்மிடம் கொடுத்த தந்தியைப் பரசுராமன் வாங்கிப் படித்தார். ''பாகிஸ் தானத்துக்கும் நமக்கும் யுத்தம் ஆரம்பமாகி விட்டதாம். ஆறு மணி நேரத்துக்குள் புறப் படத் தயாராக இருக்கச் சொல்லித் தந்தி வந்திருக்கிறது'' என்று அவர் கல்யாணி யிடம் கூறினார். இதைக் கேட்டு அவள் ஒன்றும் சொல்லாமல் சிறிது திகைப்புற்றிருந்தாள். ''இப்போதானே வந்தான். இரண்டு நாட்கள் கூட ஆகவில்லையே! அதற்குள்ளேயா புறப் படணும்?'' என்று கேட்டாள்.

''யுத்தம் என்றால் நமக்காகக் காத்துக் கொண்டிருக்குமா? சாவகாசமாகப் போக முடியுமா?'' என்றான் பிள்ளை.

''நீ போகிற இடத்தில் குண்டெல்லாம் விழுமோல்லோ?'' என்று தாயார் கேட்டாள்.

''பின்னே, மலர் மாரி பொழியுமா?'' என்று மோஹன் பரிகசித்தான்.

''நீ வேடிக்கையாகப் பேசுகிறாய். எனக்கு நினைத்தாலே கதி கலங்குகிறது. நேருக்கு நேரே பீரங்கியாலே சுடுவார்கள். விமானத் திலே இருந்து குண்டு போடுவார்கள் இல் லையா? ஒன்று உன்மேல் விழுந்தால்; என் கண்ணே...'' என்று கூறியவண்ணம் மயக்க மாய் விழுந்தாள்.

கணவனும், பிள்ளையுமாக அவளைத் தூக்கிக்கொண்டு போய்ப் படுக்கையில் படுக்க வைத்தார்கள். முகத்தில் தண்ணீர் தெளித் தார்கள். கால் மணி நேரமாகியும் அவள் கண்கள் திறக்கவில்லை.

மோஹன் தவியாய்த் தவித்தான். மணியோ ஓடிக் கொண்டிருந்தது. தானோ கட்டாயம் போயாக வேண்டும். ''என் அம்மாவுக்கு உடம்பு சரியாயில்லை. அதனால் வரமுடியவில்லை'' என்று சொல்வதற்கில்லை. அவன் அப்படிச் 'சாக்கு' சொல்லக் கூடிய சுபாவமுள்ளவனுமல்ல. அவன் உடலும் எண் ணமும் யுத்த களத்துக்குப் போகத் துடித் துக்கொண்டிருந்தன.

அவன் தன் தாயின் பக்கத்தில் கீழே மண்டியிட்டு உட்கார்ந்து, அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''அம்மா! கண்ணைத் திற. மோஹனைப் பாரு!'' என்றான்.

அவள் கொஞ்சம் அசைந்து கொடுத்தாள்.

''ஏன், அம்மா! நீதானே என்னை இராணு வத்தில் சேரச் சொன்னாய்? இராணுவ உடை உனக்கு அழகாக இருக்கும்; நீ அதைப் போட்டுக் கொண்டு 'டக் டக்' என்று நடக் கிறதைப் பார்க்கணும் என்று சொல்வாயே'' என்றான்.

அவன் கூறியதைக் காதில் வாங்கிக் கொண் டவள் போல் அவள் கண்களைத் திறந்தாள்.

''கல்யாணி! கல்யாணி!'' என்று பரசு ராமன் கூப்பிட்டார்.

''ஊம்!'' என்று அவள் கேட்டு அவரைப் பார்த்தாள்.

''நீ தைரியசாலி யாயிற்றே. பிள்ளை யுத் தத்துக்குப் போவதைப் பற்றிப் பெருமைப் படவல்லவா வேண்டும்? எழுந்திரு. மனசு கலங்கச் செய்யாதே'' என்றார்.

கல்யாணி கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்திருக்க முயன்றாள். கணவனும் பிள்ளை யும் அவளை உட்கார வைத்தனர்.

''என்ன அம்மா, இது?'' என்றான் மோஹன்.



வயது ஆக ஆக உடல் கனம் கூடாது

உங்களுக்கு நாற்பது வயதுதானே இருக்கும். ஆனால் பார்ப்பவர்கள் அதற்கும் மேலாகத்தானே மதிப்பிடுகிறார்கள்? உங்களுக்கும் வயதுக்கு மீறிய களைப்பு மேலிடுகின்றதல்லவா?

உங்களுடைய உடல் கனம் சமீபத்தில் அதிகரித்து விட்டதுதான் இதற்குக் காரணம். எடையை எப்படிக் குறைப்பது என்று கவலைப்பட வேண்டாம். அபாயமற்ற முறையில் எடையைக் குறைத்து ஆரோக்கியமுடன் திகழ லிமிகால் அருந்துங்கள்.

போஷாக்குள்ள பரிபூர்ண பதிலுணவு

லிமிகால் உடலுக்கு அத்தியாவசியமான போஷாக்குச் சத்துக்கள் — கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்துக்கள், புரோட்டீன்கள், விட்டமின்கள், மினரல்கள்—சரியான அளவில் சாஸ்திரிய முறையில் கொண்டது. லிமிகால் பசியைச் சமனம் செய்து, எடையைக் குறைத்து, ஆரோக்கியமாக வாழ வழிகாட்டும் மரக்கறி உணவு. ஒரு வேளை அளவு லிமிகால் (4 மேசைக்கரண்டி பவுடர் அல்லது 6 பிஸ்கட்டுகள்) ஒரு பரிபூர்ண பதிலுணவு; ஆனால் குறைந்த காலோரிகள் கொண்டது.

சுறுசுறுப்புடன் சுகமாய் வாழுங்கள்

உங்கள் எடை அளவுக்கு அதிகமாய் இருந்தால் (உங்கள் எடை என்ன என்று சோதித்துப் பாருங்கள்) உணவுக்குப் பதிலாக லிமிகால் மட்டுமே அருந்தி விரைவில் எடையைக் குறையுங்கள்—இந்த முறையில் ஒரே வாரத்தில் 3 லிருந்து 4 பவுண்டுகள் வரை குறைக்கலாம்! உங்கள் தற்போதைய எடை சரியான அளவிலிருந்து ஆனால் இனிமேலும் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள விரும்பினால் தினம் ஒரு வேளை மட்டுமே லிமிகால் அருந்தி உடல் கனம் ஏறாமல் ஆரோக்கியமுடன் திகழலாம்.

லிமிகால் பவுடர் சாக்லேட், வாழைப்பழம், ஆரஞ்சு ஆகிய மூன்று இன்சுவைகளில், 225 கிராம்கள் மற்றும் 1.6 கிலோகிராம் ஆகிய இரு சைஸ் டின்களில் கிடைக்கிறது. லிமிகால் பிஸ்கட்டுகள் 27 கொண்ட டின்னில் கிடைக்கின்றன.

எடை குறைந்து எடுப்பாய் விளங்க லிமிகால்—போஷாக்குள்ள பரிபூர்ண பதிலுணவு

ஸாராபாய் கெமிகல்ஸ், P.B 1688, பம்பாய்-1



Shilpi-SC-19 TAM

''ஒன்றுமில்லேயடா! நீ யுத்தத்துக்கு உடனே கிளம்ப வேண்டுமென்று சொல்லத்தான் வாயெடுத்தேன்'' என்றான்.

''அப்படிச் சொல்லு, அம்மா! மோஹன் அம்மாவா, கம்மாவா!'' என்று அவன் பெருமையுடன் கூறினான்.

''வாயெடுத்தாய். பிறகு ஏன் மயக்கம் போட்டு விழுந்தாய்?'' என்று பரகராமன் கேட்டார்.

''ஒன்றுமில்லே. குழந்தை ஒரு ஜாபிதா கொடுத்தானே அதன்படி ஒண்ணும் பண்ணிப் போடவில்லேயே என்கிறது....'' கணவனும், மனைவியும் சிரித்தார்கள்.

''மோஹன்! அதில்லேயடா விஷயம். அம்மாவுக்கு நீ சண்டைக்குப் போகிறதைப் பற்றித் துளிக்கூடப் பயமே இல்லே. ஆனால்....ஆனால்....'' என்று இழுத்தார் பரகராமன்.

''பின்னே என்ன அப்பா?'' என்று மோஹன் கேட்டான். தந்தை ஏதோ கேலியாகக் கூறப் போகிறார், அதைக் கேட்டுத் தாயார் சிரிக்கப் போகிறாள் என்று நம்பிக்கை அவனுக்கு.

''அவனுக்கு இந்த உருண்டைக் கொழுக்கட்டையும், பொருள் விளங்காய் உருண்டையும் எப்படிப் பண்ணுகிறது என்ற ஏக்கம். அதுதான்டா!'' என்றார்.

இதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள்.

''தந்தி வந்து அரை மணி நேரமாகியிருக்கும்போலிருக்கிறதே!'' என்று கூறிக் கொண்டே கல்யாணி படுக்கையை விட்டு எழுந்து நின்றாள்.

''அப்பா! அம்மா இன்றைக்குக் காலையிலேயே என்ன சொன்னாள் தெரியுமா? 'பரம வீரச் சக்கரம்' என்ற வார்த்தையைப் பத்திரிகையில் பார்த்துவிட்டு 'அது என்ன சக்கரம்?'' என்று கேட்டாள். அப்புறம் விஷயத்தைச் சொன்னேன். யுத்தத்தில் மிகவும் தீரமாகச் சண்டை போட்டு வெற்றிகரமாகப் பெரிதாக ஏதாவது சாதித்தால் அந்தப் பட்டம் கொடுப்பார்கள் என்றேன். அதைக் கேட்டுவிட்டு அம்மா என்ன சொன்னாள் தெரியுமா?'' என்றான் மோஹன்.

''அதில் ஒரு டஜன் வாங்கிக்கொண்டு வரச் சொல்லியிருப்பாள்!'' என்றார் பரகராமன்.

''இல்லே. கல்யாண அழைப்புக் கடிதத்திலே அந்தப் பட்டத்தை என் பெயரோடு போடணுமாம்!'' என்றான்.

''ஆமாம், அப்படித்தான் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன்'' என்று கல்யாணி கூறினாள். பிறகு ''போய் உன் காரியத்தைப் பார், சாமான்களை யெல்லாம் எடுத்து வைத்துக் கொள்'' என்றாள்.

அப்போது வாசற்பக்கம் எட்டிப் பார்த்த அவன் ''அதோ ஒரு பெண் என். வி. வி. டிரஸ் போட்டுக் கொண்டு போகிறது பார். பெண்களே அப்படித் துணிந்திருக்கிற போது உனக்கென்னடா?'' என்று கல்யாணி கூறிவிட்டுச் சென்றாள்.



வாலிபன்: ஏம்பா! இந்த இடத்திலே என் ஸ்கூட்டரும் அது மேலே கைக்குட்டையையும் வச்சிருந்தேன். இப்போ பார்த்தா ஸ்கூட்டரைக் காணோம், கைக்குட்டைதான் இருக்கு.

கிராமத்தான்: கைக்குட்டையை நல்லா உதறிப் பாருங்க சாமி!

ஆறு மணி நேரத்துக்கு மேலேயே ஆகி விட்டது. மோஹன் புறப்படத் தயாராயிருந்தான். வாசலில் இராணுவ 'வான்' வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

மோஹன் பெற்றோர்களிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

அப்போது கல்யாணி ''மறந்துவிட்டேன்'' என்று கூறி அடுப்பங்கரைப் பக்கம் ஓடிப் போய்விட்டுத் திரும்பி ஓடி வந்தாள்.

''வாயைத் திற!'' என்று பிள்ளையிடம் சொன்னாள். அவன் வாயைத் திறந்தபோது கூழ் மாதிரி இருந்ததைச் சிறிது அவன் வாயில் போட்டாள்.

''என்னது?'' என்றார் பரகராமன்.

''மோர்க் களி!'' என்றாள் தாயார்.

''பைத்தியக்கார அம்மா!'' என்று மோஹன் மகிழ்ச்சியுடன் கூறிவிட்டுக் கிளம்பினான். இராணுவ வண்டி நகர்ந்தது.

மோஹனது பெற்றோர்களிருவரும் வண்டி கண்களுக்கு மறையும்வரை நின்றுகொண்டிருந்துவிட்டுப் பிறகு உள்ளே சென்றனர்.

கல்யாணி பெருமை ததும்பத் தன் பிள்ளையைப் போல் வீறு நடை போட்டு நடந்து சென்றாள்.

பரகராமனோ தமது கால்கள் தள்ளாட நடந்து சென்றார். வீட்டுக்குள் சென்றதும் அவர் 'ஹோ' என்று அழுதார்; விசும்பி விசும்பி அழுதார்.

''நீங்களா இப்படிப் புலம்புகிறீர்கள்? நன்றாயிருக்கிறது. எனக்கு அத்தனை தைரியம் சொன்னீர்களே!'' என்று கல்யாணி அன்புடன் கடிந்தாள்.

''உனக்குச் சொன்னது சரிதான். ஆனால் அவன் நம்மை விட்டுப் பிரியும்போது என்னால் தாங்க முடியவில்லே'' என்றார் பரகராமன்.

கல்யாணி தன் புடவை முந்தானையால் அவர் கண்களைத் துடைத்து விட்டாள். தான் கீழே கால்களை மடித்துக்கொண்டு உட்கார்ந்தாள். அவரை இழுத்து அவர் தலையைத் தன் மடியில் வைத்துக் கொண்டாள். ''குழந்தையை விட்டுப் பிரிந்து...'' என்று அவர் மறுபடியும் பல்லவி பாட ஆரம்பித்தார்.

''குழந்தையாவது, யார் குழந்தை? நீங்க இனி பரகராமன் இல்லே, தெரியுமோன்னோ!'' என்று சிரித்துக் கொண்டே அவர் தலைமயிரைத் தடவி விட்டுக் கொண்டு கேட்டாள்.

''பரகராமன் இப்போது யுத்தத்துக்குக் கிளம்பிப் போய்விட்டார். நீங்கள்தான் குழந்தை. என் குழந்தை!'' என்றாள்.

வட்ட மேஜை

★ சிக்கனம் தேவை
★ கடனுதவி
★ தர்மம் தோற்காது
★ இது தேவையா?

சமீபத்திய இந்திய-பாகிஸ்தான் போருக்குப் பின்பு உள்ள பொருளாதார நெருக்கடியைப் போக்க அரசாங்கம் பெரிய அளவிலான கடன்களைத் திரட்டவும், புதிய வரிகளை விதிக்கவும் தீவிரமாக முயற்சி செய்து வருகிறது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் நீதமான சில அம்சங்களுடன், அநீதமான, கொடூரமான அம்சங்களும் கலந்துள்ளன. கடந்த ஒரு மாத காலத்துக்குள்ளாக மேற்கண்ட கடன் வசூலிப்பு நடவடிக்கைகளில் மேலதிகாரிகள் எனப்படும் அரசாங்க ஊழியர்கள் விவசாயிகளிடத்திலும், சிறிய வர்த்தகர்களிடத்திலும் போலீஸ் அதிகாரிகளைப் போல் உருட்டல் மிரட்டல் நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறார்கள்.

மேலும் மேலும் புதிய வரிகள் விதித்தால் பிறகு விலைவாசிகள் ஏறுவதை எப்படிக் கட்டுப்படுத்துவது? புதிய வரிகள் விதித்துத்தான் நிதி வசதி தேட வேண்டுமென்பது முற்றிலும் சரியானதல்ல. விரயமாகும் திட்டச் செலவுகளைக் குறைத்தும் நிர்வாகச் செலவுகளில் சிக்கன முறைகளைக் கையாண்டும் பெரிய அளவில் நிதி வசதியைத் தேடலாம்.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதையே கருத்தாகக் கொண்டு புதிய வரிகள் விதித்து நிதி வசதி தேடுகிறார்களாம். புதிய கமிட்டிகள் அமைத்தும், கட்டிடங்கள் கட்டியும் அதிகாரிகள் தொகையைப் பெருக்கியும் விவசாயத்தை வளர்த்துவிட முடியுமா? படாடோபமான விளம்பரங்களும் போலியான புள்ளி விவரங்களுமே இதுவரை நடத்திய சாதனைகளாகும். பருவநிலையும், நீர்ப்பாசன வசதிகளும் மட்டுமே விவசாயத்தை வளர்க்குமே தவிர அரசாங்கத்தின் அதிகாரிகள் பட்டாளமும், ஆடம்பரச் செலவுகளும் வீண்தான் என்பதை இவ்வாண்டு தமிழக விவசாயம் நிரூபித்து விட்டது. உண்மை நிலையை உணர மறுத்தும், உணர்ந்ததை வெளியில் கூற மறுத்தும் நெருக்கடி நிலைமையை வைத்து மக்களை மேன்மேலும் கொடுமைப்படுத்தினால் மக்கள் சரியான நேரத்தில் தங்கள் பதிலைத் தெரிவிப்பார்கள்.

மாயூரம்.
20-10-65 — ஒரு தேசத் தொண்டன்

'அடியிற் கண்ட விதிகளின்படி தந்தையின் வருமானம் குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாக இருக்கும் மாணவர்கள் அரசினரால் அளிக்கப்படும் கடனுதவி (Loan Scholarships) மற்றும் உதவித் தொகை (Stipend) ஆகியவற்றைப் பெறத் தகுந்த பாரங்களைப் பூர்த்தி செய்து மனுச் செய்யலாம்'' என்ற அறிவிப்பு கல்லூரி திறந்து ஒரு மாத காலத்துக்குள் கல்லூரி அறிவிப்புப் பலகையில் தொங்கும். அதனைச் சுற்றிக் கடனுதவியைக் கொண்டு மேற்படிப்புகள் படித்து உயரலாம் என்றென்றும் மாணவ மணிகள் கூடி நிற்கும் காட்சியைச் சர்வ சாதாரணமாகக் காணலாம்.

அறிவிப்புப் பலகையில் அறிவிப்போடு அரசாங்கத்தின் கடமை முடிந்துவிடாது. அத்தொகைகளை அரசாங்கம் வருட இறுதியில் அளிப்பது சரியல்ல. மாணவர்கள் படிக்கும்போதே அதை அளிக்க வேண்டும். ''விதைக்கும் காலத்தில் விதைகளை விதைத்தால்தான் முளைக்கும் காலத்தில் பயிர் செழித்து வளரும்'' என்பதை அரசாங்கம் உணர்ந்து, கடனுதவி போன்ற உதவித் தொகைகளை மாணவர்களுக்குத் தாமதமின்றி அளிக்க முன் வரவேண்டும்.

சென்னை-20
20-10-65 — இ. ரா. சேதுராமன்

கல்கி 7-11-65 இதழில் 'ராஜாஜியின் கருத்துக்கள்' பகுதியில் ராஜாஜி அவர்கள் ''எனக்கு அறிவும், செல்வாக்கும், தீர்க்க தரிசனமும் — ஏன் தேச பக்தியும்கூட—இருப்பதாக மக்கள் ஒப்புக் கொள்கிறார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள். ''....ஏன் தேசபக்தியும்கூட....'' என்ற வார்த்தைகளைப் படித்த போது என் மனம் கலங்கி விட்டது. கண்கள் கண்ணீரால் நிரம்பி விட்டன. பாரத நாட்டுக்காக எத்தனையோ ஈடு இணையற்ற தியாகங்கள் புரிந்த தியாகச் செம்மல் ராஜாஜி அவர்களின் மனம், எவ்வளவு தூரம் புண்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. ராஜாஜி அவர்கள் அடிக்கடி கூறுவதுபோல் தர்மத்துக்கு என்றுமே தோல்வி இல்லை; அழிவும் இல்லை.

மதுரை
5-11-65 — சொ. நடராஜன்

அக்டோபர் 31ம் கல்கி இதழில் 'வட்ட மேஜை'ப் பகுதியில் 'நிதி பெற வழி' என்ற கடிதத்தைப் பார்த்தேன். இதோ மேலும் ஒன்று:

என்னுடைய எட்டு வயதுப் பையன் பி. வி. ராஜா, கோழிக்கோடு பெருமாள் கோவில் வி. பி. ஸ்கூலில் இரண்டாவது வகுப்புப் படிக்கிறான். யுத்த நிதிக்காக ஒரு ரூபாய் கேட்டு அனுப்பினார் ஆசிரியர். நான் என் சக்தியை அனுசரித்து இருபத்தைந்து பைசா (நான் ஏற்கனவே ஒரு ரூபாய் யுத்த நிதிக்காகக் கொடுத்திருக்கிறேன்) கொடுத்தனுப்பினேன். அதை வாங்கிக்கொள்ளாமல் திருப்பி அனுப்பி விட்டார்கள். போதாததற்கு மாணவர்களிடம் ரிஜிஸ்தரிலிருந்து பெயர் நீக்கம் செய்யப்படும் என்றும் பயமுறுத்துகிறார்கள். சிறுவர்கள் வீட்டில் வந்து அழுது விடுகிறார்கள்.

என் போன்றோரின் வயிற்றில் ஏன் மேலும் மேலும் இப்படி அடிக்கிறார்கள்?

கோழிக்கோடு
5-11-65 — எஸ். வாசுதேவன்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon